# ஸ்ரீமஹாலக்ஷ்மி

ஜூலை - 1937

மலர் - 1 இதழ் - 7

JL
ന211, N37
N37.1.7
155542

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

8 JUL 1937

பிரசுரிப்பவர்

டாக்டர் கே. என். கேசரி.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] ஜூலை 1937 [இதழ் 7

PRINTED AT THE LODHRA PRESS, EGMORE, MADRAS.

159742

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாரராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம் •

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனாவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதாரர்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்து விட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.

34





போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்

இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதராஸ், கல்கத்தா.




சிறந்த கெடியாரங்கள்! மலிவான விலை!!

நாங்கள் எல்லாவிதமான கைகெடியாரம், டைம்பீஸ்கள், பெரிய சுவர் கடியாரங்கள் நேரே தருவித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்று வருகிறோம். கவர்மெண்டுக்கும் சப்ளை செய்து வருகிறோம். ரோல்டுகோல்டு கை வளயல் எங்களிடம் கிடைக்கும். கெடியார சில்லரை சாமான்களும் கிடைக்கும்.

| | |
|---|---|
| நெப்போலியன் பெரியசைஸ் ரவுண்டு லீவர் கைவாச் | ரூ. 4 12 0 |
| நாக்டேவி லீவர் மீடியம் ரவுண்டுசைஸ் கைகெடியாரம் | ரூ. 5 12 0 |
| நாக்டேவி லீவர் சதுரசைஸ் கெடியாரம் | ரூ. 10 0 0 |

எங்களிடத்தில் எல்லாவிதமான கடியாரங்களும் கிடைக்கும். இன்றே எழுதுங்கள்.

ஸ்டார் வாட்ச் கம்பெனி, மூர்மார்கட், மதராஸ்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | துளசி பூஜை .... .... .... | 441 |
| 2. | தாய் பராமரிப்பு .... .... .... | 443 |
| 3. | ராணி துர்காவதி — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... | 446 |
| 4. | சங்கீதத்தின் பெருமை — டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் .... | 448 |
| 5. | குலாப்—குணசேகர் — ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி .... .... | 452 |
| 6. | ஆரஞ்சு — டாக்டர் குமரன் .... .... | 455 |
| 7. | மோட்டார் இரவல் — ஸ்ரீமதி எஸ். லக்ஷ்மி .... .... | 457 |
| 8. | அப்ளிகே வொர்க் — "ஸரோஜா" .... .... | 460 |
| 9. | விதியோ! மதியோ! — ஸ்ரீமதி சங்கரி .... .... | 463 |
| 10. | பண்டித ராமாபாய் — "கண்ணன்" .... .... | 465 |
| 11. | ஜீவஜந்துக்களின் பாஷைகள் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகியம்மாள் .... | 470 |
| 12. | பெண்ணுயர்வு — திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... .... | 474 |
| 13. | இந்திய மகத்துவம் — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... | 476 |
| 14. | வீட்டுத் தொழில்கள் — "கோன்" .... .... | 478 |
| 15. | நேப்பாளம் — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... | 481 |
| 16. | சாது துகாராம் — ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள் .... .... | 485 |
| 17. | மகளிர் விளையாட்டு — ஸ்ரீமதி ரங்கம்மாள் .... .... | 488 |
| 18. | குமாரி ஆர். கமலாபாய் — "சுகி" .... .... | 489 |
| 19. | இது சரியோ — திரு. ஸி. ஆர். சங்கரன், பி.ஏ. (ஆனர்ஸ்) .... | 492 |
| 20. | மசாலாதோசையும், பாதுஷாவும் — "ஸரோஜா" .... | 496 |
| 21. | பண்டரிபுரம் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... .... | 499 |
| 22. | செய்தித்திரட்டு .... .... .... | 502 |
| 23. | விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... | 504 |
| 24. | கதம்பம் .... .... .... | 506 |
| 25. | சினிமா குறிப்புகள் .... .... .... | 508 |
| 26. | ஆசிரியர் குறிப்புகள் .... .... .... | 509 |
| 27. | பஞ்சாங்கம் .... ... .... | 511 |
| 28. | பிரசவ அட்டவணை .... ... .... | 512 |


**மூவர்ணப்படங்கள்**


1. துளசி பூஜை
2. குமாரி. ஆர். கமலாபாய்





# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர்: மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மெண்ட்.
திருப்பதி: மிஸ்டர். அப்துல் அஸீஸ், நியூஸ் ஏஜண்ட்.
மெஸர்ஸ். ஓய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்செண்ட்.
சேலம்: எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.
பொள்ளாச்சி: திரு. கே. ஆறுமுகம், நியூஸ் ஏஜண்ட்.
மதனபள்ளி: என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட்.
திண்டிவனம்: திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.
கடலூர்: மெஸர்ஸ். கமலா அன் கோ., புதுப்பாளையம், நியூடவுன்.
வேலூர்: திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.
திருச்சிக்கோட்டை: திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.
மதுரை: திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.
திருநெல்வேலி டவுன்: திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.
தூத்துக்குடி: மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.
பீமாவரம்: திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.
நிடதவோல்: திரு. கே. வி. சென்ன கேசவய்யர், வியாபாரி.
ஹனுமகொண்டா: திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.
சென்னை: மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.
கொழும்பு: திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.
யாழ்ப்பாணம்: திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.
ரங்கூன்: திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.
கோலாலம்பூர்: திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புஸ்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.


இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
தபால் பெட்டி நெ. 752,
**எழும்பூர், : : சென்னை.**



# பிருந்தா மகிமை

பிருந்தை எனப்படும் துளசியைப் பூஜிப்போர் மாங்கல்ய பாக்கியம் நீடித்துச் சகல சௌபாக்கியங்களையும் அடைந்து இன்பமுறுவர். செல்வச் சிறுமிகள் நீராடிக் கோலமிட்டு துளபப் பிரதக்ஷிணம் செய்தால் நாரணன் அருள் கிடைக்கும். நேரிழையார் "கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தா"னாகிய கண்ணனின் கிருபையைப் பெறுவர். ஸ்ரீ ஆண்டாள் கடவுளையே கணவனாக அடைந்தாள்.



# துளசி பூஜை

அம்மா, நம்முடைய ஹிந்துக்களின் ஆசாரங்களை பார்த்தாயா? அவற்றில் சில விசித்திரமாகயிருக்கும். விபரீத திருஷ்டியோடு பார்த்தால் இவையெல்லாம் பயித்தியக்கார சேஷ்டைகள் போலிருக்கும். ஆனால் இந்தக் காரியங்களில் ஒரு பெரிய தத்துவம் மறைவாக யிருக்கின்றது. நம்முடைய பெரியோர்கள், முட்டாள்கள் அல்ல, திருகால ஞானிகள். எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்கிறது, எந்தமரத்தில் என்ன குணமிருக்கிறது என்பதை நன்கு அறிந்தவர்கள். அரசு, வேப்பமரம், துளசிச்செடி, முதலானவற்றை தேவதைகளாக பாவித்து அவர்கள் பூஜித்திருக்கிறார்கள். அதாவது இவைற்றை அபிவிர்த்தி செய்திருக்கின்றனர். வேம்பு, துளசி, இவ்விரண்டையும் குறித்து டாக்டர் கே. என். கேசரி அவர்கள் இரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா? அதைப்படித்துப் பார். மரத்திற்கு பூஜை என்ன என்ற சந்தேகம் பறந்துவிடும். காசு பெருதமனிதனை பணம் வந்துவிட்டால் நாம் தெய்வ துல்லியமாக பாவித்து ஸ்தோத்திரம் செய்கிறோம். எந்த மரத்தின் காற்று பட்ட மாத்திரம் விஷூசி, மசூசி போன்றபயங்கரமான வியாதிகள் ஓடுமோ, அப்படிப்பட்ட மரத்தை தெய்வமாக பாவித்து பூஜை செய்தல் தவறுகுமா? லோக க்ஷேமமே கடவுளுடைய உத்தேசம். நமக்கும் அந்த உத்தேசம் யிருந்தால் தான் நிஜமாக ஈசுவர பூஜை செய்தவர்கள் ஆவோம். அதுவே நம்முடைய க்ஷேமத்திற்கு வழி. மேற்சொன்ன விருக்ஷங்கள் எல்லாம் மருந்துகளுக்கு முற்றிலும் ஏற்றவை. அவற்றின் பாததீர்த்தமே சர்வரோகங்களையும் போக்கும். ஆரோக்யத்தைவிட புண்யபலமும், ரோகத்தை மிஞ்சினபாப பலமும் உண்டா? துளசி தீர்த்தத்தை க்ரமமாக உபயோகித்தால்

குஷ்டரோகம் கூட தீர்ந்துவிடும். ஆனால் நம்மவர்களுக்கு நம்பிக்கை போதாது. மரங்கள் எப்போதும் ஒரே தன்மை உடையவை. அவற்றின் பிரபாவம் ஒரு போதும் குறைவதில்லை. நாலு துளசி தளத்தை மென்று தின்றால் வேண்டுமென்றால் கூட அஜீரணம் வராது. அஸ்வத்த பிரதக்ஷணம் செய்தால் மலடிக்கும் குழந்தை பிறக்கும் மென்பது சாஸ்திரம் கண்ட உண்மை. அம்மரத்தின் நிழல் கர்ப்பாசயத்திற்கு அவ்வளவு நன்மையை செய்கிறது. ஆகவே உலகக்ஷேமத்திற்காக சிருஷ்டி செய்யப்பட்டவை யெல்லாம் பூஜிக்கத்தகுந்தவை. இவற்றுள் யெல்லாம் சர்வப்ரக்ருதியின் பிரதி பிம்பமான கிரஹலக்ஷ்மி மறைந்திருக்கிறாள்.

துளசி—துளபம்—ஆதியில் ஒரு ராக்ஷசனுடைய மனைவியாக இருந்ததாம். அதன் பெயர் பிருந்தை. பிருந்தை மீது ஸ்ரீமன் நாராயணன் அளவு கடந்த காதல் கொண்டு எப்படியும் அவளை அடைய விருப்பங்கொண்டார். ஆனால் அவளுடைய கணவனை அரக்கன் பகவத் விரோதியுமன்னியில் மஹா கொடூரமான குணமுடையவன். முடிவில் பகவான் அந்த ராக்ஷசனைக்கொன்று விடுவதென்று முடிவு செய்தார். அதன்படியே அவனுடன் சண்டை செய்து அவனை மாய்த்தார். ஆனால் பிருந்தா மகா பதிவிருதை. கணவன் போனபின் அவன் இஷ்டத்துக்கு விரோதமாக பகவானிடம் இருக்க அவள் விரும்பவில்லை. தன்னை அக்னியால் மாய்த்துக்கொண்டாள். ஸ்வாமி உடனே சென்று பிருந்தாவின் சாம்பலில் புரண்டு தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டாராம். உடலெல்லாம் அதைப் பூசிக்கொண்டாராம். பின்னர் அச்சாம்பலிலிருந்தே துளசிச்செடி உண்டாயிற்றாம். பிருந்தாவே துளசி ரூபத்தில் இருப்பதால்தான் பகவான் தன் அன்பைக் காட்ட துளபமாலையை சர்வகாலமும் தன் மார்பில் அணிந்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. 'தெய்வந் தொழாள் கொழுநனைத் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை' என்ற வள்ளுவர் வாக்குக்கு பிருந்தை ஓர் சான்று.

இக்காலத்தவர்கள் துளசி பூஜை யென்ன நான்சென்ஸ், என்பார்கள். ஆனால் யாருக்கு நஷ்டம் துளசியின் சக்தி குறைந்து விடுமா? பரம விஸ்வாசத்துடன் துளசியை பூஜை செய்கிறவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்களுடைய சித்த சுத்தியை மாற்றமுடியாது. துளசியின் பெருமை நன்றாகத் தெரியவேண்டுமானால் துளசி மஹாத்மியம் என்ற சிறு காவியத்தை பார். உண்மை விளங்கும்.





# தாய் பராமரிப்பு

நம் நாட்டில் தாய்மார்களுக்கு பிரசவ உதவி முதலிய வசதிகள் அதிகக் குறைவு என்பது பிரசித்தம். கர்ப்பம் தரித்த நாள் முதல் பிரசவித்து முடிந்து பல மாதங்கள் வரை தாய்மார்களை சர்வ ஜாக்கிரதையுடன் பாதுகாக்கவேண்டியது அத்தியாவசியம். அதிலும் நம் தேசத்தில் பால்ய விவாஹம் என்ற துர்பழக்கம் கையாளப்பட்டு வருவதால் இளம்பெண்கள் பன்னிரண்டு வயது பதின்மூன்று வயதில் கர்ப்பந்தரித்து விடுகிறார்கள். அது இயற்கைக்குப் பெரிதும் விரோதம். இத்தேசத்தில் பிரசவத்தினால் தாய்மார்கள் மடிவது போல் வேறு எந்த நாகரிக தேசத்திலும் கிடையாது. உலகத்திலேயே சிசு மரணம், பிரசவத்தால் ஏற்படும் மரணம் இரண்டிலும் நாம்தான் ரொம்பவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறோம்.

இங்கிலாந்து, வேல்ஸ் முதலிய நாடுகளின் பிரசவ மரண எண்ணிக்கையைப் போல் மூன்று அல்லது நான்கு மடங்கு நம்தேசத்தில் மரணம் சம்பவிக்கிறது. இம்மாகாணத்தில் சர்ஜன் ஜெனரலாக விருந்த (மாகாண வைத்திய இலாகா தலைவர்) சர் ஜான் மெகா என்பவர் மிகவும் குறைச்சலான ஒரு தணிக்கை எடுத்திருக்கிறார். அதன்படி நம்மாகாணத்தில் வருஷத்துக்கு இரண்டு லக்ஷம் தாய்மார்கள் பிரசவத்தால் மடிகிறார்கள் என்று சொல்லுகிறார். வைசூரி, ப்ளேக் என்ற இரு கொடிய வியாதிகளில் மக்கள் மடிவதற்குச் சமமாக பிரசவத்தால் நம் நாட்டுப்பெண்கள் மாய்கிறார்களென்றால் நிலைமை எவ்வளவு கேவலம் என்பதை நாம் அதிகம் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. அம்மை, ப்ளேக் கொடிய தொத்து வியாதிகள். அவைகள் சிசு, ஆண், பெண், வயோதிகர், வாலிபர் எல்லோரையும் ஒரு வருஷத்துக்கு இரு லக்ஷம் விழுங்குகிறது. ஆனால் பிரசவத்தால் பெண்பகுதி, அதிலும் இளவயது மங்கையரே இவ்வளவு அதிகமாகச் சாகிறார்களென்று நினைக்கும் போது நெஞ்சம் திடுக்கிடுகிறது. தாய்மார்களுக்குப் பிரசவம் ப்ளேக், வைசூரிகளைப்போல் கொடிய யமனாக தற்காலம் இருந்து வருகிறது. இந்த மரணங்கள் பொதுவாக 15 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட ஸ்திரீகளுக்கே சம்பவிக்கின்றன.

இதனின்றும் கர்ப்பம் தரித்த பெண்களுக்கு பராமரிப்பும், பாதுகாப்பும், போஷணையும், வைத்திய உதவியும் எவ்வளவு அதிகப்படுத்த வேண்டும் என்ற பிரச்சினை நமக்குப் புலப்படுகிறது. இது நாட்டின் நன்மைக்கு மிக அத்தியாவசியமானதொரு விஷயமாகும். பிரசவ மரணங்களைத் தடுப்பது எப்படி என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இக்கொடிய அரக்கனுக்கு இவ்வளவு பெண்மணிகளை எவ்வளவு காலம் நாம் பலி கொடுத்துக் கொண்டிருப்பது? கர்ப்பம் என்றால் நம் நாட்டுப் பெண்கள் கர்ப்பம் கலங்கும் நிலையில் இருக்கின்றார்களே! அது சரியா? அப்படி யமன் வாயிலிருந்து தப்பிய பெண்கள் அநேகரின் தேகாரோக்யம் அடியோடு கெட்டுப்போய் அவர்கள் குடும்பத்துக்கும் பெரும் கஷ்டம் விளை

வித்துக்கொண்டு, அதனால் குடும்பத்தில் நடைபெறும் பல்வித விவகாரங்களுக்குக் காரணர்களாகவும் ஆகிறார்கள்.

எனவே பால்ய விவாஹத்தைக் கூடிய வரையில் நிறுத்துவதைத் தவிர கர்ப்பம் தரித்த பெண்களுக்கு வைத்திய உதவி ஆரம்ப முதல் கடைசிவரை லகுவாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டியது சமூகத்தின் கடமை. குறிப்பாக சர்க்காரின் முக்கிய கடமையாகும்.

இந்த நிலை மாறவேண்டுமானால் ஏதோ ஒரு சில பிரதேசங்களில் ஒரு சில ஸ்தாபனங்களோ, நபர்களோ வைத்திய உதவி அளித்து விட்டால் போதாது. கர்ப்பம் தரித்தல் என்பது ஒரு பிரதேசத்துக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. எனவே பிரசவ உதவித் திட்டம் குக்கிராமம், கிராமம், சிறியநகர், ஜில்லாத் தலைநகர் முதலிய எல்லாவிடங்களிலும் உள்ள ஏழை, பணக்காரப் பெண்கள் எல்லோருக்கும் லகுவாகக் கிடைக்கும் முறையில் வகுக்கப்படவேண்டும். அப்படி அமைத்தால்தான் இப்பிரச்சினையை நாம் கையாளமுடியும். பிரசவ மரணக் கொடுமையைத் தடுக்கவே ஒரு தேசியத் திட்டம் வகுக்கவேண்டும். எல்லா வழிகளிலும், எல்லா இடங்களிலும் இதை ஒழிக்க வேண்டிய மார்க்கங்களைச் செய்தால்தான் இம்மரணம் குறையும்.

நம்மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில் சர்க்காரோ, இதர ஸ்தல ஸ்தாபனங்களோ, பொது ஸ்தாபனங்களோ ஒன்றும் செய்யவில்லை என்று நாம் கூறவில்லை. அவைகள் எவ்வளவோ செய்திருக்கின்றன; செய்தும் வருகின்றன. அதிலும் கடந்த 25 வருஷங்களுக்குள் அவைகள் இது சம்பந்தமாக புகழத்தக்க சிரத்தை எடுத்து வருகின்றன. நிலைமை எவ்வளவோ விருத்தியடைந்திருக்கின்றது என்பதை ஒத்துக் கொள்ளுகிறோம். இருந்தாலும் இப்பொழுது கொடுக்கப்படும் வைத்திய பிரசவ உதவிகள் கடலில் கரைத்த பெருங் காயத்துக்குச் சமமே. இன்னும் செய்ய வேண்டியது மிக அதிகமிருக்கின்றது.

இதைச் சிறந்த வழியில் செய்ய சர்க்கார், ஸ்தலஸ்தாபனங்கள், பொதுநல ஸ்தாபனங்கள், தனிப்பட்ட நபர்கள் எல்லோரும் ஒத்து உழைக்கவேண்டும். எல்லோருடைய சக்தியையும் முயற்சிகளையும் ஒரு முறையில் கூடி ஆலோசித்துச் செய்ய வேண்டும். டாக்டர்கள், மருத்துவச்சிகள், பிரசவநிபுணர்கள், பிரசவ ஆஸ்பத்திரிகள், ஆங்காங்குள்ள வைத்திய நிலையங்கள், சுகாதார ஸ்தலங்கள் எல்லாம் ஒத்து உழைத்து தங்கள் பிரதேசத்தில் கர்ப்பம் தரித்த ஒவ்வொரு ஸ்திரீயும் அவசியமான போஷணையும், வைத்திய பராமரிப்பும் அடையும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்ய, இவைகளைக் கவனிக்க ஒரு பிரதானஸ்தாபனம், அல்லது இலாகா இருக்கவேண்டும். அது இப்பொழுது இவ்வேலை செய்து வரும் பலஸ்தாபனங்களின் வேலையை ஒழுங்கு படுத்தவேண்டும். நாட்டில் எல்லா பாகங்களிலும் பிரசவ உதவி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். ஒரு தாலுகாவுக்கு ஒன்று, ஒரு ஜில்லாவுக்கு இத்தனை என்றில்லாமல் முக்கிய நகரங்களிலெல்லாம் மட்டும் நிர்மாணித்து விட்டால் பெரும்பான்மையான கிராமங்களின் கதி என்ன? ஒவ்வொரு கிராமத்திலும் பிரசவ ஆஸ்பத்திரி எங்கிருக்கிறது,





அதற்கு எப்படிப்போனால் சீக்கிரம் போகலாம் என்ற விஷயம் ஜனங்கள் தெரிந்திருக்கும்படி செய்யவேண்டும். இதனால் காலதாமதம், அலைச்சல் முதலியன நீங்கும். காலதாமதத்தினால் பலபெண்கள் உதவி அடைந்தும் மரணமடைய நேரிடுகிறது.

தாய் சம்ரக்ஷணையில் முக்கியமானது பிரசவமுன் உதவிநிலையங்கள் (Anti-natal clinics) நிர்மாணிப்பதே. இப்பொழுதும் பல நிலையங்கள் பல முனிசிபாலிட்டிகளில் இருந்து வருகின்றன. ஆனால் அவைகள் சரியானபடி வேலைசெய்ய வில்லை என்றே நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகள் போதிய அளவு செம்மையான முறையில் அமைக்கப்படவுமில்லை, நடத்தப்படவும் இல்லை. ஒவ்வொரு ஸ்தாபனமும் தன் பிரதேசத்திலுள்ள கர்ப்ப ஸ்திரீ ஒவ்வொருவளையும் கர்ப்பம் தரித்த நாள் முதல் கவனித்து வரவேண்டும். அப்போதைக்கப்போது தேவையான மருந்துகளைக் கொடுக்கவேண்டும். ஏதாவது சில்லரைக் கோளாறுகள் ஏற்பட்டால் அவைகளைச் சரிப்படுத்தவேண்டும். ரொம்பச் சிக்கலான கேஸ்கள் காலா காலத்தில் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்படவேண்டும். சிக்கலான கேஸ்களை கவனிக்க சில ஸ்தாபனங்கள் அங்கங்கே நிர்மாணிக்கப்பட்டு அதன் உதவியையடையும்படியான வசதிகள் செய்யப்படவேண்டும்.

தகுந்த பயிற்சி பெற்ற மருத்துவச்சிகள் வீடு வீடாகச் சென்று கர்ப்ப ஸ்திரீகளின் நிலையைக்கவனித்து பராமரிப்பு அளிக்க வேண்டியது அவசியம். ஸ்திரீ வைத்தியர்களும் அடிக்கடி அவர்களைப் பரிசோதனை செய்யவேண்டும். மருத்துவக் கல்வியை சிறந்த முறையில் தேசத்தின் சேவைக்குத் தகுந்த பெண்கள் கற்றுக்கொண்டு தம் சகோதரிகளுக்கு உதவி செய்யவேண்டும். இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் சர்க்காரே முக்கியமாக முன்வந்து எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து ஒரு முறைக்குக் கட்டுப்பட்டு உதவி அளிக்க வேண்டும். தனிப்பட்ட வைத்தியர்களும் சர்க்காருடன் முழுமனதுடன் ஒத்துழைத்து அனியாயமாக மடியும் நம் அருமைச் சகோதரிகளைக் காப்பாற்ற வேண்டிய முயற்சிகளைத் தேடவேண்டும். நம் தேசத்து ஸ்திரீகள் கர்ப்பம் தரித்து தங்கள் ஆரோக்கியத்தையும் காப்பாற்றிக் கொண்டு, திடகாத்திரமான குழந்தைகளைப் பெரும் அவஸ்தைப்படாமல் பிரசவித்து இன்புறும்படி செய்யவேண்டியது சர்க்கார், சமூகம் இருவருடைய முக்கிய கடமையாகும் என்று நாம் முன்னமேயே கூறியிருப்பதை மறுமுறையும் வற்புறுத்திக் கூறுகிறோம். இதர நாகரிக தேசங்களில் சர்க்கார்கள் குழந்தை பாதுகாப்பு, தாய்மார்கள் பராமரிப்பு முதலிய வற்றில் அபாரமான சிரத்தையும் கவனமும் காட்டிவருகிறார்கள் என்பது எல்லோரும் நன்கு அறிந்த விஷயம். நம் தாய்மார்கள் சௌக்கியமாக வாழ்ந்தார்களானால் நாமெல்லோரும் சந்தோஷமாக இருப்போம். நம் குழந்தைகளும் நாட்டு நன்மைக்கானவர்களாக வளர்ந்து முன்னடைவார்கள். சிசுமரணமும் குறையும். எனவே இப்பிரச்சினையை நன்கு உணர்ந்து கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கு எல்லோரும் தங்களாலான முயற்சிகள் செய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

# ராணி துர்காவதி

ஸ்ரீமதி எஸ். கமலா

“சிறந்து நின்ற சிந்தை யோடு
தேய நூறு வென்றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போதினும்
இறந்து மாண்பு தீர மிக்க
எழ்மை கொண்ட போழ்தினும்
அறந்தவிர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே”

என்று அன்னை பராசக்தி பாரதமாதாவைப்போற்றி பாரதியார் பாடியிருப்பதை நிரூபிக்க இந்திய சரித்திரத்தில் எண்ணற்ற அத்தாக்ஷிகள் இருக்கின்றன. தர்மத்தைக்காக்கவும், சுதந்திரத்தைக் காப்பாற்றவும் தங்கள் உயிரைத்திரணமாய் மதித்து உவந்து அர்ப்பணம் செய்த ஸ்த்ரீ ரத்னங்களும், புருஷ சிங்கங்களும் நம் பாரத தேசத்தில் எத்தனையோ பேர்கள் இருந்திருக்கிறார்கள். அறப்போரில் மடிவது உத்தம தர்மமாகவே நம் தேசத்தில் கருதப்பட்டு வந்திருக்கிறது. அன்னை பாரதியின் மார்பில் பிரகாசிக்கும் மணியாரத்தில் ராணி துர்காவதி ஓர் சிரோன்மணியாவள்.

பதினாறாம் நூற்றாண்டில் நர்மதா பீடபூமியில் ராணி துர்காவதி அரசு செலுத்தி வந்தாள். அவள் மிகுந்த வனப்பு வாய்ந்தவள்; தைர்ய லக்ஷ்மி. சாமர்த்தியமாகவும், வெகு திறமையாகவும் நிர்வாகம் நடத்தி வந்தாள். தன் பிரஜைகளின் க்ஷேமமே பிரதம லக்ஷியமாகக்கொண்டு ராஜரீகம் புரிந்துவந்தாள். யுத்தப் பயிற்சியிலும் மிகத்தேர்ச்சி பெற்றவள். வில், வாள், வேல், யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வித்தைகளை வெகு நன்கு பயின்றவள். வேட்டையாடுவதில் மஹாப்பிரியம்.

இவளது தந்தை சண்டேல் வம்சத்தைச்சார்ந்த சாலிவாஹனன். தன் புத்திரியை காண்ட்ராஜா தளபத்துக்கு மணம் செய்வித்தான். இவனது தந்தை அமனதாஸ் ஒரு பாபி. இவனும் பேருக்குத்தான் ராஜா. அவனும் நான்கு வயது குமாரன் வீரநாராயணனை விட்டு விண்ணுலகேகினான். ராஜ்ய பாரத்தை துர்காவதியே நேரில் ஏற்று நடத்தினாள். பெரும் படையை நிர்மாணித்து கார்ஹதங்க ராஜ்யத்தை ஸ்தாபித்தாள். அநேக முகாமிய சிற்றரசர்களை தானே ஜெயித்தாள். அவளுக்குக் கப்பங்கட்டும் பல சிற்றரசர்களிருந்தார்கள்.

துர்காவின் வீரதீரத்தையும், திறமையையும் கண்டு அக்பரின் சேனாபதி ஆஸப்கான் மனவருத்தம் அடைந்தான். பக்கத்து ராஜ்யங்களை ஜயித்த அவனுக்கு துர்காவின் தேசத்தைவிட இஷ்டமில்லை.

சக்கிரவர்த்தி அக்பர் ராணி துர்காவுக்கு ஒரு தங்கக்கரண்டியை அனுப்பினான். அதன் தாத்பர்யம் ஸ்திரீகள் சமையலுக்குத்தான் லாயக்கு, ராஜ்ய பாரத்துக்கு அல்ல வென்பதுதான். துர்கா சும்மா விட்டாளா? அக்பருக்கு பஞ்சடிக்கும் கட்டையை அனுப்பி “நீ பஞ்சு சுத்தி செய்யத்தான் லாயக்கு” என்று தெரிவித்தாள். முகலாய சக்கிரவர்த்தி மனம் எவ்வாறிருந்திருக்கும் என்று நான் சொல்லத்தேவையில்லை. இருந்தாலும் ஆஸப்கான் வெளிக்கு துர்காவுடன் நட்பாகவே இருந்துகொண்டு தக்கசமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.



திடீரென 1564ம் வருஷம் ஆஸப்கான் கர்கஹதங்கா ராஜ்யத்தின்மீது தன் படையைச் செலுத்தினான். துர்காவோ படையைக் கலைத்துவிட்டு சுமார் 500 போர் வீரர்களுடன் இருந்தாள். ஆகையால் துர்கா படை சேர்க்க வெண்ணிக் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டாள்.

5000 போர்வீரர்களைச் சேர்த்துக் கொண்டு நாட்டைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்த ஆஸப்கான் படையை எதிர்த்தாள். துர்கா ஒரு யானையின் மீதேறிக்கொண்டு தானும் போரில் கலந்து கொண்டு தன் வீரர்களையும் உற்சாகப் படுத்திவந்தாள். முதல் நாள் போர் ஒருவருக்கும் ஜயமாகாதபடி நின்று விட்டது.

மறுநாள் யுத்தம் வெகு மும்முரமாய் ஆரம்பித்தது. துர்காவே தலைமை வகித்து நடத்தினாள். போர்வீரர்கள் நெருங்கி ஒருவரோடொருவர் கைகலந்து சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். அச்சமயம் அவள் குமாரன் வீர நாராயணன் காயமடைந்து வீழ்ந்தான். உடனே தன் புதல்வனை சில துருப்புகளுடன் ஒரு பந்தோபஸ்தான இடத்தில் கொண்டு விட்டு விட்டு மறுபடியும் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தாள். எஞ்சி நின்ற சிறு படையுடன் வெகு தைர்யமாக யுத்தம் செய்தாள்.

எதிரியின் ஓர் கூரிய அம்பு ராணி துர்காவின் கண்ணில் பாய்ந்தது. கலங்கினாளா துர்கா? இல்லை. அவ்வம்பைப் பிடுங்கினாள். அதன் ஒரு பாகம் ஒடிந்து கண்ணிலேயே நின்று விட்டது. ரத்தம் கொட்டிற்று. ஆனால் துர்கா சற்றும் மனம் கலங்கினாளில்லை. ரஜபுத்திர ஸ்திரீ யுத்தத்தில் இறங்கிவிட்டால் புற முதுகு காட்டி ஓடுவாளா? மாட்டாள். அவள் யானை மாவுத்தன் தன் ராணியைப்பார்த்து “ரஜினியே! இனிச்சண்டை செய்து பயன் யாது? நான் தங்களைப் பத்திரமாய் நதியைக் கடந்து கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். தப்பித்துக் கொள்ளலாம்” என்று சொன்னான். ஆனால் துர்கா “நான் சாவேன்; பயந்து ஓட மாட்டேன்” என்று கூறிவிட்டாள்.

அச்சமயத்தில் வேறொரு அம்பு அவள் தொண்டையில் பாய்ந்தது. அதையும் சற்றும் சட்டை செய்யாமல் தன்கையாலேயே எடுத்து எறிந்தாள். ரத்தம் பீறிட்டுக் கொண்டு ஓடியது. மயங்கி விழுந்தாள்.

மறுபடியும் பிரக்ஞை வந்தபொழுது காண்ட்படை அநேகமாக முறியடிக்கப் பட்டிருந்தது. துர்காவுக்குத் தன் மக்கள் சுதந்திரம் இழக்கப் போகின்றார்களே என்ற எண்ணம் மனதை உருக்கியது. சுதந்திரம் போனபின் வாழ்வது மானக் கேடு என்று அவள் நினைத்தாள். சதையைத் துண்டு துண்டாக்கினும் தன் வீர சுதந்திரத்தை விற்று அடிமை வாழ்வில் அரை நிமிஷம்கூட வாழ்வதற்கு துர்கா இஷ்டப்படவில்லை.

உடனே தன் மந்திரியை ஒருவிதமான நோக்கத்துடன் பார்த்தாள். ஆனால் பிரதானிக்குக்கருத்துத் தெரிந்தபோதிலும் மனம் துணிய வில்லை. திகைத்துத் தத்தளித்தான். அதையறிந்த துர்கா மாவுத்தன் கையிலிருந்த ஒரு பிச்சுவாவைப் பிடுங்கி தன் மார்பில் ஓங்கிக் குத்திக் கொண்டு வீர சொர்க்கம் சென்றாள். உயிரோடு பகைவர் கையில் சிக்குவதிலும் சாவது மேலென்று வீர துர்கா நினைத்தாள். என்னே அவள் வீரம்! என்ன தேச பக்தி!! தியாகத்தீயில் ஜோதி மறைந்தது.

# சங்கீதத்தின் பெருமை

## டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

இளமையிலேயே குழந்தைகளுக்குச் சங்கீதத்தில் கவர்ச்சி ஏற்படுகின்றது. சங்கீதம் குழந்தைகளுடைய நிர்மலமான மனத்தை வசீகரிக்கின்றது. பசுக்களையும், பாம்புகளையும் சங்கீதம் வசப்படுத்துமென்று சொல்லுகிறார்கள். “ஆடிக்கறக்கும் மாட்டை ஆடிக் கறக்கவேண்டும்; பாடிக்கறக்கும் மாட்டை பாடிக்கறக்கவேண்டு” மென ஒரு பழமொழி. சில மாடுகள் எவ்வளவு துஷ்டத்தனம் செய்தாலும் பாடிக் கொண்டேயிருந்தால் சாதுவாக நின்று பால் கறப்பதற்குத் தடை செய்யாமல் இருக்கும். ஆனாய நாயனாரும் கண்ணபிரானும் பசுக்களைச் சங்கீதத்தால் வசப்படுத்தினார்கள். ஆனாய நாயனார் பசுபதியையும் வசமாக்கினார்.

கண்ணன் தன்னுடைய வேய்ங்குழற் கானத்தால் செய்த அற்புதமான செய்கைகளைப் புலவர்கள் பலர் மனமுருகி வர்ணித்திருக்கிறார்கள். பாகவதத்தில் கண்ணன் வேய்ங் குழலூதிய அத்தியாயமென்ற தனி அத்தியாயமொன்று இருக்கிறது. திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரென்பவர் “ஆக்குவித்தார் குழலால் அரங்கேசர்” என்று பாடுகிறார். பல்லாயிரக் கணக்காக மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்களை மாலைக் காலத்தில் ஒருங்கே வரச்செய்து வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குத் தன்னுடைய வேய்ங்குழற் கீதத்தை உபாயமாகக் கண்ணன் கொள்கின்றானாம். அவனுடைய வேணுகானத்தைக் கேட்ட மாடுகள் குவி ஒன்றுபட்டு அவனைச் சுற்றிக் கூடுகின்றன. அப்படியே அவற்றை ஊருக்கு ஓட்டிச் செல்கிறான்.

### அழகர் கலம்பகம்

அழகர் கலம்பகம் என்ற பிரபந்தத்தில் கண்ணன் வேய்ங்குழலூதிய சிறப்பை ஒரு கவிஞர் மிகமிக அழகாக வருணிக்கின்றார்.

“அவனுடைய குழலோசையினால் நீளத் திரிந்துழன்ற மேகம் தடைபட்டு அவ்வோசையின் குளிர்ச்சியினால் குறுந் துளிக்கின்றது. அப்பொழுது பந்தலிலிருந்து பன்னீர்த் துளிகள் துளிப்பது போன்ற காட்சி உண்டாகின்றது. பின்னும் கண்ணனது கானாம்ருதமானது இடையர்கள் பசுக்கள் தின்பதற்காக வெட்டிய மரங்களைத் தழைக்கச் செய்கின்றது. இடையர்கள் மரங்களை முழுவதும் அறும்படி வெட்டமாட்டார்கள். அப்படியே சாய்ந்து தொங்கும்படி வெட்டப் பட்ட கிளையிலுள்ள தழையை ஆடுகளும் மாடுகளும் தின்னும். அங்ஙனம் தின்றதனால் தழையற்று மொட்டையாக இருந்த கிளைகள் தழைத்து அலர்ந்து பழுத்து அப்பழங்களை விரும்புவோருக்குத் தாழ்ந்து உதவுகின்றன. புலிகளும் பாம்புகளும் தம்முடைய கொடுமையை மறந்து ஈடுபட்டுக் கிடக்கின்றன. கருங்கல் வெண்ணையைப்போல உருகி வழிகிறது. கன்றை நினைந்து ஓடிவந்த பசுக்களும் பசுக்களை நினைந்து ஓடி வந்த காளைகளும் தம் உணர்ச்சியை யிழந்து



வேணுகோபாலன்



வித்யோதயா பாடசாலைச் சிறுமிகள் புஷ்ப நடனமாடுகிறார்கள்.



வித்யோதயா பாடசாலைப் பெண்கள் சங்கீதம் பயிலும் காட்சி.



மெய்மறந்து நிற்கின்றன. இத்தகைய நிலையில் கண்ணன் மூன்று வகைக் கோணலோடு குழலூதுகின்றான். அம்மூவகை வளைவைத் திரிபங்கி யென்பர். இத்தகைய காட்சியை அப்புலவர்,

"குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந் துளி தூற்றிட ஆயர்

தறித்தமரம் அத்தனையும்
தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடும்புலிகள் அயர்ந்து சித்ர
காயமெனும் பெயர் விளக்கக்
கொடும்பணிகள் மாலையதாக்
குலரத்ன விளக்கேற்றக்
கருங்கற்றான் வெண்ணையெனக்
கரைந்துருக விரைந்தோடி
வருங்கற்றான் இமைப்பொழிய
மழவிடையங் கயர்ந்து நிற்ப
மிகவிளங்கோ வியரெழுத
தெங்கி யத்ரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர் மழலை
தொனித்தகுழல் இசைத்தோய்
கேள்"

வண்டிக் காளைகள் வண்டிக்காரர்கள் பாடும் தெம்மாங்கு ராகத்தில் ஈடுபட்டு எவ்வளவு பாரமாக இருந்தாலும் இழுத்துச் செல்கின்றன. குழந்தைகள் தம் தாயார் பாடும் தாலாட்டுப் பாட்டில் மதி மயங்கித் தம் சண்டித்தனத்தை நீத்துறங்குகின்றன.

## இளைஞர் கடமை

சங்கீதத்தைப் பாதுகாக்க வேண்டியது இளைஞர்கள் கடமை. அதற்கு முக்கியமான சாதனம் நல்லொழுக்கம்.' மிகவும் நன்றாக இருந்த சாரீரம் ஒழுக்கக் கேட்டால் சீக்கிரத்தில் கெட்டுப்போனதைப் பலரிடம் நான் கண்டிருக்கிறேன். சங்கீதப் பயிற்சிக்கு ஆகார நியமம் அவசியமாகும். கண்ட கண்ட ஆகாரங்களை கண்ட பொழுதெல்லாம் உட்கொள்வது சாரீரத்தைக் கெடுத்துவிடும். மகா வைத்தியநாதையர் ஆகார நியமத்தில் தவறியதேயில்லை. அவர் இரண்டு முட்டை கரண்டிக்குமேல் நெய்யைச் சேர்த்துக் கொள்வார். பாலே சாப்பிடுவதில்லை. நீர்மோர் சாப்பிடுவார். இந்தக்காலத்தில் இது மிகவும் ஆச்சரியமாகவே தோற்றும். அப்படி அவர் இருந்ததனால்தான் அவருடைய சாரீரம் அவர் சொன்னபடி கேட்டுக் கொண்டிருந்தது.

சிறு பிராய முதற்கொண்டு சங்கீத அப்யாஸம் செய்தவர்களுள் மகா வைத்தியநாதையர் ஒருவர். ஞானசபந்தரும் நம்மாழ்வாரும் சிறு வயதிலே கடவுளைத் தம்முடைய பாட்டுக்களால் வசப்படுத்தினார்கள்.

சங்கீதத்தால் மனவருத்தமும் நோய் வருத்தமும் போய்விடும். இதைப் பல சமயங்களில் பலர் அறிந்திருக்கக் கூடும். திருவாவடுதுறை யாதீனகர்த்தராக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் வாயுப் பிடிப்பினால் உபத்திரவ மடைந்தார்கள். ஒருநாள் பெரிய வைத்தியநாதையரென்ற சங்கீத வித்துவானுடைய சங்கீதத்தைக் கேட்டு நோயின் துன்பத்தை மறந்தார்கள்.

காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் சில காலம் என்னிடம் பாடம் கேட்டார். அவருக்கு இலக்கிய இலக்கணங்களில் அதிகமாகப் புத்தி செல்லவில்லை. புதிய செய்யுள் இயற்றுவதிலேயே போய்க்கொண்டிருந்தது. அவரை

ஆதரித்துப் போற்றியவர் ஊற்றுமலை ஜமீன்தாராகிய ஹிருதயாலய மருதப்பத் தேவரென்பவர். அந்த ஜமீன்தார் தமிழ்ப் பயிற்சியுடையவர். ஒரு சமயம் கழுகுமலைக்குக் காவடி எடுக்கும் பிரார்த்தனை செய்துகொண்டார். அதன்படி காவடி யெடுத்தபோது உடன் அண்ணாமலை ரெட்டியாரும் சென்றார். ரெட்டியார் அதற்குமுன் தாம் இயற்றி வைத்திருந்த காவடிச்சிந்தை வழிநெடுகப் பாடிக்கொண்டே சென்றார். அதைக் கேட்டு இன்புற்ற ஜமீன்தாருக்கு வழி நடையில் உண்டான சிரமமே தோற்றவில்லையாம். இந்தச் செய்தியை அந்த ஜமீன்தாரே என்னிடம் சொல்லியிருக்கிறார்.

## சங்கீத மருந்து

பண்டைக் காலத்தில் நம்முடைய நாட்டில் பல வீரர்கள் இருந்தனர். போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்த வீரர்களை அவர்களுடைய மனைவிமார் சென்று பாதுகாப்பார்கள். அப்பொழுது அவர்கள் இனிய பாடலைப் பாடுவார்கள். அவற்றைக் கேட்டு அவ்வீரர்கள் தம்முடைய புண்ணால் உண்டாகும் வருத்தத்தை மறந்து விடுவார்கள். இந்த வரலாறு புறப்பொருள் வெண்பா மாலையில் சொல்லப்படுகிறது. ஆகவே சங்கீதமும் ஒரு மருந்தாக உபயோகப்படுமென்பதை நாம் அறிகிறோம்.

இசையைப் போன்ற வித்தை வேறு இல்லை. எல்லா வித்தைக்கும் தலைவராக இருக்கும் சிவபெருமான் சங்கீதத்தில் அதிக பக்ஷபாதமுடையவராக இருக்கிறார். சங்கீதத்துக்கு மூலமாகிய சாமகானத்தை அவர் எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார். கம்பளர், அசுவதரர் என்ற இரண்டு கந்தர்வர்களை அவர் இரண்டு தோடுகளாகத் தம் திருச்செவியில் அணிந்துகொண்டு எப்பொழுதும் அவர்களுடைய கானத்தைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார். அப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால் மற்றவர்களுடைய தோத்திரங்களையும் நம்முடைய குறைகளையும் எப்படிக் கேட்பாரென்ற சந்தேகம் தோன்றலாம். அவருடைய செவிகள் நம்முடையவை போன்றன அல்ல. அவர் எங்கும் செவியுடையவர். ஆயிரம் முகம், ஆயிரம் தலை, ஆயிரம் பாதமுடையவர் என்று வேதம் கோஷிக்கிறது. "எங்கும் செவியுடையாய் கேளாயோ" என்று ஓர் அன்பர் கூறியிருக்கிறார். ஆதலின் உலகத்தில் உண்டாகும் எல்லா ஒலிகளையும் அவர் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார். ஆயினும் சங்கீதத்தைத் தாமே விரும்பி எப்பொழுதும் கேட்கிறார். அவரே வீணை வாசிப்பார். "எம் மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். தக்ஷிணாமூர்த்தி பேதங்களில் வீணா தக்ஷிணாமூர்த்தி யென்பது ஒன்று. அந்த மூர்த்தி எப்பொழுதும் வீணை வாசித்துக் கொண்டே யிருப்பார்.

## தமிழ்ப் பண்

நம்முடைய தமிழ் நாட்டில் பண்கள் திறங்களென்ற வரையறை சங்கீதத்தில் உண்டு. ஸம்பூர்ண ராகத்தைப் பண்ணென்றும், ஜன்ய ராகத்தைத் திறமென்றும் சொல்லி வந்தார்கள். ஆகமங்களில் உத்ஸவத்தில் திக்பந்தன காலத்தில் இன்ன திக்கில் இன்ன பண்ணைப் பாட வேண்டுமென்ற வரையறை யிருக்கிறது.





இதனால் பண்களின் பழமையை உணரலாம். தமிழ் நாட்டில் இருந்த பண்களை யமைத்தே தேவாரங்கள் பாடப்பட்டன. திவ்யப் பிரபந்தமும் அத்தகையதுதான். ஆயினும் இக்காலத்தில் புத்தகங்களில் ஒவ்வொரு பாட்டுக்கும் தனித்தனியே இராகம் அமைத்திருக்கிறார்கள். இப்பொழுது கோயில்களில் திவ்ய பிரபந்தத்தை ஓதுபவர்கள் அந்த ராகத்திற் பாடுவதில்லை. பழைய பண்ணும் இப்பொழுது தெரியவில்லை.

ஒவ்வொரு பண்ணுக்கும் இன்ன காலத்திற் பாடப்பட வேண்டுமென்று வரையறை யுண்டு. எல்லாக் காலத்திற்கும் பொதுவான பண்களும் உள்ளன. பலர் கூடியுள்ள கூட்டத்தில் ஒருத்தி தன் நாயகனுக்கு இரவில் வரவேண்டுமென்று குறிப்பிக்க எண்ணினாள். அதன் பொருட்டு வீணையில் இராத்திரிக்குரிய பண்ணை வாசித்தாள். அவன் அவளது குறிப்பை உணர்ந்து கொண்டான்.

ஒரு பெரிய செல்வருடைய பாதுகாப்பில் இருந்த சங்கீத வித்வான் ஒருவன் காலம் மாறி ராகங்களை வாசித்தான். "ஏன் இப்படி மாறி வாசிக்கிறான்?" என்று அந்தச் செல்வர் கேட்டார். அருகிலிருந்த ஒரு புலவர், "எல்லாம் உங்களால்தான் ஏற்பட்ட விபத்து. அவனுக்குக் கவலையேயில்லாமல் விருந்து பண்ணி வைத்ததனால் அவன் வித்தையே மறந்து விட்டான். ராத்திரி வாசிக்கிறதைக் காலையில் வாசிக்கிறான். காலையில் வாசிக்கிறதை ராத்திரி வாசிக்கிறான்" என்றார். இது புறநானூற்றில் உள்ள வரலாறு.

காலத்துக்குரிய ராகங்களைப்போல ஒவ்வொரு ரஸத்துக்கும் ராகங்கள் இருக்கின்றன. இன்ன இன்ன வகையாக பாட்டுகளை இன்ன இன்ன ராகத்திற்குப் பாட வேண்டுமென்ற நியதியும் உண்டு. வெண்பாவை சங்கராபரணத்திற் பாடவேண்டும். கலித்துறையைப் பைரவியிற் பாடவேண்டும். அகவலை ஆரபியிற் பாடலாம்.

சங்கீத வித்வான்கள் தமிழ்ப் பாட்டுக்களைப் பிழை யில்லாமல் பாடவேண்டும். சாகித்தியம் எப்படி யிருந்தாலென்ன வென்று நினைக்கக் கூடாது. பாஷையிலும் அறிவுடையவராக இருப்பது விசேஷம். ஆபாஸமான முறையில் பதங்களை வெட்டியும் கொலை பண்ணியும் விழுங்கியும் பாடுவதனால் அவர்கள் பாஷைக்குப் பெரிய தீங்கு இழைக்கிறார்கள். பழைய காலத்தில் சங்கீத வித்வான்கள் சாஸ்திரப் பயிற்சி யுடையவராக இருந்தனர். படித்த வித்வான்களாக இருந்தால், சாகித்தியத்தின் பொருளைத் தெரிந்து கவியினது மனோபாவத்தை உணர்ந்து பாடமுடியும். இந்த முயற்சியைச் சங்கீத வித்வான்கள் மேற்கொண்டால், மிகவும் உபயோகமாக இருக்கும்.

# குலாப் - குணசேகர்

## ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி

சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயில் குளத்தில் ஏதோ ஒரு பெரிய வஸ்து மையமண்டபத்துக்கருகே மிதந்து கொண்டிருந்தது. காலை ஆறு மணிக்கு பல் துலக்க வந்த ஜட்காவண்டிக் கந்தன் அதைப்பார்த்தான். அது என்னவென்று அவனுக்குப் புலப்படவில்லை. உடனே தன் தோழன் சோதா சுப்பராயலுவைக் கூப்பிட்டுச் சொன்னான். அப்படி விஷயம் பரவிவிடவே ஒரே கும்பல் சேர்ந்து விட்டது. ஆனால் துணிந்து தண்ணீரில் சென்று அந்த வஸ்து என்னவென்று பார்க்கயாரும் முன்வரவில்லை. கடைசியில் காலி காயாம்பூ துணிந்து நீரில் இறங்கி வஸ்து மிதக்குமிடம் நோக்கி நீந்திச் சென்றான். அவ்வஸ்துவும் அலையால் தள்ளப்பட்டு அவன் பக்கமாக வந்தது. அதை நெறுங்கிய காயாம்பூ "அடி ஆத்தே, பொணமில்லே" என்று கதறிக்கொண்டு திரும்பிவிட்டான். பின்னர் விஷயம் போலீசுக்கு அறிவிக்கப்பட்டது. சப் இன்ஸ்பெக்டர் சாம்பசிவ அய்யர், ஹெட் கான்ஸ்டேபிள் கான்சாஹிபு, கான்ஸ்டேபிள் முருகப்பன் மூவரும் குளத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் "அடே கான், நீதான் சரி, தடிமாதிரி இருக்கே, இறங்கு தண்ணீலே! என்ன முழிக்கிறே," என்றார். கான் சாஹிபு தனக்கு ஜலதோஷம் என்று சொல்லி முருகப்பனைப்பார்த்து முறைத்து "என்ன பி. ஸி. 44 நீதான் இறங்கே. பெரிய புலின்னு சொல்லிக்குவையே. பொணத்தைக்கண்டு வெலவெலக்கிறேயடா, ஜலதோஷமில்லேன்னா நான் நிமிஷத்துலே போவேன். போடா" என்று அதட்டினான். பாவம் முருகப்பனுக்கு அங்கு பழங்கேடிகள் ஒருவரும் தென்படவில்லை. தானே தண்ணீரில் குதித்துச் சென்றான். வஸ்துவிடம் சென்று தன் கையால் தொட்டான். ஒரு யுவதியும், யுவனும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவியபடியே புன்முறுவல் பூத்த முகங்களுடன் ஆவியற்று மிதந்தனர். மெல்லக்கரை சேர்த்தான்.

கும்பலில் ஒரே கலவரம். அந்த ஜீவன்கள் யாரென்று கண்டுபிடிக்க ஒருவருக்கும் முடியவில்லை. உடல்கள் பரிசோதனை செய்யப்பட்டன. அந்த எழில் மிகுந்த கன்னிகையின் இடுப்பில் ஒரு தகரடப்பா இருந்தது. அதை முருகப்பன் எடுத்து சாம்பசிவ அய்யரிடம் வைத்தான். அவர் "அதுலே என்ன இருக்கூன்னு பாத்துத் தொலே. அம்மாவாசை வேறே, தர்ப்பணம் செய்யலேன்னு பாட்டி சண்டைக்கு வரப்போறா. கர்மாந்திர வினை. பாருடா சட்னு" என்றார்.

அந்த டப்பாவில் ஒரு நீண்ட கடிதம் இருந்தது. அதை சப் இன்ஸ்பெக்டர் எடுத்துப் பிரித்துப்பார்த்தார். அதில் கீழ் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.



"சமூகமே!

இன்று 'எங்களைக்கண்டு இரங்குகிறீர்களா? என் சொந்த ஊர் திருச்சினாப்பள்ளி. என் தந்தையின் பெயர் ரபி ஆமத். பெரிய பணக்காரர். ஆனால் மத வெறி கொண்டவர். நாங்களிருந்த தெருவிலேயே கோபாலய்யர் என்ற பணக்கார ஜவுளி வியாபாரி ஒருவருமிருந்தார். அவர் புதல்வன் குணசேகர் தேசிய கலாசாலைக்குப் போகும் போதும், திரும்பித்தன் இல்லம் திரும்பும் போதும் நான் எங்கள் வீட்டு ஜன்னல் வழியாக கவனித்தேன். அவருக்கு வயது 23, எனக்கு வயது 16. ஏதோ சில நாட்களில் அவரது அழகு என்னைக் கொள்ளை கொண்டது. அவரும் நாள் தவறாமல் என் வீட்டுப் பக்கம் வரும் போது எங்கள் ஜன்னலைப் பார்ப்பார். நான் அவரைப்பார்ப்பேன். இருவரும் புன்சிரிப்பு சிரித்துக்கொள்வோம். இப்படி சில நாட்கள் நடந்த பின் அவருடன் பேசவேண்டுமென்ற ஆசை அதிகமாயிற்று. ஆனால் நானோ கோஷா. அவரோ ஹிந்து-காப்ரி. என்ன செய்வது?

எங்கள் குடும்பத்தில் பரம்பரையாக வேலை செய்து வந்தவனும், என்னைச்சிறு குழந்தை முதல் தூக்கி வளர்த்தவனுமான மஸ்தான் ஒருவனே என் நண்பன். யான் எது சொன்னாலும் அவன் கேட்பான். என் விருப்பத்தை அவனுக்குத் தெரிவித்தேன். குணசேகரிடம் என் அவாவை வெளியிட்டான். மஸ்தானின் உதவியால் ஒரு நாள் மாலை காவிரி யாற்றங்கரையில் சந்தித்தோம். நான் அவர் மீது காதல் கொண்டதுபோல் அவரும் என் மீது காதல் கொண்டிருந்தார். நானோ முகமதியப் பெண். அவரோ வைதீக ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவர். இருவர் தாய் தந்தையரும் மதப்பித்துக் கொண்டவர்கள். எப்படியும் 'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்று கூறிப் பிரிந்தோம்.

மஸ்தான் எங்களிருவருக்கும் மத்தியில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள உதவியாயிருந்தான். திருச்சியில் மசூதியின் முன் மேளம் வாசிப்பது பற்றி ஒருதகராறு நடைபெற்றது. திடீரென்று முஸ்லீம்கள் ஹிந்துக்களைத் தாக்குவதும், ஹிந்துக்கள் முஸ்லீம்களைத் தாக்குவதுமாயிருந்தது. நான் குடியிருந்த இடம் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த இடம். இதுவே எங்கள் காரியத்தை நிறைவேற்ற தகுந்த சந்தர்ப்பம் என்று கண்டோம். மஸ்தான் உதவியால் எனக்கு ஒரு ஹிந்து யுவன் சூட்டைத்துக்கொடுக்கச் செய்தேன். ஒரு நாள் எங்கள் தெருவில் கலகம் அதிகமாகி எங்கள் வீட்டையே ஹிந்துக்கள் தாக்கினார்கள். குணசேகர் கூட்டத்தில் காணப்பட்டார். ஜன்னலின் வழியே கண்ஜாடை காட்டினேன். கொல்லை வாசலில் வந்து நின்றார். ஆண் உடையில் நானும் அவருமாகப் புறப்பட்டு ஜங்ஷனை யடைந்தோம். போட் மெயிலில் சென்னை வந்து சேர்ந்தோம்.

என் கணவன் குணத்திடம் கையில் ஒரு காசுமில்லை. என் மேலிருந்த நகைகளைச் சிலவற்றை விற்று கோடம்பாக்கத்தில் ஒரு வீட்டில் குடியிருந்தோம். நான் ஒரு ஹிந்துப்பெண் போலவே என் நடையுடை பாவனைகளை மாற்றிக்கொண்டேன். என் தாய் தந்தையர் நான் கலகத்தில்

எக்கதியானேனோ என்று கலங்கினார்கள். போலீசுக்கு அறிவித்து என்னைப்பற்றிய விவரங்களைத் தெரிவிப்பவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் என்று பேப்பர்களிலும் பிரசுரித்துவிட்டார்கள். நாங்களோ கோடம்பாக்கத்தில் ஒரு வீட்டில் ஒரு பாகத்தில் குறைந்த குடக்கூலிக்கு குடியிருந்து வருகிறோம். குணசேகர் தன் தந்தைக்கு மறைமுகமாக தன் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர் அப்படிச் செய்வதாயிருப்பின் தன் மூஞ்சியில் கூட விழிக்கக்கூடாதென்றும், தன் குடும்பத்தின் கௌரவத்துக்கே அதுபோல் செய்வது பெருத்த ஹானியுண்டாக்கும் என்றும் கண்டிப்பாய் தெரிவித்து விட்டார். என் தாய் தகப்பன்மார்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. என் செய்வோம்! என் நகைகளும் பறந்தன. குணசேகர் வேலைக்காக எவ்வளவோ பாடுபட்டார். நாளை, நாளை என்று பதில் சொல்லுவதைத் தவிர வேறொன்றும் பயன் இல்லை. முதல் தேதி குடக்கூலி கொடுக்க முடியவில்லை. முன் கட்டிலிருந்த ஒரு பாட்டி என்னிடம் ஏதோ கடுகடுப்பாய் விழுந்தாள். என்னை அறியாமல், "அல்லா இதுவோ என்கதி" என்று கூறிவிட்டேன்.

உடனே வீடெல்லாம் குசுகுசுவென்று பேச்சுக்கள் நடந்தன. வீட்டுக்கார அம்மா எங்களை "நாளை காலை கட்டாயம் வீட்டைக்காலி செய்து விடுங்கள். இஸ்லாம் ஆனவர் இங்கு இருக்கமுடியாது. நல்லகாரியம் செய்தீர்கள்" என்று உத்தரவு போட்டுவிட்டாள்.

அன்று மாலை மஸ்தான் எப்படியோ வந்து சேர்ந்தான். யாரோ துப்பறிபவர் சங்கதிகளை எல்லாம் அறிந்து தந்தைக்குச் சொல்லிவிட்டதாகவும், தந்தை மறுநாட்காலை தன்னை மீட்கவும், குணசேகரைப் போலீஸில் ஒப்பிக்கவும் வரப்போவதாகவும் சொன்னான். அவனிடமும் கையில் காசில்லை. நாங்களோ பாப்பர். இரு இளம் யுவர்கள் ஒருவர் ஒருவரை மணக்க விரும்பினால் மதவெறிகுறுக்கே நிற்கிறது. தரித்திரம் அதற்கு உதவியளிக்கிறது. மஸ்தானை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு நாங்களிருவரும் காதலுக்குக் கட்டுகளில்லாத கந்தர்வலோகம் போக முடிவு செய்தோம். அதன்படியே தெய்வத்தின் திருக்குளத்தில் இருவரும் ஒருமிக்க மூழ்கியபடியே பறந்து செல்லுகின்றோம். போகும்போதே பாரதியின் குயில் பாடிய "காதல், காதல், காதல், காதல் போயிற் சாதல், சாதல், சாதல்" என்ற கானத்தைப்பாடிக்கொண்டு செல்லுகிறோம்.

இப்படிக்கு,
குலாப்."

இக்கடிதத்தைப் படித்த ஐயரும் கண்ணீர் விட்டார். கூட்டமும் ஆச்சர்யத்தால் மௌனமாயிருந்தது.



# வைத்தியப் பகுதி

டாக்டர் குமரன்

## ஆரஞ்சு

நம் நாட்டில் ஆரஞ்சுப்பழம் ஏகேஷ்டமாய் விளைகின்றது. அதில் பல விதங்களிருக்கின்றன. கமலா ஆரஞ்சு, குடகு ஆரஞ்சு, சாத்துக்குடி ஆரஞ்சு என்பன சில. சாதாரணமாக உடம்பு அசௌக்கியமாக இருப்பவர்களுக்கு ஆரஞ்சுப்பழம் கொடுத்தால் நல்லதென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அதில் அநேகவித சத்துப்பொருள்களிருக்கின்றன. ஆரஞ்சு சுளையாக அருந்தி ஜீரணிக்க சக்தியற்றவர்கள் அதைச் சாறு பிழிந்து சாப்பிடவேண்டும். குறிப்பாக சாத்துக்குடி ஆரஞ்சு எந்தவிதமான ஜுரமிருந்தாலும் சாப்பிடலாம் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆரஞ்சுப்பழத்தின் ரஸத்தை மட்டும் அருந்தி விட்டு தோலைத் தூர எறிந்து விடுவது அந்தப் பழத்திலுள்ள முக்கியமான ஜீவசத்துக்களை இழப்பதாகும். ஆரஞ்சுப்பழத் தோலிலும், அதனுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் உள்பக்கத்து வெண்மையான பாகத்திலும் தான் ஜீவசத்துக்கள் நிறைந்திருக்கின்றன. ஆரஞ்சுப்பழ ரசத்தில் விட்டமின் C. என்ற சத்துப்பொருள் அதிகமாக இருக்கிறது. இதில் கால்ஷியம் சத்தும் ஏராளமாக இருக்கிறது. இதிலிருக்கும் கால்ஷியம் உடலில் சீக்கிரம் ஜீரணித்து ஊறத்தக்க வகையிலிருக்கிறது. இவை இரண்டும் தேகத்தின் வளர்ச்சிக்கும் போஷாக்குக்கும் அத்தியாவசியமானவைகள்.

தோலின் மேல்புறமும், உட்புறமுமுள்ள ஸத்துக்கள் ஜீரணசக்தியை வளர்ப்பதில் மிகச்சிறந்தவை. "பயோரியா" முதலிய பல் நோய்களால் வருந்துபவர்கள் ஆரஞ்சுத் தோலை தினசரி ஒரு அளவு சாப்பிட்டுவந்தால் பல் சம்பந்தமான வியாதிகள் பறந்து போகும். சாதாரணமாக ஜனங்கள் இதன் தோல் ஜீரணமாகாது, அதிலும் குழந்தைகளுக்கு அவைகள் ஆகவே ஆகாது என்று நினைக்கிறார்கள். இது தப்பான அபிப்பிராயம். குழந்தைகளுக்கு இந்தத்தோலைக் கொடுப்பதால் எவ்வளவோ பயன்கள் கிடைக்கின்றன. இத்தோலின் ரஸத்தைப் பிழிந்து எடுத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் பிள்ளைகள் நல்ல தேக ஆரோக்கியத்துடன் வளருகின்றன. தோலில் ஒன்றுமில்லையென்று எண்ணி அதைத் தூர எறிந்துவிடுவது சுத்த அறியாமையையே வெளிக்காட்டுகிறது. மேற்கூறியபடி அதில் உட்பாகம், வெளிப்பாகம் என்று இரண்டு இருக்கின்றன. ஒன்று மேற்புறமுள்ள தடித்த மஞ்சள் பாகம், இன்னொன்று உட்புறமாக இருக்கும் நரம்புகள் ஓடுவது போன்ற வெண்மையான பாகம். மேல்பாகத்தில் ஏராளமான எண்ணெக் கோசங்களிருக்கின்றன. தோலை எடுத்து குழந்தைகள், சிறுவர்கள் நசுக்கினால் அதினின்றும் சிறு சிறு துளிகளாக ஒருவித திராவகம் தெளித்து பீறிட்டுக் கொண்டுவருவதை நாம் பார்த்திருக்

கிறோம். அதே ஆரஞ்சு எண்ணெ. இந்த திராவகத்துக்குக் குடலில் வாயு சேராதபடி தடுக்கும் சக்தி இருக்கிறது. இந்தத் துளிகளில் விட்டமின்கள் பியும் ஸியும் அதிகமாக இருக்கின்றன. இவைகள் நரம்புக்கு நல்ல வலுவைக் கொடுத்து வளர்ச்சியைத் தருவது மன்னியில் தேகத்தில் இரத்த விருத்தியையும் உண்டு பண்ணுகின்றன.

தோலின் உட்பாகமான வெண்மையான பாகத்தில் செல்லுலோஸ் என்னும் சத்து இருக்கிறது. செல்லுலோஸ் ஜீரண சக்தியை அதிகப்படுத்துகிறது. குடலில் மலம் கட்டுப்பட்டு சிக்காமல் அப்புறப்படுத்துவதில் இது இணையற்றது என்று கூடச் சொல்லலாம். இதனின்றும் நாம் தோலை எறிந்து விடுவதால் எவ்வளவு நஷ்டமடைகிறோம் என்பது எல்லோருக்கும் தெரியவரும். இனிமேல் தோலை வெளியில் எறியாதபடி உபயோகிக்க நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதைப் பலவழிகளில் பயன் படுத்தலாம். தோலைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி சட்னியாகவோ அல்லது பச்சடியாகவோ சாப்பிடலாம். பச்சடி செய்வது பிரமாதமல்ல. தோலைத் துண்டு துண்டாக நறுக்கிப்போட்டு சுத்தமான பாத்திரத்தில் வேகவைக்க வேண்டும். வேகவைப்பதில் தண்ணீர் அதிகமாக விட்டுவிடக்கூடாது. சரியான அளவு தண்ணீரை வைத்து வேகவைத்தபின் அத்துடன் வெல்லத்தைத் துண்டுதுண்டாக நறுக்கிப்போட்டு கொதிக்கவைக்க வேண்டும். சற்று நேரத்தில் வெல்லமும் கறைந்து தோல் துண்டுகளுடன் சாடிவிடும். இத்துடன் இளம்பச்சைமிளகாய்த் துண்டுகளும் (குறுக்காக நறுக்கப்பட்டவை) சேர்த்துப் போட்டால் தித்திப்பு உறப்பாக பச்சடி மிக ருசியாக இருக்கும். இதற்கு கடுகும் உளுத்தம்பருப்பும் தாளித்துக்கொட்டி மோர்சாதத்துடன் உண்டால் ஜீரண சக்தியை அபிவிருத்தி செய்வதுடன் பித்தம், வாய் கசப்பு முதலியவற்றையும் அடித்து விடும். சிலர் இப்பச்சடி உண்பதற்கு சற்று விருவிருப்பாக இருக்கிறதென்று நினைக்கலாம். நன்றாகப் பக்குவப்படி செய்த பச்சடியில் இவ்விருவிருப்பு மறைந்து போயிருக்கும்.

பாலைக்கூட ஜீரணிக்கமுடியாத நிலைமையிலிருக்கும் நோயாளிகளுக்குக்கூட தினம் இரண்டு அல்லது மூன்று ஆரஞ்சுப்பழங்களை ரசமாகப்பிழிந்தாவது அல்லது சுளையாக எடுத்தாவது கொடுத்து வந்தால் நல்ல ஜீரண சக்தியும் உண்டாகி வலுவும் ஏற்படும். பழமாகச் சாப்பிட்டால் ஒரு பழம் அருந்தியபின் ஒரு டம்ளர் சுத்த ஜலம் குடிப்பது நல்லது. குழந்தைகளுக்கு வயிற்றில் உண்டாகும் மப்பு, மாந்தம் முதலிய கோளாறுகளைத் தடுக்க பசும்பாலுடன் ஆரஞ்சு ரஸத்தையும் சேர்த்துக்கொடுத்து வருவது நல்ல குணத்தைக் கொடுக்கும்.

ஆரஞ்சு ரஸத்தை எஸ்ஸென்ஸாகச் செய்து ஆரஞ்சு கிரஷ், ஷர்பத்து முதலியன செய்து சாப்பிட்டால் தேகத்துக்குக் குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரும். ஆரஞ்சுத் தோலையும் நன்றாக இடித்து ரஸமெடுத்து ஷர்பத்துகள் செய்து குடிக்கலாம். வியாதியாயிருந்து குணமடைந்து வருபவர்களுக்கு ஆரஞ்சு ரஸமும், (முக்கியமாக சாத்துக்குடி ஆரஞ்சு) தக்காளிப் பழ ரஸமும் கலந்து கொடுத்தால் ரத்தத்தை அதி சீக்கிரம் அபிவிருத்தி செய்து அவர்களுக்கு நல்ல பலத்தையும் தைர்யத்தையும் அளிக்கும்.



# மோட்டார் இரவல்

ஸ்ரீமதி லக்ஷ்மி

சில மாதங்களுக்கு முன் ஓர் நாள் நான் சமயபுரம் போக நேர்ந்தது. வீட்டை விட்டு புறப்படும்போதே எட்டு மணிக்குமேல் ஆய்விட்டதால் அங்கு போய்ச் சேர்ந்து ஸ்நானம் செய்து பூஜை, ஸ்வாமி தரிசனம் எல்லாம் செய்து முடிக்க பன்னிரண்டு மணி ஆய்விட்டது. வெய்யில் மிகவும் கடுமையாயிருந்ததாலும் நாங்கள் போயிருந்தது குதிரை வண்டியாதலாலும் எங்கள் கஷ்டத்தையும் குதிரையின் சிரமத்தையும் உத்தேசித்து மத்தியான காலத்தை அங்கேயே கழித்து விட்டு, மாலை சுமார் நான்கு மணிக்கு அதை விட்டு புறப்பட்டு ஆறு மணி சுமாருக்கு வீடு வந்து சேர்ந்தோம். ஆகையால் அன்று எங்கள் சங்கத்திற்கு ஆஜராக முடியாமற் போயிற்று. யார் வந்தாலும் வராவிட்டாலும் சங்கத்தை திறந்து வைக்க வரும் வேலையாளுடன் நான் தவராமல் ஆஜராவது வழக்கமாதலால் நான் ஒரு நாள் வராதது மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. மறுநாள் சங்கத்திற்கு வந்த ஒவ்வொருவரும் என்னை முதல் கேள்வி "என் நேற்றைக்கு காணோம்" என்று தான் கேட்டார்கள். நானும் நடந்ததைச் சொன்னேன். அதற்கு எங்கள் அக்கிராசனாதிபதி மிஸஸ் அலமேலு சங்கரய்யர் (ஸப்ஜட்ஜ் சங்கரய்யரின் மனைவி) "அட, அசடே! இப்படியும் ஒரு பயித்தியக்காரி உண்டா! என், என்னைக் கேட்டிருந்தால் எனது காரைக்கொடுத்திருக்க மாட்டேனா? நாங்கள் பிரதி செவ்வாய்க்கிழமை சமயபுரம் போய் விட்டு வருகிறோம். போக ¼ மணி, வர ¼ மணி அங்கே ½ மணி, ஆக ஒரு மணிக்குள் வந்து விடலாமே" என்றாள்.

அதற்குள் உப அக்கிராசனாதிபதி டாக்டர் வீரராகவய்யங்காரின் மனைவி ரங்கநாயகி அம்மாள் "ஏண்டி! அம்மு வீடாவது மிகவும் தூரத்திலிருக்கிறது. என் வீடு பக்கத்து தெருவில் தானே இருக்கிறது. எனக்கு இதைப்பற்றி எப்பொழுதாவது காதில் போட்டாயா? எனக்கென்று ஸ்பெஷலாய் ஓர் மோட்டார் டாக்டர் வாங்கிக்கொடுத்திருக்கிறது உனக்குத் தான் நன்றாய்த் தெரியுமே. நீ கூட அப்பொழுது இனிமேல் நமக்கு மோட்டாருக்கு குறைவு இல்லை என்று சொல்லவில்லையா?" என்றாள்.

மாஜி அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமதி காவேரியம்மாளோ என்னுடன் ஒன்றும் பேசாமல் என் பெண் மாலியை எடுத்து முத்தமிட்டு "ஐயோ! பாவம்! குதிரை வண்டியிலே அதுவும் அந்த சமயபுரம் ரோட்டில் எப்படித்தான் உங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு போக உங்கள் அம்மாவுக்கு புத்தி வந்ததோ? யார் யாரோ முன் பின் தெரியாதவர்களுக்கெல்லாம் நாமக்கல் ஒரு கோடி, புதுக்கோட்டை ஒரு கோடி, என் மோட்டார் நாள் தப்பினாலும் தப்பும் இரவல் போவது தப்புவது இல்லை. இனிமேல் எங்கே யாவது போகவேண்டுமானால் நீ ஓடிவந்து

என்னிடம் சொல்லப்பா! நான் மோட்டார் தருகிறேன். உங்கம்மா வேண்டுமானால் குதிரைவண்டியிலோ, கழுதை வண்டியிலோ போகட்டும்" என்று அதனிடம் சொல்லுவது போல் சொன்னேன்.

எறும்பு ஊரக்கல்லும் தேயும் என்பது போல் எனக்கும் கொஞ்சம் மனம் சபலமடைந்தது போலும். "சே, என்ன பயித்தியக்காரத்தனம் செய்தோம். நமக்குத் தெரிந்தவர்கள் இவ்வளவு பேர்களிடம் மோட்டார் இருக்க, நாம் இவர்களை ஒரு வார்த்தை கேழ்க்காமல் போனது நமது முட்டாள்தனம்தான்" என்று எனக்குள் கண்டித்துக்கொண்டு, எல்லோருக்குமாக "வாஸ்தவம்தான். நான் செய்தது தப்புத்தான். இனிமேல் எங்கேயாவது போகவேண்டுமானால் கண்டிப்பாய் உங்களிடம் சொல்லுகிறேன்," என்று பதில் சொல்லிவிட்டேன்.

அப்படி இரவல் கேட்க வேண்டிய சந்தர்ப்பமும் கூடிய சீக்கிரம் வந்தது. போனவாரம் திங்கட்கிழமை எங்கள் அத்தான் பெண்ணுக்கு குணசேகரத்தில் கல்யாணம் நடந்தது. அவனும் அடிக்கடி வந்து அவசியம் எல்லோரும் வரவேண்டும் என்று அழைத்திருந்தான். எல்லோரும் போவது என்று கூடத்தீர்மானித்திருந்தோம். ஆனால் அதற்குள் அதே தேதியில் மூன்று, நான்கு கல்யாணங்களுக்கு அழைப்பு வந்து விட்டது. இது சகஜமே. ஊரில் எல்லாம் கல்யாணம் நடக்கும். நமக்கு ஓர் கல்யாணக் கடிதம் கூட வரவில்லையே என்று பேசிக் கொண்டிருப்போம். திடீரென்று ஒரே நாளில் ஒரே முகூர்த்தத்தில் திக்குக்கொரு கல்யாணமென அழைப்பு பத்திரிகை வரும். எல்லோரும் வேண்டியவர்களாயிருப்பார்கள். ஒரு கல்யாணத்திற்கு போனால் மற்றவர்களுக்கு மனஸ்தாபம். இதற்கென்ன செய்வது என்று தெரியாமல் தவிப்போம்.

அதே மாதிரி போன வாரம் திங்கட்கிழமை என் நாத்தனார் பெண்ணுக்கு மன்னார்குடியில் கல்யாணம். மாமா பையனுக்கு உள்ளூரிலேயே சீமந்தம். இது தவிர சங்கத்தின் மெம்பர் ஒருவர் பையனை பள்ளியில் சேர்க்க போகிறார்கள். இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது என்று வெகுநேரம் ஆலோசித்தோம். கடைசியில் மன்னார்குடிக்கு தங்கை கல்யாணத்திற்கு தமயனார் போவதென்றும், மாமா வீட்டிற்கு பெரிய பையனையும் பெண்ணையும் அனுப்பிவிட்டு, நான் கடைசி குழந்தைகளிரண்டையும் கூட்டிக்கொண்டு மோட்டாரில் குணசேகரம் போய் விட்டு வந்து சாயங்காலமாவது அக்ஷராப்பியாஸ வீட்டிற்குபோய் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு வந்து விடுவது என்று தீர்மானித்தோம்.

ஞாயிற்றுக்கிழமை மாலை என் அத்தான் வந்து தான் ஓர் பஸ் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதில் மறுநாள் காலை 6 மணிக்கு புறப்படத் தயாராயிருக்கும் படிக்கும் சொன்னான். நான் "போடா! போ. உன் காரியத்தைப் பார்த்துக்கொள். எங்கள் சங்கத்தைப்பற்றி பரிகாசம் செய்துகொண்டிருந்தாயே. நாளைக்கு நூறு மோட்டார்கள் வேண்டுமானாலும் எனக்கு தர எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாய் உன் கட்டை வண்டி பஸ் போய்ச் சேருவதற்குள் நான் ஓர் பஸ்ட்கிளாஸ் காரில் வந்து ஜோராய் சம்மந்தி மாதிரி இறங்குகிறேன். பார்" என்று சொல்லிவிட்டேன்.





திங்கட்கிழமை காலை புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டு என் பையனை டாக்டர் வீட்டிற்கு ஓர் கடிதத்துடன் அனுப்பினேன். போய் 10 நிமிஷத்திற்குள் வந்து விட்டான். "ஏண்டா எங்கே கார்?" என்றேன்.

"டாக்டர் கார் ரிப்பேராம், ஓர்க்ஷாப்பிலே கிடக்கிறதாம். அதனாலே அம்மாமி காரை எடுத்துண்டு போயிட்டாராம். மோட்டார் இல்லேன்னு சொல்லிட்டாள். ஆனால் அதெல்லாம் சுத்த பொய் அம்மா! மோட்டார் அவாத்திலேயே ஷெட்டுக்குள்ளே இருக்கு. நான் கூட கிட்டுவே கேட்டேன். அவன் வந்து 'அப்பா தன் மோட்டாரிலேதான் போனா. நான் பார்த்தேன்!' அப்படின்னு சொன்னான், அம்மா" என்றான்.

இரண்டாவதாக அலமேலு வீட்டிற்கு அனுப்பினேன். அவளிடமிருந்து அடியிற்கண்ட கடிதம் பதிலாக வந்தது.

"ஸ்ரீமதி லக்ஷ்மிக்கு,

இன்று மாலை ஓர் விருந்துக்குப் போக வேண்டியிருப்பதால் மோட்டாரை தங்களுக்கு இரவல் கொடுக்க இயலாததைப் பற்றி மிகவும் வருந்துகிறேன். ஸ்ரீமதி ரங்கநாயகியிடமிருந்தாவது தற்சமயம் கார் வாங்கிக்கொண்டு போங்கள். அடுத்த தடவை நான் கண்டிப்பாய் மோட்டார் கொடுக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் சிநேகிதி,
அலமேலு."

கடைசியாக காவேரி பாயிக்கும் ஓர் லிகிதம் கொடுத்து போய் பார்த்துவிட்டு வரும்படி சொன்னேன். என் பையனும் ஓட்டமாய் ஓடிப்போய் விட்டு இறைக்க இறைக்க வெறுங்கையாய்த் திரும்பி வந்தான். "ஏண்டா! என்ன சமாசாரம்?" என்றேன்.

"கடுதாசெ அவாத்து வாசுகிட்டே கொடுத்தேம்மா. கொஞ்ச நேரம் கழிச்சு வந்து 'எங்கம்மா உள்ளே இருக்கா. அவ, வந்து, தான் ஆத்திலே இல்லே, வெளியிலே எங்கேயோ போயிருக்கேன்னு சொல்லிடச்சொன்னா' அப்படின்னு சொல்லிட்டாம்மா" என்றான்.

இதற்குள் மணியும் கிட்டத்தட்ட 10 ஆய்விட்டது. என் மனம் எப்படி இருந்தது என்பதைப்பற்றியும், பிறகு எப்படி நான் ஓர் வாடகை ஜட்காவிலேறி 1 மணி சுமாருக்கு குணசேகரம் போய்ச்சேர்ந்தேன் என்பதையும் எழுதவேண்டியது அநாவசியம் என்று நம்புகிறேன்.

ஆனால் இப்பொழுது எங்கே வெளியில் போக வேண்டும் என்று கிளம்பினாலும் சரி, என் பையன்கள், தம்பி, அக்காள் எல்லோருமாக "அவளுக் கென்னப்பா! நினைத்தால் நூற்றுக்கணக்கில் மோட்டார் வரும். என்னம்மா! டாக்டர் வீட்டிற்கு போகட்டுமா! ஸப்ஜட்ஜ் வீட்டிற்கு போகட்டுமா!!" என்று பரிகாசம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

# அப்ளிகே வொர்க்

## சித்திரத்தையல்

"ஸரோஜா"

முக்கியமான வேலையில் வீட்டு வேலைகளெல்லாம் முடிந்தபின் என்ன செய்வதென்று தெரியாமல், புத்தகம் படிக்கவும் பிடிக்காமல் வயோதிகரைப் போல் பலயுவதிகள்கூட படுத்துக் கொண்டு தூங்குகிறார்கள். இது சிறிய பெண்களுக்கழகல்ல. அச்சமயத்தில் மனதிற்கு சந்தோஷத்தையும், குஷியையும் அளிக்கும்படியான தையல் வேலை, சித்திரம் வரைதல், பத்திரிகை படிப்பது முதலிய அப்பியாசங்களை (Hobbies) வைத்துக்கொள்வது நம் மாதர்களுக்கவசியம். இவ்விதம் செய்வதால் அவர்களின் அறிவு வளர்ச்சியடையும். இவ்வித நாசுக்கு காரியங்களில் "அப்ளிகேவொர்க்" என்னும் தையல் வேலையும் ஒன்று. இது பார்க்கப்போனால் வெகு சுலபமான வேலையாக இருந்தாலும்கூட, வெகு அழகான வேலைதான். வேலையை வெகு ஜல்தியில் ஆரம்பித்து முடித்துவிடலாம்.

இந்த வேலைக்கு அவசியமான பொருள்களாவன. இதற்கு சாயம் போகாத வித விதமான வர்ணத்துணிகள் வேண்டும். துணித்துண்டுகள் பட்டுத் துணிகளாக இருந்தால்தான் நல்லது. இத்துணிகளை புதியதாகக் கடையிலிருந்து வாங்கிக் கொள்ளாமல் சுலப வழியில் வீட்டிலேயே சேகரிக்கும் விதத்தை சொல்லட்டுமா? உங்களுக்கு அல்லது உங்கள் பெண் குழந்தைகளுக்கு பாவாடை, சொக்காய், ரவிக்கை முதலான உடுப்புக்கள் தைக்கும் போது கத்தரித்து தைத்து மிஞ்சின பட்டு துணி துண்டுகளை சேகரித்துக் கொண்டு வாருங்கள். ஆனால் பூவகைராக்கள் அச்சிட்ட துணிகள் உதவா. வெறும் (Plain Silk) சில்குதான் உதவும். துணிகள் போதுமான வரைக்கும் வேண்டிய வர்ணங்களில் சேர்ந்த பின்பு உங்களிடத்தில் இருக்கும் வர்ணத்துணிகளுக்கு இசைந்தாற்போல் அதேவர்ணங்களில் D.M.C. No. 25. நூல் பட்டைகளையும் வாங்கிக் கொள்ளுங்கள். இந்த கம்பெனியின் நூல்தான் பூத்தையல் வேலைக்கு தேர்ந்ததென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கலாம். இந்த வேலை செய்ய வெண்மையான துணியே நன்றாகவிருக்கும். உங்களிஷ்டம்போல் வர்ணத் துணிகளிலும் தைக்கலாம். ஆனால் கருப்பு வர்ணமின்றி இலேசான வர்ணத் துணிகளில் தைய்த்த சித்திரம் அதிகம் எடுத்துக்காட்டும். பருத்தி துணி, பட்டு துணி எதில் வேண்டுமானாலும் தைக்கலாம்.

குஷன் கவரோ, மேஜைத் துணியோ, குழந்தை ஜம்பர், ரவிக்கை எதற்கு நீங்கள் பூக்கள் தைக்க உத்தேசித்திருக்கிறீரோ அதை எடுத்துக்கொண்டு அதில் கார்பன் பேப்பர் மூலம் நீங்கள் தைக்க உத்தேசித்திருக்கும் சித்திரத்தை வரைந்து கொள்ளுங்கள். நீங்கள் அப்ளிகேவொர்கை நன்றாகக் கற்றுகொள்ள வேண்டுமானால் ஆரம்பத்தில் புஷ்பங்கள், இலைகள் முதலியவைகளை



தைய்க்க கற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் மனிதர்கள், மிருகங்கள், பக்ஷிகள் இயற்கை விநோதங்கள் (Landscapes) வீடுவாசல்கள் முதலான சித்திரங்களையும் தைய்க்க கிரமமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ள முடியும். உங்களுக்கு சித்திரம் வரையவராவிடில் எழுதத் தெரிந்தவர்களிடம் எழுதி வைத்துக்கொள்ளலாம். இல்லாவிடில் சைனாபஜாரில் வேண்டிய எம்ப்ராய்டெரி ஸ்டோர்ஸ்களிருக்கின்றன. அக்கடைகளில் மலிவான விலையில் பல ட்ரேன்ஸ்பர் டிசைன்கள் (Transfer designs) விற்கப்படுகின்றன. அவைகளை வாங்கி உபயோகிக்கலாம். இந்த காகிதங்களிலிருந்து துணிக்கு சித்திரத்தை மாற்றுவது வெகு சுலபமே. துணியை ஒரு நல்ல மேஜைமீதோ, பலகை மீதோ சுருக்கமில்லாமல் விரித்துக் கொள்ள வேண்டும். அதன்மேல் சித்திரம் வரைந்திருக்கும் பக்கம் துணியில் படும்படி, சித்திரக் காகிதத்தை துணிமேல் கவிழ்த்தி விரிக்க வேண்டும். அதன்மேல் முன்னுக்கும் பின்னுக்கும் இழுக்காமல் ஒரே மார்க்கமாக இஸ்திரிப் பெட்டியை இழுக்கவேண்டும். அப்பொழுது துணி மீது சித்திரம் ஒழுங்காக ஒட்டிக்கொள்ளும்.

நாம் இப்பொழுது ஒரு ரோஜா புஷ்பக் கொத்தை துணிமேல் சித்தரித்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ரோஜா புஷ்பங்களின் இயற்கையான வர்ணங்களில் ஒன்றான பழுப்பு வர்ணம், சிகப்பு, மஞ்சள், ரோஜா இவைகளில் உங்களுக்கிஷ்டமான வர்ணத் துணியில் நீங்கள் இப்பொழுது முதல் தைக்கப்போகும் புஷ்பத்தின் சித்திரத்தை மட்டும் கார்பன் பேபர் மூலம் சித்தரித்துக் கொள்ளுங்கள். பிறகு வர்ணத் துணியில் எழுதியிருக்கும் அந்த ஒரு புஷ்பத்தை மட்டும் எம்ப்ராய் டெரிஸ் கத்தரிக்கோலால் ஒழுங்காக (தாடி மீசை இல்லாமல்) கத்தரித்துக் கொள்ளுங்கள். இப்பொழுது முழு சித்திரமும் வரைந்திருக்கும் துணியில் இதே புஷ்பம் வரைந்திருக்கும் இடத்தில் அந்த புஷ்பச் சித்திரத் துண்டை இசைவாக வைத்து (டாகா செய்ய வேண்டும்) ஒட்டுத் தைய்யல் போட வேண்டும்.

பின்பு இரு துணியையும் இசைத்து சுற்றிலும் புஷ்பத்தின் துணியின் வர்ணத்தின் நூலால் காஜா தைய்யல் (Button hole stitch) தைக்க வேண்டும். பிறகு புஷ்பத்தின் இதழ்களை காட்டுவதற்கு வரைந்திருக்கும் கோடுகளின் மேல் காஜா தையலிலோ அல்லது சங்கிலித் தையலிலோ தைத்து விடவேண்டும். குசுமங்கள் காண்பிப்பதற்கு (ரோஜாவிற்கல்ல, குசுமங்களிருக்கும் பூக்களுக்கு) மஞ்சள் நூலால் முடிச்சு தையலால் (Knot stitch) நெருக்கமாக தைத்துவிட வேண்டும். குசுமத்தை அந்த புஷ்பத்தின் குசுமத்தின் இயற்கை வர்ண நூலாலேயே தைய்த்தால் நேர்த்தியாக இருக்கும்.

இவ்விதமே ஒவ்வொரு புஷ்பத்தையும் தைய்க்க வேண்டும். ஒருமிக்க தைய்க்க வேண்டிய புஷ்பங்களெல்லாவற்றையும் கத்தரித்து வைத்துக்கொண்டால் துணி ஓரமெல்லாம் நூல் பிரிந்து பிச்சம் பிச்சமாக நிற்குமாதலால், ஒரொரு புஷ்பமாக அல்லது ஒரொரு இலையாக கத்தரித்து தைத்து முடித்த பின்பு மற்றொன்றை கத்தரிக்கவேண்டும். சிலர் புஷ்பம் உப்பலாகத் தெரிய வேண்டுமென்று இரண்டு

துணிக்கும் நடுவில் கொஞ்சம் பஞ்சு வைத்து தைப்பார்கள். இலைகளையும் பூவைப்போலவே ஒன்றொன்றாக பச்சை நிறத் துணியில் கத்தரித்துக்கொண்டு தைக்கவேண்டிய துணி மேலிருக்கும் அதே இலையின் சித்திரத்தின்மேல் வைத்து தைத்து, இலையின் நரம்புகளை இலையின் வர்ணத்தைவிட கொஞ்சம் வெளுத்த பச்சை நூலால் பென்சில் அடையாளத்தின் மேல் கோணத் தையலில் (Either in stem stitch or in chain stitch) தைக்க வேண்டும். புஷ்பத்தின் மற்ற இலைகளின் காம்பை கோணத் தையலில் பச்சை நூலில் தைக்கவும். எல்லாம் தைத்து முடித்த பின் சித்திரத்தை பாருங்கள். எவ்வளவு நன்றாக இருக்கும். நிஜமான புஷ்பக்கொத்தை போலல்லவோ இருக்கின்றது.

இந்த முதல் வேலையை நன்றாகக் கற்றுக் கொண்டதும், இதே மாதிரியில் மேலொரு தடவை கூறியிருப்பதுபோல் மனிதர்கள், பசு, பக்ஷி, வகைகள் எல்லாவற்றையும் நம் புத்தி சக்தியை உபயோகித்து 'அப்ளிகேவொர்க்' செய்து நம் வீட்டு மேஜை, குரிச்சி, குழந்தைகளின் உடுப்பு எல்லாவற்றையும் அலங்கரிக்கலாம். பசு, பக்ஷி முதலியவைகளையும் தைக்கும் விதத்தை பிற்பாடு எழுதுகிறேன். அதற்குள் நீங்கள் இந்த சுலப ரீதி தையலால் வீட்டை அலங்கரியுங்கள்.



# விதியோ! மதியோ!

ஸ்ரீமதி சங்கரி

எங்கும் ஜோதிமயம்! சூரியன் தன் பொன்னிறமான கிரணங்களை வீசிக்கொண்டு நீல நிறமான ஆகாயத்தில் பிரகாசிக்கிறான். வானம்பாடிகள் தங்களது இனிய கீதத்தால் வானத்தை நிறப்புகின்றன. வசீகரமாய் நிர்மாணிக்கப்பட்ட ஓர் பந்தலின் கீழ் அழகே உருக்கொண்ட ஒரு இளஞ்சிறுமி தன் கையில் மணமாலையை ஏந்தி நிற்கிறாள். அவள் முன் அக்னி ஜ்வாலை வீசுகின்றது. மற்றொரு பக்கம் மன்மதனைப்பழிக்கும் அழகையுடைய ஒரு இளவாலிபன் தன் கையிலும் மாலையை ஏந்தி நிற்கிறான். எங்கும் வேதகோஷம். சுமங்கலிகளின் இனிய கீதம் அப்பந்தலில் குழுமியிருக்கும் கூட்டத்தாரை மகிழ்விக்கின்றது. "கொட்டு கெட்டி மேளம்! ஹூம்" என்கிறார் சுந்திர கனபாடிகள். நாதசுரக்காரன் தன் மூச்சையடக்கி தன்னால் முடிந்தமட்டும் அழகாக ஊதுகிறான். மாலை மாற்றியாகின்றது. இவ்விருவரும் தாம்பத்ய வாழ்க்கையை அடைகின்றனர். பூரி கொடுக்கப்படுகின்றது. நான்கு நாள் விமர்சையாக கலியாணம் கொண்டாடப்படுகிறது. ஆனால் ஒரு விசேஷம். அவ்விஷயத்தை எழுத சற்றுகஷ்டமாய்த்தானிருக்கிறது. அதுதான் இப்பொழுது ஒரு பெரும் பிரச்னையாக இருக்கின்றது. ருக்மணி என்ற 14 வயதுடைய ஒரு மங்கை மாஜி சுமங்கலி தலைமயிருடன் அங்கு கூடியிருந்த சுமங்கலிகளுடன் கலந்திருந்தாள். அவள் தான் பதியையிழந்த பிற்பாடு முதன்முதலாக இந்தக் கலியாணத்திற்கு வந்தாளாகையால் தானும் அங்குகூடியிருந்த சுமங்கலி இளஞ்சிறுமிகளுடன் கலந்து பாட்டுப்பாடி, நலங்கு முதலிய கேளிக்கைகளில் கலந்துகொண்டு விட்டாள். இது சேவிஹோமம் என்ற ஐந்தாநாளில் தான் தெரியவந்தது. மணப்பெண்ணின் தாயாருக்கும் மாப்பிள்ளையின் தாயாருக்கும் வந்துவிட்டது கோபம்! அவர்கள் வேட்டை நாயைப்போல் சீறி விழுந்தார்கள். வாய்க்கு வந்த மட்டும் திட்டினார்கள். ருக்மணியின் கண்களில் நீர் ஆறாகப் பெறுகிற்று. அவள் வெறி கொண்டவள் போலானாள். ருக்மணி அவர்களைப் பார்த்து 'நானும் சுகமாக எல்லோரைப்போல் வாழலாமென்று இன்பக்கனவு கண்டு கொண்டிருந்தேன்! ஈஸ்வரன் இந்த கதிக்குள்ளாக்கி விட்டார்! இது சமூகத்தின் சீர்கேடால் ஏற்பட்டதே யொழிய வேறில்லை! நான் செய்தது தப்பிதமாகத் தோன்றவில்லை. தப்பிதமாகத் தோன்றினால் மன்னியுங்கள்,'' என்று அழுது கொண்டே போய்விட்டாள்.

சகோதரிகளே! இதை வாசிப்போர் மனம் எப்படி இருக்கும். புருஷன் வாசனையே தெரியாத அபலைகளை இப்படி நமது சமூகம் எவ்வளவு நாள் நிற்கதிக்காளாக்கி கொண்டிருக்கப்போகிறது? மாதர் சங்கங்கள் கூட்டிப் பிரயோஜனமென்ன? வாயளவில் பேச்சுக்களும் பிரசங்கங்களும் செய்வதில் என்ன பயன்! நம்மவர்களுக்குள் சாஸ்திரத்திற்கு கட்டுப்பட்டுத்தான்

நடக்க வேண்டும், எல்லாம் தலைவிதி என்ற மனப்பான்மை யொழிந்தாலல்லவோ நமது சமூகம் மாறுபடும். இப்பொழுது வேண்டியது மன மாற்றமே! நான் எழுதுவது கதையல்ல. உண்மையாய் நடைபெற்ற, பெற்றுவருகிற சம்பவமே.

பெண்ணிற்கு வயது பத்தே. பெண்ணின் தகப்பனார் பழுத்த வைதீக சனாதனி ஹிந்து என்று பெருமை பாராட்டிக் கொள்பவர். சாரதாசட்டத்திற்குப்பயந்து புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்திலேயே மணம் நடத்தப்பட்டது.

காந்தவிசிறி விர் என்று சுழல்கின்றது. ஒரு ஒய்யாரமான கட்டிலில் மாப்பிள்ளை ராமு படுத்துக்கொண்டிருக்கிறான். அவன் தேகமுழுவதும் கம்பளியால் போர்த்தப்பட்டிருக்கிறது. அவனெதிரில் ஒரு சிறு மேஜையின்பேரில் அநேக மருந்து சீசாக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கும் நிசப்தம். ராமுவின் தகப்பனார் இமை கொட்டாமல் ராமுவைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஜுரம் வெகு மும்மரமாக அடிக்கிறது. ஏதோ ராமு உளர ஆரம்பித்தான்! ஒரே பிதற்றல். அங்கு அப்பொழுது வந்த டாக்டர் சாமிநாதன் ராமுவின் கையை பிடித்துப்பார்த்தார். "பயப்படாதேயுங்கள் சார். இது டிலிரியம். ஜுரத்தின் வேகத்தில் பிதற்றுகிறான். வேறொன்றுமில்லை. இதோ இந்த இஞ்சக்ஷனைச் செய்கிறேன் பாருங்கள்" என்று ஒருவித திராவகத்தை ஒரு ஊசியின் முனைவழியாக ராமுவின் வலது கையில் நரம்புக்குள் ஏற்றினார். ராமுவின் பிதற்றல் சற்று நேரத்திற்கெல்லாம் அடங்கினாற்போல் தோன்றிற்று. ரூபாய் பத்தை சுண்டி சுண்டிப் பார்த்து வாங்கி ஜோபியில் போட்டுக் கொண்டு டாக்டர் சாமிநாதன் பம் பம் என்று தன் மோட்டாரின் ஹாரனை அழுத்தி சப்தம் செய்து கொண்டு மறைந்து விட்டார். ராமுவின் கதியென்ன! ராமு பிரக்ஞையை இழந்தான். பேச்சு மூச்சில்லை. ராமுவின் தகப்பனார் தன் உறவினரை அழைத்து வந்தார். எல்லோரும் ராமுவை உற்று நோக்கினர். ராமு ஒரே தூக்கமாக தூங்கிவிட்டான். ராமுவின் மாமனாரும் அவரது சம்சாரமும் குழந்தை சீதாவும், ஏற்கனவே தந்தி அடிக்கப்பட்டிருந்ததால் அப்பொழுது மனம்பதர, வியர்க்க வியர்க்க வந்தார்கள். எங்கும் குழப்பம். ஒரே அழுகை. ராமுவின் தாயார் அவ்விளங்குழந்தை சீதாவின் மோவாக்கட்டையில் தன் முழு ஆத்திரத்துடன் "அடீ சனீஸ்வரனே! எந்த வேளையில் ராமுவின் கழுத்தில் மாலையிட்டாயடீ" என்று குத்து விட்டாள். எங்கும் ஒரே கலவரமும் வசவும் திட்டும் தான் மிஞ்சியது.

இளங்குழந்தை, பால்மணமாறாத பத்து வயது சீதா பதியை யிழந்து பரிதவிக்கலானாள். இது பரந்தாமனின் செய்கையோ! மானிடர்களின் செய்கையோ! சமூகம், ஆசாரம் என்று சொல்லுவோரின் கொடுமையோ! பால்ய விவாஹத்தை நிறுத்துங்கள், நிறுத்துங்கள் என்று கூவிப்பயனில்லை. நாமே சக்தி. சக்தியில்லாமல் சிவம் ஆடுமா? சக்தி யில்லாமல் இயந்திரங்கள் சுழலுமா? சக்தியில்லாமல் எக்காரியம் செய்ய முடியும்? சக்தியின் ஸ்வரூபமாக விளங்கும் நாம் தான் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய புருஷர்களின் மனதை மாற்ற நம்மாலேதான் முடியும். நாம் தீவிரமாக சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவோமானால் விதியை மதியால் வெல்லலாமென்பதே எனது துணிபு. சகோதரிகாள்! விழிமின்! விழிமின்!! விதியைக் குறைகூறி என்ன பயன்? சமய சந்தர்ப்பங்களுக்கும் காலதேச வர்த்தமானங்களையும் ஒட்டி அவ்வப்போது அவசியமெனத் தோன்றும் மாறுதல்களை அங்கீகரித்து நடப்பது சாஸ்திர விரோதமாகாது.



# பண்டித ராமாபாய்

“கண்ணன்”

ஸ்திரீகளின் முன்னேற்றத்தை தங்கள் வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டு அதை அபிவிருத்தி செய்வதில் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து சர்வசதாகாலமும் அத்தூய சேவையிலீடுபட்டு மறைந்த ஸ்திரீ சிரோன்மணிகளில் பண்டித ராமாபாய் அவர்கள் ஒருவர். ஸ்திரீகளின் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த ஆதிகர்த்தாக்களில் ராமாபாய் ஒரு உன்னத ஸ்தானம் பெற்றிருக்கிறார். அவரது வாழ்க்கையில் எண்ண முடியாத அறிவு வளர்ச்சிக்கான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனது இளம்பிராயத்தில் அவர் அநுபவித்த கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல. அவர் தன் பால்யத்தில் பட்ட இன்னல்களும் அநுபவித்த அல்லல்களும் சொல்ல முடியாதவை. இந்த கரடு முரடான வாழ்க்கையே பின்னர் தான் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய சேவைக்கு அவரைத் தயார் செய்தது. அவர் மிகுந்த ஏழைக்குடியில் பிறந்தவரே. பிரமாதமாக பி.ஏ., எம்.ஏ., படித்து, தினசரிப்பத்திரிகைகளை வாசித்து அந்த ஊக்கத்தில் அவர் சமூகசேவையில் ஈடுபட்டவர் அல்லர். அவர் கற்ற கல்வியெல்லாம் அவரது வனவாசத்தில் தன் தாய்தந்தையரிடமிருந்தே. அவருக்குத் தாயே குரு, தந்தையே வழிகாட்டி. அவ்விருவரின் வாழ்க்கையே ராமாபாய்க்கு எவ்வளவோ உயரிய லக்ஷியங்களைப் போதித்தது. தாயார் தன் குமாரிக்கு நற்போதனைகளும் கல்வியும் கற்றுக்கொடுத்தார்.

## தந்தை

ராமாபாயின் தந்தையின் பெயர் ஆனந்த சாஸ்திரி. அவர் பிரபல வித்வான். மஹாபண்டிதர். ஸ்ரீமதி ராமா தான் 1883-ம் வருஷம் பம்பாய் கவர்னர் சர் பார்ட்டில் ப்ரெரிக்கு எழுதிய கடிதமொன்றில் தன் பால்ய சரிதையைப்பற்றி வெகு அழகாக வர்ணித்திருக்கிறார். அதன் விவரங்களை வாசிப்போரின் மனதில் ஓர்வித புது உணர்ச்சி யேற்படுகிறது. ஆனந்த சாஸ்திரியாரின் வித்வத்மகிமை மைசூர், பரோடா, இந்தூர் முதலிய சமஸ்தானங்களில் வெகு பிரசித்தமாயிருந்தது. பீஷ்வாக் குடும்பத்தில் இவர் நெருங்கிப் பழகிவந்தார். சிறு வயதில் அப்பொழுதிருந்த பீஷ்வாவின் மனைவி ஸ்ரீமதி வாரணாசிபாய் சாஹிபுடன் ஒத்து சமஸ்கிருதம் கற்றுவந்தார். அப்பொழுது ஆனந்த சாஸ்திரிக்கு ஸ்திரீகள் எல்லாக்கலைகளையும் கற்று முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணம் உதித்து விட்டது. சாஸ்திரப் பயிற்சியும், இதரகலைகளில் அவர் அடைந்த பாண்டித்யமும் ஸ்திரீகளை அடிமைப்படுத்தி அறியாமைப்படுகுழியில் ஆழ்த்திவைக்கவேண்டும் என்று அவருக்கு எடுத்துச் சொல்லவில்லை. மெய்யறிவு மாதர்களுக்கும் அத்தியாவசியம் என்பதை தான் பீஷ்வாவின் வாழ்க்கைத் துணைவியுடன் கல்விபயிலும் போது ஆனந்தசாஸ்திரி உணர்ந்தார்.

## எதிர்ப்பு

பின்னர் தான் எது நியாயம் என்று நினைத்தாரோ அதை நிறைவேற்றி வைக்க

எண்ணித் தன் உத்தம பத்தினிக்கும், புதல்விக்கும் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார். அதனுல் கிராமத்தாரிடையே பெரிய பரபரப்பு ஏற்பட்டது. வைதீகர்கள் பெண்களுக்குக் கல்வி அளிப்பது சாஸ்திரவிரோதம் எனக் கூக்குரலிட்டார்கள். அவர் குடும்பத்தை பஹிஷ்கரிக்கவேண்டும் என்று ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. மதகுருவும் பெண்கல்வி கூடாது என்று சாஸ்திரிக்குச் சொன்னுர். குருவுக்கும் இவருக்கும் பலத்த விவாதம் நடந்தது. கடைசியில் குருவே தோல்வியுற்றுர். ஜாதிப்பிரஷ்டப் பூச்சாண்டியைக் காட்டியவர்கள் பாச்சாபலிக்கவில்லை. அம்முயற்சியும் வீணுனது. அவர் ஒரு குருக்கள், பண்டிதர்களின் சபையை ஏற்படுத்தினுர். சமூகவிஷயங்களைப்பற்றி அச்சபையில் அடிக்கடி பெரியவிவாதங்கள் நடைபெறும். ஏழுவருஷ முயற்சிக்குப்பின் பெண்கல்வி சாஸ்திர விரோதமானதல்ல, சாஸ்திர சம்மதமானதே என்று எல்லா பண்டிதர்களும் ஒப்புக்கொண்டு தங்கள் கைச்சாத்திட்ட ஒரு பிரகடனத்தையும் வெளியிடுமாறு ஆனந்த சாஸ்திரி செய்தார். இந்த மன உறுதியும், விடாமுயற்சியும், தான் எடுத்தகாரியத்தை எப்படியாவது சாதித்து விடுவது என்ற பிடிவாதகுணமும் ராமாபாயிடமும் இருந்தன. அது அவர் தன் தந்தையிடமிருந்து கற்றவைகளே.

ஆனந்த சாஸ்திரி தன் ஆயுட்காலம் பூராவும் மதசேவையிலும், வேதாந்த விசாரணையிலுமே செலவழித்து வந்தார். இவர் சில வருஷங்கள் மைசூர், நேப்பாள சமஸ்தானங்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். சில வருஷங்கள் ஸ்தலயாத்திரை செய்து வந்தார்.

## தாயார்

ராமாபாயின் தாயின் பெயர் லக்ஷ்மி பாய். இவர் கணவனுக்குற்ற மனைவி. அவரிடம் பயபக்தி சிரத்தையுடன் நடந்து வந்தார். நற்குணவதி. லக்ஷ்மியை ஆனந்த சாஸ்திரி இரண்டாவது தாரமாக மணந்தார். அவர் பணத்தை ஒரு பொருட்டாக நினைத்தவரல்லர். இவரும், லக்ஷ்மியும் கங்கமலைக் காட்டின் நடுவே ஒரு தனியிடத்தில் குடியேறினுர்கள். முதல் சில நாட்கள் இவர்கள் குடிசைகள் கூடக்கட்டிக்கொள்ளவில்லை. தன் கணவனருகாமையில் இருக்கும் போது வேறு என்னவேண்டும் என்று லக்ஷ்மியும் வெகு தைரியமாய் அவருடனிருந்தாள். இரவில் துஷ்டமிருகங்களின் சப்தங்கள் பயங்கரமாக ஒலிக்கும். ஆனுல் அஞ்சா நெஞ்சு படைத்த இருவரும் ஆண்டவனின் மீது பாரத்தைப்போட்டு நிம்மதியாகத் தூங்குவார்கள். கூடிய விரைவில் அவ்வாரண்யத்தில் ஓர் ஆஸ்ரமத்தை நிர்மாணித்தனர். பல சிஷ்யர்களும் வந்து சேர்ந்தனர்.

ஆனந்த சாஸ்திரி தன் சிஷ்யர்களுக்கு போதனை செய்யும் போது லக்ஷ்மிபாயும் சேர்ந்து படிப்பாள். விரைவில் சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்றுர். தன் கணவன் ஏதாவது காரியமாக ஆஸ்ரமத்தை விட்டு வெளியிடங்களுக்குப் போயிருந்தால் தானே சிஷ்யர்களுக்கு பாடங்கற்பிப்பாள். இப்பேர்பட்ட வன ஆஸ்ரமத்தில் தான் பண்டிதாமாய் பிறந்தார். இந்த "வனமலரின்" மணம் உலகெங்கும் பின்னர் கமழ்ந்தது. இந்த ஆஸ்ரமத்தில் தன் தாயார் வகித்து வந்த ஸ்தானமும் அவள் தனக்குக் கொடுத்து வந்த பயிற்சியுமே பின்னர்தான் கேட்காணில்





ஸ்தாபித்த சமூகசேவா சாதனத்தை நிர்வகிக்கத் தனக்குப் போதியசக்தி அளித்ததென்று ராமா கூறுவதுண்டு.

## தரித்திரம்

முன்னமேயே சாஸ்திரி செல்வத்தை மதியாதவர் என்று கூறியுள்ளேன். அவர் குடும்பமே தியாகிகளாலானது. அவருக்கு விரோதமாக சில உறவினர் சூழ்ச்சிகள் செய்து அவரை மிகுந்த தரித்திர நிலைக்குக் கொண்டு வந்துவிட்டனர். ஆனந்த சாஸ்திரி புராணம், கதைகள் முதலிய காலக்ஷேபங்களைச் செய்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்திவந்தார். கிராமம் கிராமமாய், ஊர் ஊராய் புராண உபதேசம் செய்ய குடும்பம் பூராவும் நடந்தே சென்றுர்கள். அப்படியே இந்தியா பூராவும் சுற்றிஞர்கள். ராமாபாயை லக்ஷ்மிபாய் ஒரு கூடையில் வைத்து எல்லா இடங்களுக்கும் தூக்கிச் செல்லுவாள். தாய் தந்தையர் மரணபரியந்தம் இவ்வாறே அலைந்து திரிந்தார்கள். அவர்களுடன் ராமாவும் எடுத்துச் செல்லப்பட்டாள். லக்ஷ்மி தன் குழந்தைக்கு எழுதப் படிக்கவும் பழக்கிவந்தார். ராமா எட்டு வயதிலேயே சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார்.

அவருக்கு ஒரு சகோதரனும் உண்டு. ராமாவுக்குத் தாய்தந்தையர் பால்யத்திலேயே விவாஹத்தைச் செய்து தங்கள் 'கடனை'த் தீர்த்துக்கொள்ளவில்லை. அதனுல் எவ்வளவோ வம்புகள் பரவின. திடீரென 1874-ம் வருஷம் ராமாவின் தாய் தந்தையர் இரு குழந்தைகளையும் விட்டு விண்ணுலகு ஏகினர்.

சகோதரியும் சகோதரனும் கிராமத்து ஜனங்களால் நிந்திக்கப்பட்டு அனேக துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டனர். அவைகளைத் தாங்கமாட்டாமல் இருவரும் பழையபடியும் யாத்திரைக்குப் புறப்பட்டு சுமார் ஆறு வருஷங்கள் இந்தியா முழுமையும், சுமார் 2000 மைல்கள் சுற்றி வந்தார்கள். சில சமயங்களில் வண்டிக்குப்பணம் இல்லாமல் நடந்தே இருவரும் பிரயாணம் செய்வார்கள். பல பாகங்களிலும் ஸ்திரீகள் எப்படி சாஸ்திர, மதங்களின் பேரால் பலவித நிர்பந்தங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறுர்கள் என்பதையறிய இந்த தேசயாத்திரை ராமாவுக்கு நல்ல சந்தர்ப்பம் அளித்தது. சென்ற இடங்களிலெல்லாம் பெண் கல்வியின் அத்தியாவசியத்தைப்பற்றி ராமா தீவிரப்பிரசாரம் செய்து வந்தார். நாளடைவில் இருவரும் ஹிந்தி பாஷையையும், வங்காளமும் கற்றுக்கொண்டு சுற்றி வந்தார்கள். 1880-ம் வருஷம் உற்ற சகோதரரும் டக்கா நகரில் ராமாவை அனுதியாக விட்டு இறந்தார்.

சுமார் ஆறுமாதங்கள்வரை ராமாபாய் ரொம்பவும் வருந்திஞர். பின்னர் ஒரு தீவிர சீர்திருத்தவாதியாகிய வங்கப் பிரபுவை மணந்து கொண்டார். அவர் ராமாவின் மீது உண்மையான அன்பு மிகுதியால் அவரின் சமூகசேவைக்கு வேண்டிய சாதனங்கள் செய்து கொடுத்தது மன்றி தானும் ராமாவுடன் மனப்பூர்வமாக ஒத்து வேலை செய்தார். தாம்பத்ய வாழ்க்கை வெகு இனிமையாகவே நடைபெற்றது. ஆனுல் இந்த இல்லற வாழ்வின் இன்பத்தை வெகுகாலம் ஸ்ரீமதி ராமா அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. ஒரு பெண் குழந்தை பிறந்து சில மாதங்களுக்கெல்லாம் ராமாவின் கணவர்

நமனுலகு ஏகினார். அவர் ரொம்பக்கடனாளியாக இருந்தார்.

கடன் பாரம் தொந்தரவு எல்லாம் ராமா ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. தான் இங்கிலாந்து செல்ல வேண்டும் என்று ஒரு பெரிய ஆசை ராமாவுக்கு ஏற்பட்டது. தன் கணவன் வைத்து விட்டுப்போன வீட்டைவிற்றுக் கடன்களைத் தீர்த்துவிட்டுச் சீமைக்கும் போகலாமென்ற எண்ணத்துடன் வீட்டை விற்றார். ஆனால் அந்தப்பணம் கடன் தீர்க்கமட்டும் தான் இருந்தது. உடனே ஒரு புஸ்தகம் எழுதி அதை விற்றார். அது இங்கிலாந்து செல்ல கப்பல் செலவு தந்தது.

## சீமைப் பிரயாணம்

இதற்குப்பின் இவர் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை யுண்டாக்கும் சில சம்பவங்கள் நேர்ந்தன. சீமைக்குப் போகு முன் ராமா பூனாவில் சிலகாலம் தங்கி சீர்திருத்தப்பிரசாரம் செய்தார். இதற்கு எதிரியாக வைதீகக் கட்சியார் கிளம்பினார்கள். ரானடே குடும்பத்தாரும், சீர்திருத்தவாதிகளும் ராமாவை ஆதரித்தார்கள். ஒருவித கிளர்ச்சியை உண்டு பண்ணி விட்டார்.

சீமைக்குச் செல்லுவதன் முக்கிய நோக்கம் வைத்தியக் கல்வி கற்று தன் சகோதரிகளுக்குப் பணி செய்யவேண்டுமென்பதே. இச்சமயத்தில் தான் இவருக்கு கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதரவு கிடைக்க ஆரம்பித்தது. அவர்களின் உதவியே பின்னர் ராமா தான் பிறந்த ஹிந்து மதத்தை விட்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதற்குக்காரணம் என்று பலர் கருதுகின்றனர். வான்டேஜ் மிஷன் சகோதரிகள் ராமாவை லண்டனுக்கு அனுப்பினார்கள். இவருக்குக் காது மந்தமாயிருந்ததால் வைத்தியக்கல்வி கற்றுக்கொள்ள முடியாது போயிற்று. மிஸ். பீல் என்ற பிரபல ஆங்கிலமாதின் நட்பும் லண்டனில் ராமாவுக்கு ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வியயின்று ஆங்கிலத்தில் "ஜாதி ஹிந்து ஸ்திரீகள்" என்று ஒரு புஸ்தகம் எழுதிப்பிரசுரித்தார். சீமையிலும் ஹிந்து ஸ்திரீகளின் நிலையைப்பற்றிப்பல பிரசங்கங்கள் புரிந்தார்.

பின் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு அவர் எழுதிய புஸ்தகம் பிரபல்யமடைந்திருந்தது. அவர் சென்ற நகரங்களிலெல்லாம் அமெரிக்க மாதர்கள் ராமாவை குதூகலமாக வரவேற்று உபசரித்து அவள் செய்யும் பிரசங்கங்களுக்கு ஏராளமாக விஜயம் செய்தார்கள். இங்கு அவருக்கு ஏராளமான பண உதவி கிடைத்தது மன்னியில் சிறந்த அனுபவமும் ஏற்பட்டது.

## சாரதா சாதனம்

அந்தப் பணத்துடன் இந்தியா வந்து சேர்ந்தார். பல இந்திய மாதர்கள், ஆடவர்களின் உதவியினால், இன்று தேச மெங்கும் புகழ் பெற்றிருக்கும் "சாரதா சாதனம்" என்ற பெண்கல்வி நிலையத்தை சௌபாதியில் ஒரு பங்களாவில் ஆரம்பித்தார். பிரபல சீர்திருத்த வாதிகள் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு அந்த ஸ்தாபனத்துக்குத் தங்கள் ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் அளித்தனர். அப்படிப்பட்ட பிரபலஸ்தர்களில் முக்கியமானவர்கள் ராவ்சாஹிப் மாண்ட்லிக், ராவ்சாஹிப் வி. ஏ. மோடக், ஜஸ்டிஸ் கே. டி. டெலாங்,





டாக்டர் பந்தார்க்கர், திரு. சந்தவர்க்கர் முதலியவர்கள். சாரதா சாதனத்தில் பெண்களுக்குக் கல்வி அளிப்பது மட்டுமன்றி விதவைகளுக்கு ஆதரவும், போஷணையும் கல்வியும் அளிக்கப்பட்டது. அனேகப் பெண்கள் அதில் பராமரிக்கப்பட்டு வந்தார்கள். பெண் நலத்துக்கான இதர வேலைகளும் அங்கு நடை பெற்றது.

## பஞ்ச நிவாரணவேலை

ராமாபாய் தனது பால்யகாலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிற சமயம் சில சமயங்களில் உண்ண உணவின்றி பிச்சை எடுக்கும்படியாய் நேரிட்டிருக்கிறது. பசியின் கொடுமையை நன்குணர்ந்திருந்தாராதலின் பசித்துவருவோருக்குத் தன்னாலானதைச் செய்ய யோசிக்கமாட்டார். தனது அன்னைக்கு அன்னம் கொடுக்கவேண்டி ஒரு சமயம் ராமா பிச்சை கேட்க வேண்டியிருந்தது. 1896-ம் வருஷம் ஏற்பட்ட பஞ்சகாலத்தில் சுமார் 300 சிறுமிகளைத்தன் சாரதா நிலயத்தில் சேர்த்துக் கொண்டு காப்பாற்றினார்.

## உதவி நிலயங்கள்

பூனாவுக்குச் சமீபத்திலுள்ள கெட்கான் என்ற இடத்தில் முக்தி சாதனம் என்ற பெயருடன் ஒரு சமூகசேவாஸ்ரமத்தையும் நிறுவினார். பம்பாய் நகரத்திலிருந்து சாரதா ஸ்தாபனத்தின் தலை நகரமும் கெட்கானுக்கு மாற்றப்பட்டது. இங்கு பெண்களுக்கு உயர்தரக்கல்வி யளிப்பதற்கு வேண்டிய சாதனங்களை ராமாபாய் ஏற்படுத்தி அவர்களிடை உயர்தரக் கல்வியைப் பரப்பினார். தவிர விபசாரம் முதலியவற்றில் இறங்கிப்பின்னர் நல்வாழ்க்கை நடத்த விரும்பும் மங்கையர்களுக்குப் புகலிடமாக கிருபாசாதனம் என்ற ஒரு பாது காப்பு நிலயத்தை (Rescue Home) யும் ராமா ஸ்தாபித்தார்.

1900-ம் வருஷம் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அச்சமயம் 1896-ம் வருஷப் பஞ்சத்தினின்றும் ராமாபாயால் காப்பாற்றப்பட்ட எட்டு ஸ்திரீகள் நிவாரண வேலையிலீடுபட்டு மெச்சற்குறிய சேவை செய்தனர். இப்பஞ்சத்தினின்றும் 1350 பெண்களைக் காப்பாற்றி முக்தி சாதனத்துக்குக்கொண்டு வந்தார்கள். மேலும் 600 பேர்கள் ஆஸ்ரமத்தின் உதவி பெற்று உயிர்போகாமல் தப்பித்தார்கள். இந்தப் பணிகளில் ராமாவுக்கு 150 ஸ்திரீ தொண்டர்கள் உதவி அளித்தனர். ஒரு பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப்பட்டு 50 உபாத்தியாயினிகள் வேலை செய்தனர். 400 குழந்தைகளுக்கு கிண்டர்கார்டன் பயிற்சி அளிக்கப்பட்டது. ஸ்திரீகளை உபாத்தியாயினி வேலைக்குப் பயிற்சி செய்வதற்காக ஒரு ட்ரெயினிங் ஸ்கூலும் ஸ்தாபிக்கப்பட்டது. தொழில் கல்விச்சாலையும் இணைக்கப்பட்டது. அதில் தோட்ட வேலை, எண்ணை ஆட்டுதல், பசு வளர்ப்பு, சலவை செய்தல், சமையல், நெசவு, சித்திரம் முதலியன கற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறாக ராமாவால் ஸ்தாபிககப்பட்ட எல்லா ஸ்தாபனங்களும் மென்மேலும் வளர்ச்சியடைந்து சிறந்தபணியாற்றி வருகின்றன.

ராமாபாய் தன் கடைசி காலங்களில் காலை 4 மணிக்கே எழுந்து தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விடுவார். சோம்பல் என்பது அவரிடம் துளியும் கிடையாது. எப்பேர்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் திடசித்தத்துடன் ஆண்டவன் மீது நம்பிக்கை தளராமல் இருந்து அவைகளை எதிர்த்து வெல்லுவார். 1922-ம் வருஷம் ஆண்டவன் பாதத்தை ராமாபாய் அடைந்தார். அவர் ஆத்மா தன் கடமையைச் சரிவர நிறைவேற்றி விட்டோம் என்று சாந்திபெற்று இருக்கிறது.

# ஜீவஜந்துக்களின் பாஷைகள்

## ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

மனிதர்களுக்கும் அந்தந்த ஜாதி மிருகங்களுக்கும், நன்றாய்க் கேட்கும்படி உரத்திக் கூவுகின்ற பசு, பக்ஷி, மிருகம் முதலிய உயர்ந்த ஜாதி ஜந்துக்களுக்கும் தமது கருத்தை வெளியிடத் தக்க பாஷை ஒன்று உண்டென்பது நம் மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இது ஒரு அற்புதமன்று; பசு, பக்ஷி, மிருகங்களுக்கு இருப்பது போல் நாம் காது கொடுத்துக் கேட்கத்தக்க தொனியொன்று இல்லாத ஈ, எறும்பு, பூச்சி, புழு முதலான அற்புத ஜந்துகளுக்குக் கூட அந்தந்த ஜாதிகளுக்குள்ளே அவ்வவற்றின் கருத்தை வெளியிடத்தக்க பாஷை யொன்று உண்டு. அதை நாம் நம்பக் காரணங்கள் அநேகமிருக்கின்றன. அந்தப் பாஷை ஒருவகை சத்தமாயிருந்தாலும் இருக்கலாம்; அல்லது பரிசமானாலுஞ்சரிதான். எந்த ஜந்துவுக்கும் தன் கருத்தை வெளியிடத் தக்க வழி ஏதோ ஒன்று உண்டென்பது அவ்வவற்றின் வழக்கங்களையும் செய்கைகளையும் பூரணமாய்ப்பார்த்து அறிந்திருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியலாம். மேற்சொன்ன ஜந்துக்களுக்கு ஒரு விதமான சத்தமுண்டாயிருந்தாலும் கருத்தை வெளியிடும் திறமை மாத்திரம் அந்தச்சத்தத்தில் அடங்கியிருப்பதாய்த் தெரியவரவில்லை. முக்கியமாய் அவற்றின் பரிசேந்திரியத்திலே தான் அது பொருந்தியிருக்கிறது. இந்தசக்தி எறும்புக்கும் ஈக்கும் அவற்றின் தும்பி அல்லது மீசையில் அடங்கியிருக்கின்றது. அவற்றின் தும்பிகளுக்கு உண்டாயிருக்கிற திறமை மனித இந்திரியங்களுக்குக் கூட இல்லையென்று சொல்லலாம். ஒவ்வொரு சமயங்களில் அவற்றின் ஓசை கூட ஒவ்வொரு செய்திக்கு அறிகுறியாகின்றது. இந்த ஜந்துக்களின் திறமையைப் பலபேர் பலவிதமாகப் பரிசோதித்திருக்கிறார்கள். அதில் முக்கியமான இரண்டொரு உதாரணங்களை அடியிற் குறிக்கிறேன்.

ஒருக்கால் வெல்லப்பானை ஒன்று ஒரு அறையில் வைத்திருந்தது. அதை எப்படியோ அறிந்து கொண்டு அளவற்ற எறும்புக்கூட்டம் அதற்குள் புகுந்து வெல்லத்தைக் கோலாகலமாய்த் தின்று கொண்டிருந்தது. அந்த வெல்லத்துக்கு உடையவன் எறும்பு வந்து தின்பதைப் பார்த்து அவைகளை ஒன்றில்லாமல் ஓட்டிவிட்டு இனி இதைக்கீழே வைத்தால் ஜாக்கிரதையாக இராதென்று அந்தப்பானையை இறப்பிலே கட்டித் தூக்கிவிட்டான். அவன் எறும்பு ஓட்டின போது தப்பித் தவறி ஒரு எறும்பு அதில் நின்று விட்டதோ என்னமோ அந்தப் பானையைக்கட்டித் தூக்கின கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரு எறும்பு அதினின்றும் புறப்பட்டுக் கயிற்று வழியாயிறங்கித் தன் புற்றுக்குள் சென்றது. அது போன அரை நாழிக்கெல்லாம் அந்தப் புற்றினின்றும் எறும்புப்பட்டாளம் ஒன்று புறப்பட்டுச் சுவர் வழியாயேறி இறப்பிற் சென்று கயிற்று வழியாய்ப் பானைக்குள் இறங்கி வெல்லத்தை வேண்டுமளவு புசித்துவிட்டு அந்தப்பட்டாளம் பானையைவிட்டுப் புறப்பட, மற்றொரு பட்டாளம் வந்து அதற்குள் இழிந்தது. இப்படியே அந்தப்பானை வெல்ல மெல்லாம் ஆய்ப் போமளவும் அந்தக் கயிற்றில்



எறும்பு சாரி ஓயாமல் போவதும் வருவதுமாகவுமே இருந்தது. இதைப் பார்க்கும்போது முன் அந்தப்பானையில் தங்கியிருந்த ஒரு எறும்பு போய் இவ்வளவு எறும்புக்கும் செய்தி சொல்லி அவைகளை அழைத்துக் கொண்டு வந்த தென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமுண்டோ? எறும்புகளுக்கு பாஷையுண் டென்பதற்கு இன்னொரு திருஷ்டாந்தம் பாருங்கள். ஒரு எறும்புப் புற்றை அடைத்துப் போட்டோமானால் அப்போது இது நன்றாய் விளங்கும். தங்கள் புற்றுக்குள் போக வழியில்லையென்பதைத் தெரிந்து கொண்டவுடனே எந்த மூலையில் எங்கே இடம் அகப்படுமோ என்று ஒவ்வொரு பக்கமாகப் போய்த் திரிந்துபார்க்கும்; உள்ளே புகும்படியாய் எங்கேயாவது ஒரு புற்று ஏதாவது ஒரு எறும்புக்கு அகப்படுமானால், அது அந்தக்ஷணமே திரும்பித் தன் கூட்டாளிகளண்டை வந்து தன் தும்பியை அசைத்துச் சங்கதி யறிவித்து, அந்தப்புற்றுக்குப் போகவேண்டிய வழி இன்னதென்று சொல்லி விட்டு மற்றத் தோழர்களையும் தேடிக்கொண்டு போனாலும் போகும்; அதைக் கூட அழைத்துக்கொண்டு போய் வழியைக் காட்டினாலும் காட்டும். இப்படியே எல்லா எறும்புகளையும் அது அந்தப் புற்றுக்குள் கொண்டுவந்து சேர்க்கும்.

எறும்புகள் ஏதாவது ஒரு வேலை செய்யப்புகுந்தால் அப்போது அவைகளுக்குத் தலைவனாகயிருக்கும் ஒரு எறும்பு தன் தும்பியை அசைத்து ஒரு விதமான கூச்சலிடுகின்றது. அதைக் கேட்டவுடனே வேலையிலிழிந்திருக்கிற மற்ற எறும்புகளெல்லாம் தாமும் ஒரு விதமாய்க் கூச்சலிட்டு முன்னிலும் அதிகமாய் உழைத்து வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன. அதைப் பார்த்தால் முதலில் தலைமையாயிருந்த எறும்பு இட்ட கூச்சல் நன்றாய் வேலை செய்யும் படியாகச் செய்த கட்டளை போலவும், பின்பு உண்டான மற்ற எறும்புகளின் கூச்சல், அதற்கு அங்கீகார வார்த்தை போலவும் தோன்றுகின்றதல்லவா?

ஒரு ஜாதி எறும்பு, மற்றொரு ஜாதி எறும்பின் மேல் படை யெடுத்துப் போம் போதும் இவ்வகையான குறிகள் அநேகம் காணப்படுகின்றன. முதலில் சேனைத் தலைவனாயிருக்கும் எறும்பு ஒரு விதமாய்க் கூவ, அதைக் கேட்டவுடனே எறும்புப் படைகள் விசேஷமாய் வந்து கூடுகின்றன. போதுமான சேனை வந்த பிறகு, பகையாளி நிலையை வேவுபார்த்துக் கொண்டு வரும்படி தூதனுப்பிச்செய்தி தெரிந்து கொண்டு அணிவகுத்து ஒழுங்காய்ச் செல்ல ஆரம்பிக்கின்றன. அப்படி சேனை நடந்து கொண்டிருக்கும்போது முன்னணிக்கும் பின்னணிக்கும் போக்கு வரவு ஓயாமல் நடந்து கொண்டேயிருக்கும். சத்துரு சேனையண்டை போனவுடனே சண்டை ஆரம்பமாகின்றது. பாதி சண்டை நடக்கையில் சேனை போதாதென்று தெரிந்தால் புதுப்பட்டாளங்கள் வரவழைக்கப்படும். இப்படியே அவை தமக்குத்துன்பம், வருத்தம், பயம், அபாயம், முதலியவை நேரிடப் போவதாயிருந்தால் அவைகளைக்கூட முன்னதாய்த் தெரிந்து கொண்டு ஒன்றுக்கொன்று தெரிவித்துக் கொண்டு பத்திரமாய்க் காத்துக் கொள்ளுகின்றன. யாராவது தாண்டிப் போகக்கண்டால் அதைத் தூக்கிக் கொண்டுபோய்க் கடித்துக் கொல்லாமல் விடுவதில்லையாம்.


இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் எவ்வளவு யுக்தியும் ஆலோசனையுமிருந்து நடந்தேற வேண்டும்? ஒன்றின் கருத்தை மற்றொன்றுக்குத் தெரிவிக்கத் தக்க பாஷையொன்றில்லாமல் இந்தச் செய்கைகள் ஒருக்காலும் நடவாதென்பது மேற்கூறிய விஷயங்களால் யாவர்க்கும் தெளிவாய்த் தெரிந்ததுதான். அந்தப் பாஷையும் இப்படிப்பட்டதென்று ஒருவாறு தெரியவருகின்றது. தமக்கு நேரிடும் அபாயத்தை வெளியிட வேண்டுமானாலும், தமக்கிருக்கிற கோபத்தைக் காட்ட வேண்டுமானாலும் அப்போது எறும்புகள் வளைந்து வளைந்தோடி எதனுடன் செய்தி தெரிவிக்கவேண்டுமோ, அதன் தும்பியிலும் அடிவயிற்றிலும் தமது தலையினாலும் தாடையினாலும் முட்டுகின்றன. எல்லாக் காரியத்திற்கும் எறும்புகளுக்கு முக்கியமாயிருக்கிற கருவி தும்பியொன்றுதான். அவற்றின் சேனை படையெடுத்துச் செல்லவேண்டுமானால் அவை ஒன்றுக்கொன்று தும்பியால் முட்டிக் கொள்கின்றன. இது தான் படையெடுக்கவேண்டுமென்பதற்கு அடையாளம். ஏனெனில் இவ்விதமாய்ச் செய்தி தெரிந்துகொண்டவுடனே அவை யெல்லாம் ப்ரயாணப்படக் காண்கிறோம். தமக்குப் புதிதாய்த் தெரிந்த செய்தியை மற்றொன்றுக்கு அறிவிக்க வேண்டுமானால் அப்போது ஒருவகைக் குறிப்போடு, தும்பியாலும் முகத்தாலும் முட்டிக் கொள்கின்றன. பசித்து இரை தேவையாயிருந்தாலும், எதனிடத்தினின்றும் இரை பெற வேண்டுமோ, அதன் தும்பியைத் தமது இரண்டு தும்பியையும் அதிக சுறுசுறுப்புடன் அசைத்துக்கொண்டு போய்த் தட்டுகின்றன. இவ்வகையாகவே அநேகம் ஜீவன்கள் குறிப்பு காட்டிப் பேசிக்கொள்ளுகின்றன.

தேனீயும் எறும்பைப் போலவே தங்கள் கருத்தை ஒன்றுக்கொன்று வெகு திறமையாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றன. எல்லாகாரியங்களுக்கும் முக்கியமான உறுப்பு அவைகளுக்கும் தும்பிதான். ஒரு ஈக் கூட்டம் ஓரிடம் விட்டு மற்றோரிடம் போகவேண்டுமானால் முதலில் நல்லதாய் ஓரிடம் பார்த்து வரும்படி ஒரு தூதனையனுப்பும். அந்த தூதன் புறப்பட்டுப் போய் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்து நல்லதாய் ஓரிடம் கண்டு பிடித்துக் கொண்டு அந்தக் கூட்டத் தண்டை ஓடி வரும். அது வந்தவுடன் அந்தச் சேனையெல்லாம் இருப்பிடம் விட்டுப் பறந்தோடும். தூதன் பார்த்த விடம் எல்லாவற்றிற்கும் பிடித்திருந்தால் அங்கே கூடுகட்ட ஆரம்பிக்கும். தேன் கூட்டின் பெருமை நேராகப் பார்த்து ஆராய்ந்து பார்த்தவர்களுக்கல்லாது தெரியாது. சிற்ப சாஸ்திரத்தைக் கரை கண்ட பெரும் பண்டிதர்களாலே கூட இப்படிப்பட்டதென்று உத்தேசிக்கக் கூடாத விநோதக் கட்டடத்தை அமைக்கின்ற ஈக்களின் திறமை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும். கூடு கட்டினபிறகு வேறு இனத்துப் பறவை யொன்றும் அதனுள் வந்து நுழையாதபடி, ஒரு ஈயைப் பத்திரமாய் அந்தக் கூட்டு வாயிலில் காவல் வைத்து மற்றவை யெல்லாம் தேன் தேடிக் கொண்டு வர வெளியே போகும். இப்படியே இப்பூமண்டலத்திலுள்ள ஒவ்வொரு ஜந்துவும் அததின் காரியத்தைச் சரியாகவே நடத்தி இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் காரியங்





மெய் அன்பு



பம்பாய் விக்டோரியா தோட்டத்தில் ஓர் காட்சி



**ஸ்ரீமதிகள் ஏ. சாவித்திரி, கே. ஜானகிதேவி.**

இவ்விருவரும் பம்பாயில் நடைபெற்ற லலிதகலா பரீட்சையில் முதன்மையாகத் தேறியிருக்கிறார்கள்.



களெல்லாம் பாஷையில்லாமல் என்றைக்காவது நடக்கக்கூடுமா?

பிடிவாதமின்றிப் பொதுவாய்த் தத்துவ சாஸ்திரி யொருவன் இவ்வுலகத்தைப் பரிசோதித்து பார்ப்பானானால், ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுமுள்ள கருணைக்கடலான கடவுள், இப்பூமண்டலத்துப் பிராணிகள் எல்லாவற்றிற்கும் சுகதுக்கங்களை அனுபவிக்கத் தக்க திறமையை அளித்திருப்பது மாத்திரமேயன்றி, தங்கள் தங்கள் சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், வியஸனம், எண்ணம், ஆசை, முதலியவைகளை வெளியிடத் தக்க திறமையையும் அளித்திருக்கிறாரென்பதை உறுதியாய்ச் ஸ்தாபிப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

சிறிதாகட்டும், பெரிதாகட்டும், எந்த ஜந்துக்கும் பேசும் திறமை அடியோடு இல்லவே இல்லையென்று ஒருவராலும் மறுத்துரைக்கல் ஆகாது. ஒளிக்கு மூலாதாரமான சூரியன் இப்பூமண்டலமெங்கும் வெளிச்சமுண்டாகும்படி மிகவும் பளபளப்பாய் பிரகாசிக்கிறான். ஒரு சிறு விளக்கு சிறு வீட்டில் ஒரு சிற்றறைக்குள்ளே மாத்திரம் மினுமினுக்கின்றது ஆயினும் இவ்விரண்டும் ஒளியே யொழிய வேறல்ல. அப்படியே மனிதர்களுடைய புத்தி சாதுர்யத்துக்கும் மிருகங்களுடைய புத்தி சாதுர்யத்துக்கும் அவர்களுடைய பாஷைக்கும் உள்ள வேற்றுமை நல்ல நடுப்பகல் சூரியன் ஒளிக்கும், ஒரு சிறு விளக்கு ஒளிக்கும் உள்ள வேற்றுமைக்கு ஒப்பானதுதான். மிருகங்களுக்கு ஆலோசனைத்திறமை எவ்வளவு சொற்பமானதாயிருந்தாலும் அதனின் அளவுக்கு அது ஆலோசனைத் திறமைதானே? மனிதர்களுக்குள்ளே ஒருவன் சிற்றறிவுடையவனாகவும், ஒருவன் பேரறிவுடையவனாகவும் இருப்பது போலவே, மிருகங்கள் அற்பமான அறிவுடையவையாயும் மனிதர்கள் விசேஷமான அறிவுடையவர்களாயுமிருக்கின்றார்களேயன்றி வேறல்ல.

# பெண்ணுயர்வு

## திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை, டர்பன்

மானிடப்பிறவியிலும், சகல சீவராசிகளிலும் உள்ள பாகு பாடு போலவே, ஆண், பெண் என இருபாலரையும் கடவுள் சிருஷ்டித்துள்ளார்.

இருவரும் மனமொத்துத் தங்களுக்குள்ள உலகக் கடமைகளைச் செய்து இறுதியில் தன்னையடைய வேண்டுமென்பதே இறைவனின் திருவுள்ளம்.

ஆண்களைப் போலவே ஸ்திரீகளும் புத்தியையும் சித்தத்தையும் படைத்தவர்கள். இன்னும் சொல்லப்புகின் ஆண்பாலரைவிடப் பெண்கள் எடுத்த காரியத்தைத்திட சித்தத்துடன் சாதிக்க வல்லவர்கள் என்பதற்கு ஐயமில்லை.

மகாத்மா காந்தியடிகள் தன் சுய சரித்திரத்தில் கஸ்தூரிபாய் மெய்யுணர்வுள்ளவளாய், தான் செய்யும் காரியத்திற்கு அநுகூலியாய் இருந்திராவிடில் தன் நோக்கப்படி தான் இவ்வளவு காரியம் செய்திருக்கவியலாது எனச் சொல்லி இருப்பதை அதை வாசித்த நேயர்கள் அறிவார்கள். இருவரும் மனமொத்துச் செய்யும் காரியங்கள் இத்தகைய மேன்மையை அடைகின்றன.

வீரபராக்கிரமம் மிகுதியும் கொண்ட நெப்போலியனும் ஒரு இடத்தில் தாய்மார்களே புத்திரர்களை தீரராகவும் நல்லவர்களாகவும் செய்ய வல்லவர்களென்றும், தன் தாயின் கூர்மையான புத்திமதியாலும் நல்லுபதேசத்தாலுமே தான் அவ்வளவு தீரமான செயல்களைச் செய்து வெற்றி கொண்டதாகவும் சொல்லி இருக்கிறார்.

ஓர் ஆங்கிலக்கவிஞரும் "The hand that rocks the cradle rules the world," "தொட்டிலை யாட்டும் அக்கையே இவ்வுலகை ஆளுகிறது" என்று ஓரிடத்தில் எழுதியிருக்கிறார்.

அது போலவே நம் தமிழ் பாஷையிலும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது," "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிகள் வழங்கி வருகின்றன.

ஆகவே பிள்ளைகள் சிறுவயதில் தாயாரால் வளர்க்கப்பட்டு அவர்கள் ஆதீனத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்பொழுதே நல்ல எண்ணங்களும் வார்த்தைகளும் நேர்மையான காரியங்களும் பழக்கமாகிவிடின், அவர்கள் பெரியவர்களாகும் போது நல்லவர்களாகவும், யாரிடமும் அன்பாய்ப் பேசுகிறவர்களாகவும், தங்கள் காரியத்தைக் குறித்த நேரம் தவறாமல் செய்கிறவர்களாகவும், காண்பவர்கள் இப்பிள்ளையைப் பெற்றவளன்றோ பாக்கியசாலி எனப்புகழ் கேட்கும் சிலாக்கியத்தை யடைகிறார்கள்.

ஒரு தேசம் முன்னேற்ற மடைய வேண்டின் அதுவும் ஸ்திரீகளால் தான் செய்ய முடியும். ஜனத்தொகையில் பாதியாயுள்ள ஸ்திரீகள் கல்வியிலும் அறிவிலும் முன்னேற்ற மடைந்தால் தான் தேசம் முன்னேற்ற மடையும்.



சிறு தேசமான ஜப்பான் முன்னேற்ற மடைந்த காரணங்களுள் பெண் கல்வியும் ஒன்று. அங்கு 100க்கு 90 பெண்கள் படித்தவர்களாய் இருக்கிறார்கள். இந்தியாவிலோ வென்றால் ஆங்காங்கு பல சகோதரிகள் உயர்தரக் கல்வியின் உரிமைப் பெற்றாலும், பல சகோதரிகள் தாய் பாஷையின் எழுத்துக்கூடத் தெரியாமல் இருக்கிறார்கள். ஆகையால் பெண்களுக்குப் போதுமானதும் வேண்டியதுமான துறையில் பல கல்விச் சாலைகள் ஏற்படுத்திக்கட்டாயக் கல்வியைப் புகட்ட வேண்டும்.

ஒரு இறக்கையை உடைய பறவை எப்படி மேல் பறக்கமுடியாதோ, அதுபோல ஒரு வகுப்புதாரரான ஆண்கள் மட்டும் முன்னேற்ற மடைதல் கூடாத காரியம். பெண்களும் கல்வியறிவு வளர்ந்தோங்கி சகல விஷயங்களையும் அறிந்தவர்களாய் இருந்தால்தான் நம் தேசம் உயர் வடையும். தகுந்த வசதியும் செளகரியங்களும் கொடுக்கப்படின் நம் இந்திய ஸ்திரீகள் சகலரும் கல்வியிற் சிறந்து விளங்குவார்களென்பதற்கு ஐயமில்லை.

பகவானும் யாருக்கு நாம் பூசை செய்யாவிட்டாலும், பதிவிருதையான ஸ்திரீகளை யாம் எப்போதும் பூசிப்போம் எனச் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் நற்குண நற்செய்கைகளையுடைய பெண்களால் உலகம் உயர்வடையும். அவர்கள் பிறந்த குலத்திலும் புகுந்த குலத்திலும் பொன் எனப் போற்றப்பட்டு கண் எனக்கருதப்படுவார்கள். சகல மக்களையும் படைக்கும் 'ஈசுவரன் என்றும் பெண்களுக்குப்பெருமையையும் புகழையும் அளிப்பாராக.

# தேன்

மனிதர் அருந்தும் இயற்கை உணவுகள் எல்லாவற்றிலும் சிறந்தது தேன். அதில் சர்க்கரை கலந்திருப்பதுடன், ஆரோக்ய வளர்ச்சிக்கான கால்ஷியம், இரும்பு பாஸ்பேட் முதலிய சத்துப் பொருள்கள் நிறைந்திருக்கின்றன. மிகுந்த வாசனை பொருந்திய பூக்களில் காணப்படும் கிளர்ச்சியூட்டும் தன்மை வாய்ந்த எண்ணைச் சத்தும் அதில் கலந்திருக்கிறது. அது ரொம்பவும் உபயோகமான ஆகாரம். பாலோடு தேன் கலந்து சாப்பிடுவதற்கு ஒப்பான பலனை வேறு பொருளில் பெற முடியாது. வளருங் குழந்தைகட்கும், வயோதிகப் பருவத்தினருக்கும் அது அளிக்கும் ஆரோக்யம் சொல்லி முடியாது. பாதம்பருப்பில் தேன் 18.6% அடங்கியுள்ளது. ஒரு இரவு முழுவதும் பாதம்பருப்பைத் தேனில் ஊறவைத்துக் காலையில் தினம் சாப்பிட்டால் உடல் வலிமை பெறும், நோய்கள் கிட்டாது.

# இந்திய மகத்துவம்

**திரு. டி. கே. கோவிந்தய்யர்**

இராகம் — கௌரி மனோஹரி — ரூபகதாளம்

## ஸ்தானம்

கத்துங்கடல் சூழும்வைய—கத்தினை மேல் — நாட்டார்
கருதியேஜந் தெனவகுத்த—கண்டங்களில் — சிரேஷ்ட
முற்றிடும் ஆஸ்யா வெனும்பே—ருற்றகண்டம் — அதிலே
உள்ளசிபேர் யாதுருக்கி—ஓங்கியதின் — மதிலே
சுற்றிய சீனம் குடக்கில்—துன்னரபித் — தானம்
தொல் பாரசீகமோடு—சூழ் பருமர் — தானம்
சித்தமினிப் புற உயர்த்தி—பேத்து முத — லான
தேயங்கட்குத் திலகமெனத்—திகழ்வதிந்தியா — நாடே

## அங்கங்கள்

கூந்தலென மேக மென்றும்—குலவிமயம் — சிரமே
குளிருமிரு புறக்கடலில்—குவிமுகில்கள் — கரமே
வேந்தர் பிரதி நிதி யுறையும்—மேனிலமா — நனமே
மேற்றிசைகீழ்த் திசைமலைகள்—விளங்கு — பெருந்தனமே
மாந்துகங்கை யோடு ஸிந்து—வளநாடும் — உரமே
மத்தியமாகாண மென்னு—மாநாடு — தரமே
காந்தெழிற்பம் பாய்சென்னை—கால் தொடைவி — லாவே
காரிகையிந் த்யாவெனு நம்—கண் மணிக்குத் — தானே

## அலங்காரம்

வங்காளப் பட்டுடுத்தி—வளைந்த நெடுந் — தரங்க
வாருதிமே கலையிறுக்கி—மன் கோலார்ச் — சுரங்க
சிங்காரத் தங்கமதில்—வங்காளக் — கடலும்
திகழெழுமா நதிகளுமேல்—திசை அராபிக் — கடலும்
நன்காக அளித்த நவ—ரத்னமணி — இழைத்த
நற்பணிபூண் டியர்மன்னர்—பொற்றுரையில் — தழைத்த
துங்கார முத்துவடச் சோபிதத்தால் — இருளைத்
துறந்தகில முழுவதிலும்—சிறந்ததிந்தியா — நாடே



## பொதுச் சிறப்பு

விண்ணுறைதே வருமுறைய விரும்புகின்ற — நாடு
வேனிலக லாது தென்றல் விருந்தளிக்கும் — நாடு
கண்ணகல் பூ மாதிருக்கண்—எனத் தகுந்த — நாடு
கடல் முரசம் புறமூன்றில்—கர்ச்சனை செய் — நாடு
எண்ணிய முக்கோண சக்தி என விளங்கும் — நாடு
இமய முதல் குமரிவரை—எல்லை கொண்ட — நாடு
புண்ணிய நாடு டன்போக— பூமியென்னும் — நாடு
பூமகள் வீற்றிருக்குமலர்—போலுமிந்தியா — நாடே

## நாட்டு வளம்

வானிலகு கற்பகமா—மரமெனத் தெங் — குலவும்
வளர் கமுகு தெங்கெனவா—னுலவிஎழில் — குலவும்
கானிலகு கழைகமுகு— தானெனவே — செழிக்கும்
கரும்பென நெற் கதிர்வயலில் கனகதாளம் — கொழிக்கும்
ஊனிலவி உயிர் தரித்தற்குரிய பண்டம் — யாவும்
ஊறு போகந் தனக்குரிய—உயர் பொருளு — மேவும்
ஆனிலுயிர் தேனுவென—அருத்தி யெல்லாம் — அளிக்கும்
அன்புருவ மானவிந்த்யா என்பது நம் — நாடே

எரிக்கு நிகர் கொடிய குணத் தினரிடர்செய் — தாலும்
ஈரமக லாத பெரியோரிதயம் — போலும்
தரிக்க வொண்ணாக் கோடையினில்—தவித்துயிர்கள் — நலியும்
ததியினும் தண்ணீத்தருமத் தானம்பல — பொலியும்
பருத்தமத யானையின் வெண் மருப்பொடகில் — தேக்கும்
பறித்துருட்டி நதிமருதப்—பணையருகிற் — சேர்க்கும்
கருத்த முகில் முழ வொலிக்கக் கண்டுமயில் — நடிக்கக்
கானங்குயில் செய்யு மிந்தியா வானது நம் — நாடே

கருங்குவளை மேய்ந்தெருமை—கன்றுள்ளிச் — சொரியும்
கனபாலுண் டியர்வாளை—கதலியினிற் — பரியும்
பருங் கதலிக் குலைமாவின் பைங்கனியிற் — சாயும்
பணைத்தவம் மாங்கனியும் பல—வின்கனியில் — தோயும்
அருங் கொம்பிற் றேனருந்தி—அத்தேனின் — அடைக்கொம்
படி கொம்பாய்மாதுளைச் செங் கனிப்பந்தாய் — ப்படிக்கும்
மருங்கிற் பள்ளிப் பிள்ளைகள் போல்—வானரம்பந் — தடிக்கும்
மாவளவிந் த்யாவளம்வர்—ணனையினள — வன்றே

# வீட்டுத் தொழில்கள்

"கோன்"

ஒருவரை யொருவர் தம்பதிகள் நம்பி அன்னியோன்னியமாய்க் குடித்தனம் செய்வது சரிதான். எனினும், ஞால வாழ்வில் இந்த அன்னியோன்னியம் நீடித்திராமல் இடையே தெய்வ சோதனையாய் மரணம்பிரித்து விடுகின்றது. மனைவியை இழந்தகணவன் ஏற்கனவே தன் ஜீவனத்துக்கு ஒருவகைதேடிக்கொண்டுள்ளானாதலால், மனைவி இறந்ததனாலேயே அவனது ஜீவனபாகம் கெட்டு விடுவதில்லை. அவனது காலட்சேபத்துக்கு எப்போதும் போல் ஒரு வருவாய் கிடைத்துப் பொழுதும் சுகமாகக்கழிகின்றது. ஆனால், கணவன் மரித்து விடிலோ மனைவியின் காலட்சேபம் சோதனைக் குள்ளாகின்றது. அவள் தன் கணவன் காலத்தில் தனக்கென்று எவ்வித சம்பாத்தியத்தையும் தேடிக் கொள்ளவில்லை. எந்தக் கைத்தொழிலிலும் பழகவுமில்லை. கணவனையே பூர்ணமாக நம்பி நின்றவளாதலின்—கணவனின் கையையே எதிர்பார்த்து நின்றவளாதலின்—கணவன் கண் மூடியதும் காலட்சேப செலவுக்கு என்ன செய்வதென்று பெரிதும் கலங்கிப் போகின்றாள். நேற்று பாலும் பாயாஸமும் உண்ட அவள் நிலை இன்று உப்பில்லாக் கஞ்சிக்கும் வழியற்றுக் கனத்த சோதனைக்குள்ளாய் விடுகின்றது. மனைவிக்குச் சொத்தும், வீடும், நிலமும் வைத்துச் செல்வோர் சிலரேயாக, மற்றவர் கதி பெருந்திகைப்பே தான். இதுவே 100ல் 80 பேரின் நிலை. பந்துக்களின் ஆதரவில் வாழ்வதும் இந்நாளில் கூடாமையாகின்றது. ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்தை ஆதரிக்கும் சக்தி பழங்காலம் போல் இப்போதில்லை. ஆதரிப்பினுங்கூட எத்தனையோ வசைகட்கும், பாரபக்ஷ பேதங்கட்கும் உள்ளாகிச் சகித்துக்கொண்டு கணவன் போன பின்பு உலக்கையையே துணை கொண்டு உயிர்வாழ நேர்கின்றது. நெல் குத்திப் பிழைக்க பாவையருக்கும் நெல் மிஷின்களால் பிழைப்பு கெட்டு விட்டது. எனவே, கணவனோடு கூடி வாழுங் காலந் தன்னிலேயே தனக்கென்று ஒரு தொழில் தெரிந்து கொண்டு அதில் ஒரு நான்கு பணம் வரவும் செய்துகொண்டு வாழப்பார்ப்பது பின்னுக்கு வரும் பெரும் சோதனையைத் தற்போதே சகிக்கக் கற்றுக் கொள்ளும் வழியாக இருக்கும். இந்த முக்கிய விஷயத்தை நம்மில் வெகுபேர் கவனிப்பதில்லை. என்னே அறியாமை! அவ்விதமாகக்கலங்கும் காலம் தங்கட்கு வராதென்றே பெரும் பாலோர் பேதமையால் எண்ணி விடுகிறார்கள்!!

நமது தேசத்தில் சில காலமாக சுதேச முயற்சி தோன்றி, அதனால் ஜனங்களது ஜீவனோபாயங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்கிற எண்ணம் பொதுவாய் உண்டாயிருக்கின்றது. ஆதிகாலத்துத் தொழில்கள் மலினப்பட்டுப் போய்விட்டபடியால், ஏழை ஜனங்கள் வருந்துவதை அனுபவத்திலேயே தெரிந்து வருகிறோம். மில்களில் லக்ஷக்கணக்கானவர்கள் மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்கிறார்கள்.




அநேகர் பரம்பரையாய்த் தங்கள் வீடுகளிலேயே யிருந்து செய்து வரும் தொழில்களைச் செய்து வருகிறார்கள். சுதேச முயற்சிகளால் பொது நன்மையை முற்படுத்த வீட்டுத் தொழில்களையும் விருத்தி செய்ய வேண்டும். பின்னல்களும், தையல் வேலைகளும் மற்றும் இவை போன்றவைகளும் இன்னும் சிலவும் வீட்டிலேயே செய்யக்கூடியவை. ஒரு பெண்ணுக்கு ஆர்மோனியம் வாங்கித் தருவதிலும், ஒரு தையல் யந்திரம் வாங்கித் தந்து பயிற்சியை உண்டாக்குவது பரமபிரயோஜனத்தை விளைவிக்கும். சௌராஷ்டிர மாதர்கள் தங்கள் வீடுகளிலேயே இருந்து நூல் நூற்றுத் தங்களின் காலக்ஷேப செலவுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அலங்காரமான பொம்மைகள் செய்தல் போன்றவற்றை இன்னும் பல ஸ்திரீகள் செய்து வருகிறார்கள். விநாயக சதுர்த்தசியின் போது விற்கப்படும் விநாயக மண்கலர் விக்கிரகங்கள் பெரும்பாலும் பலமாதக் கணக்காய்ப் பெண்களால் வீடுகளில் தயாரிகப்பட்டவைகளே. இவை சித்திரீகர்களின் வீட்டுப் பெண்கள் செய்யும் கைத்தொழில்களாக இருந்து வருகின்றன. எண்ணெய் விற்கும் வாணியச் செட்டியார்களின் மனைவிமார் அந்தத் தொழிலில் முக்கால் பாகத்தைத் தாங்களே செய்து விடுவாராயுள்ளார். இதில் கணவன்மாருக்கும் எவ்வளவோ பெரிய உதவி.

தற்காலம் நம்மவருள் கையினால் வேலை செய்து ஜீவிப்பது இளப்ப மென்கிற எண்ணம் சாமான்னியமாயிருக்க, சற்று கௌரவமான நிலையிலிருக்கும் ஸ்திரீகளுக்கு இந்த எண்ணம் இன்னுமதிகமாகவே இருக்கின்றது. இருந்தாலும், எல்லா வகுப்பினரிலும், எல்லாக்குடும்பங்களிலும் இந்த எண்ணமிருப்பதாகச் சொல்ல முடியாது. வடக்கே பல இடங்களில் ஸ்திரீகள் வீட்டுக் குள்ளேயேயிருந்து குடும்பங்களில் பிரயோஜனப்படும் சில சிறிய சாமான்களைச் செய்து விற்று சம்பாதிக்கிறார்கள். கூர்ஜர நாட்டில் ஸ்திரீகள் குல்லாய் செய்வது வழக்கமென்று சொல்லப்படுகிறது. தென்னிந்தியாவிலும் சில வீடுகளில் ஸ்திரீகள் போஜனம் செய்ய இலைகள் தைத்து விற்பது எல்லோருக்கும் தெரியும். கணவனை இழந்த பெண்களிற் பல்லோர் தோசை, ஆப்பம், இட்டிலி, புட்டு இவைகள் சுட்டு அதனாலும் ஜீவிக்கிறார்கள். புத்திசாலிகளான பெண்கள் தங்களின் கணவன் மாருடன் கூடி வாழ்க்கையிலேயே இந்தச் சிற்றுண்டித் தொழில்களை வீட்டில் செய்து வருவோராயிருக்கிறார்கள். காய்கறி விற்று ஜீவிக்கும் பெண்கள் தங்கள் பர்த்தாக்களுடன் கூடி, வேலை செய்து மார்க்கட்டுகளில் காய் கறிகளைக் கொண்டுவந்து வெகு திறமையோடும் வியாபாரம் செய்வதை நாம் அனைவரும் அறிவோம். நிலம் தோட்டங்கள் உள்ளவர்கள் பகல் முழுவதும் தோட்டங்களில் காய் கறி கனிகளைச் சேகரித்து மாலையில் வீடுகளுக்குக் கொண்டுபோய் சேர்த்து காலையில் மார்கட்டுகளில் மொத்த விலையாக விற்றுத் தீர்த்துப் பணத்துடன் பன்னிரெண்டு மணிக்குள் வீடுவந்து சேர்ந்து விடுகிறார்கள். சில பெண்கள் மருத்துவச்சிகளாகயிருந்து பிரஸவ காலங்களில் தங்களின் அனுபவத்தால் பெருமுதவிகள் செய்து அதனாலும் ஜீவிக்கின்றார்கள். சில படித்த பெண்மணிகள்


பெரிய இடங்களில் வாழ்க்கைப்பட்டு யாவுமிழந்து அகதிகளாகித் தங்களின் படிப்பின் திறமையால் உபாத்தியாயினிகளாகி சுகஜீவனம் செய்வதையுமறிவோம். அதி விசேஷமாக கிறிஸ்தவப் பெண்மணிகள் உபாத்தியாயினிகளாகித் தங்கள் கணவன்மாருடன் வாழ்கின்றனர். ஆணும் பெண்ணுமாக இருவரும் ஸம்பாத்தியம் செய்கிறார்கள். சில பெண்கள் பத்திரிகைகளுக்கு எழுதியும் நூல்களியற்றியும், பத்திரிகைகளை நடத்தியும் வாழ்கின்றார்கள். இம்மாதிரி பலவேலைகள் அங்கங்கே ஸ்திரீகளால் செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் ஸ்திரீகளுக்குக் கௌரவக் குறைவென்று சொல்வது புத்தியீனமாகும். கடன் வாங்கியும் பிறருக்கு அடிமைப்பட்டும், பந்துக்களுக்கு பாரமாயும், தகாத செய்கை செய்தும் ஜீவித்தல் இளப்பமேயன்றிக் கையினாலும் புத்தியினாலும் வேலை செய்து, பிறருக்குக் கஷ்டமாவது இம்சையாவது இல்லாமல் பொருளைக் கொடுத்துப் பொருள் வாங்கி மானமாய் ஜீவிப்பதில் என்ன கேவலம்? இவ்வாறு தொழில் செய்து ஜீவிப்பது உத்தமமே. அன்றி ஊராரை ஏமாற்றியும், பிறருக்குப் பாரமாயும், திட்டுவசைகளைக் கேட்டுக் கொண்டும் சுலபமாய் ஜீவிக்க முயலுவோர் கேவலம் அதமமானவர்களே யாவார்கள். தொழிலற்றிருப்பதே கேவலம். ஆடவர் சர்க்கார் உத்தியோகத்திலோ வேறு எந்த வகையிலோ மாதம் பத்து இருபது ரூபாய்கள் சம்பாதிக்கும் எளிய குடும்பங்களில் வீட்டு ஸ்திரீகள் வீட்டு வேலைகள் செய்த பிறகு ஒழிந்த நேரங்களில் மேற்குறித்த தொழில்கள் ஏதேனும் செய்து புருஷரது சம்பாத்தியத்துடன் தங்கள் சம்பாதனையையும் சேர்த்து கஷ்டமின்றி கௌரவமாய் ஜீவித்தலில் என்ன பிசகு இருக்கக் கூடும்? உயர்ந்த நிலையிலுள்ளோருக்கு கணவனுக்குப் பிறகு ஜீவிக்க செல்வ சம்பத்துக்களிருக்கலாம். தாழ்ந்த நிலையிலுள்ளோர் கணவனுக்குப் பிறகு எந்தத் தொழிலையும் செய்யத் துணிவும் (சக்தியும்) பழக்கமும் இருக்கலாம். நடுத்தர நிலையிலுள்ள ஸ்திரீகளின் பாடுதான் கணவனுக்குப் பிறகு பெரிய திண்டாட்டமும் திகைப்புமாகிறது. ஆகவே நடுத்தர நிலையிலுள்ளோர் தன்கணவனின் முன்பாகவே பிற்காலத்துக்குதவும் படியாக ஏதேனும் வீட்டுத் தொழில் செய்து பழக்கப்பட்டுத் தேர்ந்து அதனால் கிடைக்கும் வரும்படியையும் சேர்த்து ஜீவனம் செய்தல் மிகவும் அவசியமாகும்.





வின்ட்சர் தம்பதிகள்.



ஜெர்மனியிலுள்ள கருங்கானகத்தில் ஒரு பாகம்.



குதூஹலம்

# நேப்பாளம்

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

## இயற்கை அமைப்பு

இது ஒரு மலைப்பாங்கான தேசம். இந்தியாவுக்கு வடக்கிலுள்ளது. ஐக்கிய மாகாணம், பீஹார் ஒரிசா மாகாணங்களுக்கு வடக்கிலுள்ளது நேப்பாளம். இது ஒரு சுதந்திர நாடு. இதன் நீளம் சுமார் 500 மைல், அகலம் 150 மைல்.



நேப்பாள ஸ்திரீகள் கைத்தறியில் நெய்யும் காட்சி.

இந்நாட்டில் சமவெளிகள் என்பது துர்லபம். எங்கும் மலைச்சாரல்களே. உலகத்திலேயே மிகவும் உயர்ந்த இருமலைச் சிகரங்கள் நேப்பாளத்தில் இருக்கின்றன. அதன் வடபுறத்தில் எவரஸ்ட் சிகரமுள்ளது. கீழ்புறம் கிஞ்சிஞ்சிங்கா இருக்கிறது. தவளகிரியும் இங்கு உளது. தென்பாகத்தில் சில இடங்களில் விவசாயத்துக்கேற்ற பூமிகள் இருக்கின்றன. அவைகளில் நெல் முதலிய தான்யங்கள் விளைகின்றன. இப்பிரதேசமே சர்க்காருக்கு வருமானம் தருகிறது. இதரப் பிரதேசங்களில் ஜனத்தொகை ரொம்பவும் சொற்பம். ஆங்காங்கே குன்றுகளில் சிலர் கூடி வசிக்கிறார்கள்.

நேப்பாளத்தின் மத்தியில் நேப்பாளப் பள்ளத்தாக்கிருக்கிறது. இது சுமார் இருபது மைல் நீளமும், பதினைந்து மைல் அகலமும் உள்ளது. இந்தப்பள்ளத்தாக்கில்தான் நேப்பாளத்தின் நாகரிகம், ஜனத்தொகையின் பெரும்பான்மை, வியாபாரம், கைத்தொழில் முதலியன இருக்கின்றனவென்று சொல்லலாம். இதில்தான் நேப்பாள மகாராஜா வசிக்கிறார். சர்க்கார் தலைமை காரியாலயங்கள் யாவும் இங்கேயே இருக்கின்றன. இப்பள்ளத்தாக்குக்கு வெளியில் முக்கியமான நகரங்கள் ஒன்றுமில்லை. போக்குவரவு சாதனங்கள் மிகவும் குறைவு. எனவே இந்தப் பள்ளத்தாக்கே நேப்பாள ராஜ்யம் என்று கூடச் சொல்லலாம்.

## ஆதிகர்த்தா

இப்பள்ளத்தாக்கு கடல் மட்டத்துக்கு 4500 அடிக்குமேல் முன் ஒரு காலத்தில் ஒரு ஏரியாக இருந்ததாம். அதை **மஞ்சுஸ்ரீ** என்ற கடவுள் மலைகளைத் தன் வாளால் வெட்டி தண்ணீர் அம்மலை இடுக்குகளில் போய் மறையும்படி செய்தாராம். எனவே இவ்விராஜ்யத்தை ஸ்தாபித்தவர் **மஞ்சுஸ்ரீ** என்ற தெய்வம் எனச் சொல்லப்

படுகிறது. இந்நாள்வரை மஞ்சுஸ்ரீ நேப்பாளத்தின் பாதுகாப்புத் தெய்வமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. அத்தெய்வத்தின் உருவங்கள் பழைய கால சிற்பங்களிலும், சித்திரங்களிலும் காணப்படுகின்றன. பூசாஸ்திரிகளும் இது ஒருக்காலத்தில் ஜலப்பிரதேசமாயிருந்தது என்றும் பின்னர் பூமியானதென்றும், அந்த ஜலமே இப்பொழுதிருக்கும் பாகுமதி நதியாக மாறி இருக்கவேண்டுமென்றும் கருதுகிறார்கள். இதன் இதர முக்கிய நதிகள் காளுளி, காளி, திரிசூலி, சங்கோஸி, ஆருண், முதலியன.

ஆண்டனர். அவர்கள் நகர ஜனத்தொகையில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். இவர்கள் ஆண்டுவரும் போது பத்கான் என்ற ஊர் தலை நகராக இருந்தது. இது சிறிய தேசமாக இருந்து வந்தபோதிலும் அடிக்கடி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல ராஜகுமாரர்களுக்குப் பங்கிடப்பட்டு அதனால் உள் நாட்டுக் கலகங்களும், சச்சரவுகளும் அடிக்கடி நடைபெற்று வந்தன. 18ம் நூற்றாண்டில் மூவர் இதை ஆண்டுவந்தனர். ஒரு ராஜனை மற்ற இருவரும் நசுக்க எண்ணினர். அவன் கூர்க்க அரசனை பிரிதிவி நாராயணனை உதவிக்கு அழைத்தான். பிரிதிவி நாராயணன் உதவி செய்து, பின்

## ஹிந்து ஆதிக்கம்

இப்பொழுது இது சைனாவின் நட்பையும் பெற்றிருக்கிறது. பிரிட்டிஷாரின் நண்பனாக நேப்பாள மன்னர் கருதப்படுகிறார். இது ஆதியில் இந்தியாவுடன் சம்பந்தப் பட்டிருந்தது.



நேப்பாளதேசத்து ராணி.

இதை முன் ஆண்ட பல மன்னர்கள் இந்தியர்களே. இதன் மதமும் இந்து மதம் தான். இந்தியர்களின் பழக்கவழக்கங்களை நேப்பாளத்தினரும் பின்பற்றி வந்தார்கள். முதலில் இந்து பரம்பரையைச் சார்ந்த மன்னர்கள் இந்நாட்டை ஆண்டுவந்தார்கள். பின்னர் நீவார்கள் என்ற ஒரு மங்கோலிய வகுப்பினர் இத்தேசத்தை

தானே நேப்பாள ராஜாவானான். நீவார்கள் தோற்றார்கள்.

கூர்க்கர்கள் சீனர்களுடன் வலுச் சண்டைக்குப் போனார்கள். அவர்கள் இவர்களை அடக்கித் தங்களின் ஆதிக்கத்தை ஏற்கும்படி செய்தனர். ஆனால் சீன ஆதிக்கம் பேருக்குத்தானிருந்தது. அதுவும் சீன சக்கிராதிபத்தியம் போன





வுடன் மறைந்ததென்றே கூறலாம். பின்னர் இவர்கள் பிரிட்டிஷாருடன் சம்பந்தம் வைத்து முதல் கூர்க்க யுத்தத்துக்குப்பின் நல்லுறவுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

## ஜங்பகதூர்

இந்த நட்புக்குக்காரணமும், தற்சமயம் நேப்பாளம் இருக்கும் கௌரவ நிலைக்கும்



நேப்பாள இராஜகுடும்ப ஸ்திரீகளின் தோழிகள் தங்கள் உத்தியோக உடை யணிந்திருக்கிறார்கள்.

கர்த்தா 19ம் நூற்றாண்டு மத்தியில் நேப்பாளத்தின் பிரதம மந்திரியாயிருந்த ஜங் பகதூர் என்பவர். இப்பொழுதிருக்கும் அரசியல் முறைய ஸ்தாபித்தவர் அவர் தான். இத்தேசத்தின் ஆட்சி இருவர் களிடத்தில் இருக்கிறது. ஒருவர் பெயருக்கு மாத்திரம் மஹாராஜா. மற்றொருவர் உண்மையில் ஆட்சியை நடத்தி வைப்பவர். பெயருக்கு ஆட்சியின் தலைவராயிருப்பவர்தான் மகாராணா - நேப்பாள ராஜா - மகாராஜ் ஆதிராஜ் பொம்மை மன்னன். உண்மையில் ஆளுபவர் முதல் மந்திரி (Prime Minister). இவருக்கும் மஹாராஜா என்ற பட்டமுண்டு.

## ஜனங்கள்

நேப்பாளத்தின் ஜனத்தொகை சுமார் 40 லக்ஷம். இதில் பலவகுப்பினர்களும், ஜாதியாரும் இருக்கின்றனர். முக்கியஸ்தர்கள் கூர்க்கர்களும், நீவார்களும். இத்தேசத்தில் ஆறு பாஷைகள் பேசப்பட்டு வருகின்றன. நீவார்கள் உயரமாகவும் சற்று அழகானவர்களாகவும் இருக்கிறார்கள். கூர்க்கர்கள் யுத்த வீரர்கள். நீவார்கள் சிற்பம், கலை, சித்திர நிபுணர்கள். இருவகுப்பினரும் உடையில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியே இருக்கிறார்கள்.

## ஸ்திரீகள்

நேப்பாள ஸ்திரீகளில் நல்லஸ்திதியிலுள்ளவர்கள் பலவித நகைகளால் தங்களை அழகு செய்து கொள்ளுகிறார்கள். நகைகள் செய்து கொள்வதில் இவர்கள் அதிகப்பணம் செலவு செய்கிறார்கள். பல ரகங்களில் வெள்ளியில் கழுத்துச் சங்கிலிகளும் மார்பணிகளும் செய்து கொள்ளுகிறார்கள். மூக்கில் வெள்ளி, தங்கம், பித்தளை முதலியவற்றால் பெரிய புலாக்கு, மூக்குத்தி முதலியன அணிகிறார்கள். சங்கு, சிப்பி, முத்துக்களாலும் நகைகள் செய்து

கொள்ளுகிறார்கள். அவர்கள் வனப்பு இருபது வயதுக்குள்ளேதான். இவர்கள் முப்பது வயதடைவதற்குள் முகத்தில் சுருக்கங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஸ்திரீகள் (நீவார் வகுப்பு) துணி நெய்வதில் சமர்த்தர்கள். கைத்தறிகளையே உபயோகிக்கின்றார்கள். முன்பு மாதர்களுக்கு அவ்வளவு சுதந்திரம் இல்லை. இப்பொழுது கட்டுப்பாடுகள் குறைந்திருக்கின்றன.

பெண்களின் உடை வெகு ஆடம்பரமாக இருக்கின்றது. தங்கள் தலை மயிரை இவர்கள் வெகு கவனமாக வாரி பல விதங்களில் பின்னல்கள் போட்டுக்கொள்ளுகிறார்கள். தலையில் இயற்கைப் புஷ்பங்களையும், செயற்கை பூக்களையும் அணிந்து மகிழ்கிறார்கள். முகத்தில் பவுடர் போட்டுக்கொள்வதுண்டு. உதடுகளில் மேல் வகுப்பு மங்கையர் சாயம் பூசிக்கொள்ளுகிறார்கள். அழகுக்காகவும் கௌரவத்துக்காகவும் உயர் குல நங்கையர் மூக்குக் கண்ணாடிகள் உபயோகிக்கிறார்கள்.

## மதம்

நேப்பாளத்தின் முக்கிய மதங்கள் இந்து மதம், புத்தமதம். இருமதங்களும் வளர்ந்து வந்திருக்கின்றன. ஒரே கட்டடத்தில் இருமததெய்வங்களும் வைத்து பூஜிக்கப்படுகின்றன. புத்தர் கோவிலில் ஹிந்து தெய்வங்களின் உருவங்கள் காணலாம். ஹிந்து ஆலயங்களில் புத்தர் பிரான் சிலைகள் பூஜிக்கப்படுகின்றன. இருமதத்தினரிடையும் சகோதரத்துவமும், அன்பும் பெரிதும் நிலவி வருகின்றன. சிற்பக்கலையின் சிகரமென விளங்கும் அநேக ஆலயங்கள் நேப்பாளத்தில் இருக்கின்றன. இவைகளின் மகிமை பார்த்து மகிழ்ந்தவர்களுக்குத்தான் புலப்படும். கலைகளுக்கும், சிற்பசாஸ்திரத்துக்கும் நேப்பாளம் ஒரு காட்சிசாலை (a veritable museum of archaeology and arts) யெனக்கூறப்படுகிறது.

இந்நாட்டிலுள்ள பசுபதி என்ற ஸ்தலம் ஹிந்துக்களுக்கு முக்கியமானது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரீகர்கள் இங்குவந்து பாகுமதி நதியில் ஸ்நானம் செய்து விட்டு பசுபதிநாதரைத் தரிசித்துச் செல்லுகின்றனர். பாகுமதி நதியில் ஸ்நானம் செய்தால் பாபங்கள் போய்விடுமென்று கூறப்படுகிறது. இறந்தவர்களின் சாம்பல் இந்நதியில் கொண்டு வந்து போடப்படுகின்றது. அவ்வளவு புண்யநதி பாகுமதி. பசுபதி தீர்த்தம் சிறந்த க்ஷேத்திரம். காட்மந்துவிலுள்ள காளி கோயில் பிரசித்திபெற்றது. அதற்கு விழா நடக்கும் போது துர்காபூஜை தினத்தில் ராஜ குடும்பஸ்திரீகள் உள்பட நேப்பாள மங்கையர் அழகாக அலங்கரித்துக்கொண்டு செங்குடைகள் தாங்கி இக்கோவிலை வலம் வருகின்றார்கள்.

இந்நாட்டின் மூன்று முக்கியநகரங்களாகிய **காட்மந்து, பத்கான், படான்** என்பவற்றுள் பின்னிரண்டும் தற்சமயம் அவ்வளவு பிரசித்தியுடனிருக்கவில்லை. ஆனால் இந்த மூன்று நகரங்களிலும் கண்ணைக்கவரும் அழகு வாய்ந்த பல கட்டடங்களும், மாளிகைகளும், கூட கோபுரங்களும் செறிந்து கிடக்கின்றன. சிற்பசாஸ்திரத்தின் நுண்ணிய உண்மைகளுக்கோர் இலக்காக அவைகள் இலங்குகின்றன. மச்சேந்திர நாதரின் திருவிழாவும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இவரின் தேர் புறப்பட்டு நிலைக்கு வந்து சேர நான்கு நாட்கள் ஆகின்றன. பெரியதேர். இது தவிர வருஷம் பூராவும் வேறு அநேக விழாக்களும், கொண்டாட்டங்களும், அதையொட்டி பல சடங்குகளும் அடிக்கடி நடைபெறுகின்றன. இந்நாட்டைப் பார்க்கவேண்டியது அவசியமே.



# சாது துகாராம்

ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள்

கி. பி. 1608-ம் வருஷம் மஹாராஷ்டிரத்தின் சரித்திரத்திலேயே முக்கியமானதென்று சொல்லலாம். காடுகளும் செழித்த பூமியும் நிறைந்த உன்னதமான மலைப்பிரதேசத்தில் ஜனங்களிடையே புத்துயிரளிக்கக்கூடிய ஒரு உணர்ச்சி தோன்றியது. இந்திராயணி நதிக்கரையில் ஸ்வாமி துகாராம் விடோபாவைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும் பொழுது ராணி ஜிஜாபாய் ஜுன்னர் அரண்மனையில் மஹாராஷ்டிர தேசத்தை விடுதலை செய்யத் தோன்றிய அருமைப் புதல்வன் சிவாஜியை வளர்த்து வந்தாள் என்பதில் ஒருவித ஒற்றுமையிருக்கிறதல்லவா?

இந்திராயணி நதிக்கரையில் தெஹு என்னும் சிறிய கிராமத்தில் துகாராம் அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் அரிசி, மிளகாய், கோதுமை, ஜவுளி இவைகளில் வியாபாரம் செய்துவந்தார்கள். துகாராம் குடும்பத்தார்கள் சிறந்த தெய்வபக்தி உள்ளவர்கள். பீமா நதிக்கரையில் உள்ள பண்டரீபுரத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளிய விடோபாவைக் குலதெய்வமாகக் கொண்டாடி வந்தார்கள். கங்காபாய் அம்மையாருக்கு இவர் இரண்டாவதாகப் பிறந்தார். குழந்தை பிறந்ததும், அதிக முகக்காந்தியும், தெய்வீகத் தன்மையும், சாந்தமும் பொருந்தியிருந்தபடியால் குழந்தையைத் தாயார் ஒரு கோவிலுக்கு எடுத்துக்கொண்டுபோய் ஸ்வாமியின் சன்னிதானத்தில் வைத்து "கடவுளுக்குத் தொண்டு செய்யவே இக்குழந்தை பிறந்திருக்கிறது. இது உனக்கே உரியது" என்று ஒப்புவித்தாள்.

பதின்மூன்றாவது வயதில் துகாராம் தகப்பனார் போலாஜி ஹிந்துக்களின் ஆசாரப்படி தன் வியாபாரத்தை விட்டு விட்டு இல்லறவாழ்க்கையினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டார். ஆனால் மூத்தகுமாரன் ஸவாஜியும் வியாபாரம் செய்வதில் மனம் செல்லாதவனாய் துறவரம் கொள்ள அவாக்கொண்டிருந்தான். துகாராம் பக்தியில் ஈடுபட்டு உலகவாழ்க்கையில் விருப்பமில்லாதவனாயிருந்ததால் அரிசியும் மிளகாயும் நிறுத்துப்போடுவதில் சிறிதும் சிரத்தையில்லாதவனாக யிருந்தான். இருந்தபோதிலும் தலைமேல் சுமத்தப்பட்ட வியாபாரத்தை தன்னால் கூடியவரையில் நடத்திவந்தான்.

அந்த காலத்து வழக்கப்படி துகாராம் ருக்மாபாய், ஜிஜாபாய் என்ற இரண்டு பெண்மணிகளைக் கலியாணம் செய்து கொண்டார். ருக்மாபாய் கணவனிடத்து பக்தி மிகுந்து சாந்த சொரூபியாக விளங்கினாள். ஜிஜாபாயோ சிறிது அகங்காரமுடையவளாய் கணவனுடைய தெய்வீக வாழ்வில் கொஞ்சமும் ஈடுபடாதவளாக இருந்தாள். துகாராம் வியாபாரத்தை ஊக்கத்துடன் நடத்திவந்த போதிலும் ஒன்றும் பயன்படவில்லை. குறைவான அளவுகளை அவர் உபயோகப்படுத்தவில்லை; பொய் பேசவில்லை; மோசம் செய்யவும் இல்லை. 'எப்பொழுதும் கடவுளின் திவ்ய நாமத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தார். அண்டை வீட்டுக்காரர்கள் இவரைப்பார்த்து "வியாபாரத்தைப்பற்றி அதிகமாக நினையும். ஹரியைக் கூப்பிடுவதை குறைத்துக்கொள்ளும். இல்லையேல் நீர் சீக்கிரத்தில் பிச்சையெடுக்க நேரிடும்" என்று சொன்னார்கள்.

துகாராம் கஷ்டங்களுக்கெல்லாம் ஒருவர் உதவி செய்து கொண்டே வந்தார். ஒரு நாள் எருதுகளின்மேல் சாமான்களைப் போட்டுக்கொண்டு துகாராம் அயலூருக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது பெரிய புயல் காற்று அடிக்க, துகாராம் வழி தடுமாறி காட்டு மிருகங்களால் சூழப்பட்டு பெரும் ஆபத்துக்குள்ளான பொழுது, பகவான் ஒரு மனிதனைப்போல் வந்து துகாராமுக்குப்பேருதவி அளித்து மறைந்தார். மற்றொரு சமயம் துகாராம் ஒரு

கிராமத்தில் ஆலமரத்தடியில் தன் சாமான்களைப் பரப்பிவைத்து விட்டு கிராமத்தார்களை அழைத்து "உங்களுக்குத் தேவையான சாமான்களை வழக்கம்போல் உள்ள விலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு ஹரி நாமத்தை உச்சரித்து மெய்மறந்திருந்தார். பணம் கொடுக்கும் சமயம் கிராமத்தார்கள் தாங்கள் ஒரு சாமான்களையும் எடுத்துக்கொள்ளவில்லை என்று பொய் சொல்லி ஏமாற்றப் பார்த்தார்கள். அச்சமயம் பகவான் கிராம உத்தியோகஸ்தரைப் போலத் தோன்றி எல்லாத் துகையையும் வசூல் செய்து கொடுத்தார். துகாராம் அன்போடு தன் உணவைச்சாப்பிடும்படி அழைக்க பகவானும் கருணையோடு அவருடன் உணவு அருந்தினார்.

துகாராம் ஸ்வாமிக்குக் கஷ்டங்கள் அதிகமாகத் தோன்றின. இவருடைய தாய் தகப்பனும் இறந்தார்கள். 1629-30 வருஷத்தியப் பஞ்சமும் இவரைத்தாக்கியது. பசியின் கொடுமையால் இவருடைய அருமை மனைவி ருக்மாபாயும் சிறிய குழந்தையும் உயிர் நீத்தனர். துகாராம் கடவுளிடத்தில் இருந்த நம்பிக்கையை இழந்தாரில்லை. வியாபாரத்தில் வரவேண்டியிருந்த துகைகளைக் குறித்து வைத்திருந்த கணக்குகளைக்கொளுத்தி விட்டு துகாராம் பந்தாரமலைக்குச் சென்று தவம் செய்யத் தொடங்கினார்.

இவர் தியானத்தில் பகவான் பிரத்தியட்சமாகி "என்பக்தன் நாமதேவர் ஆரம்பித்த வேலையைப் பூர்த்தி செய்" என்று கட்டளையிட்டதாகவும், அதன்பேரில் துகாராம் ஸ்வாமி அநேக திவ்யமான ஸ்தோத்திர பாடல்களைப் பாடினதாகவும் தெரியவருகிறது. இவருக்கு ஒவ்வொரு தினமும் ஜிஜாபாய் சாப்பாடும் ஜலமும் கொண்டுபோய் கொடுத்துவந்தாள். ஒரு சமயம் துணியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரிக்கு துகாராம் தன் மனைவியின் ஒரே சேலையைக் கொடுத்து விட்டார். ஜிஜாபாய் அதிககோபங்கொண்டு வீடு திரும்பியதும் ஒரு புதிய பட்டு சேலை வீட்டில் இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தாள்.

துகாராம் ஜீவகாருண்யமும், பரோபகார சிந்தையும், ஏழைகளிடத்தில் தயையும் தெய்வ பக்தியும் மேலிட்டவராய் காலங்கழித்து வந்தார். இவருடைய நற்பெயர் தேசம் முழுவதும் பரவியது. ஜெயவீரசிங்கமாய் விளங்கிய சிவாஜி துகாராம் ஸ்வாமியை தன்னிடம் அழைத்துவரும்படி தூது அனுப்பினான். அதற்கு அவர் "கொடையும், விருதும், குதிரையும் எதற்கு? இவைகள் எனக்குத் தேவையில்லை. கருங்கல்லே என்படுக்கை; ஆகாயமே என்னைக்கார்க்கும் போர்வை. உயர்ந்த ஆடைகளும் நகைகளும் ஆச்மசித்திக்குச் சத்துரு" என்று சொல்லியனுப்பினார். சிவாஜி ராஜா ஸ்வாமியின் செய்தியைக்கேட்டு வியப்படைந்து தானே அவர் இருப்பிடம் சென்று சரண் புகுந்து துளசிமாலை சூட்டி ஒரு பைநிரம்ப தங்கத்தைக் கொடுத்தான். அன்றிரவு ஸ்வாமி பாடிய பக்தி ரஸக்கீர்த்தனத்தை சிவாஜி கேட்டு மனம் உறுகி மறுநாள் தானும் துறவறம்பூண உறுதிகொண்டான். இந்த சங்கதி அறிந்த சிவாஜியின் தாய் ஜிஜாபாய் ஸ்வாமியிடம் வந்து, "ஐயா! என்குமாரன் துறவியானால் ராஜ்யத்தைக்கார்ப்பது யார்?" என்று முறையிட்டுக்கொண்டாள். உடனே துகாராம் சிவாஜிக்கு க்ஷத்திரிய தர்மத்தை உபதேசித்தார். அரசன் போர் செய்து சத்துருக்களை ஜெயித்து, மதத்தைக் காப்பாற்றி, ஜனங்களின் க்ஷேமத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று எடுத்துக் கூறினார். சிவாஜியும் தன்மன உறுதியை மாற்றித்தன் கடமையைச் செய்யப் புறப்பட்டான்.

மற்றொரு சமயம் சிவாஜி ராஜா தன் உயிரையும் திரணமாக நினைத்து பூனாவில் தங்கியிருந்த துகாராம் ஸ்வாமியை தரிசிக்கச் சென்றார். இதை அறிந்த சிவாஜியின் விரோதியான முகம்மதிய தளகர்த்தன் பூனா நகரத்தை





முற்றுகைபோட்டு சிவாஜியைப் பிடிக்கும்படி தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். துகாராம் பகவானைப் பிரார்த்திக்க ஹரியும் சிவாஜியைப்போல் வேடந்தரித்து முகம்மதிய வீரர்களை ஏமாற்றமடையச் செய்தார். சிவாஜியும் அபாயமில்லாமல் தப்பித்துக் கொண்டான்.

துகாராம் சூத்திரராக இருந்தும் கடவுளைப் பற்றி ஞானபோதனை செய்வதைக்கண்டு பொருமைகொண்ட பிராமணர்கள் தூற்ற ஆரம்பித்தனர். தேஷ்பாண்டே என்னும் ஒரு பிராமணர் சாஸ்திர அர்த்தம் தனக்கு விளங்கும்படி அருள் செய்யவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்க, "நீ சென்று துகாராம் பாதத்தில் விழுந்து கற்றுக் கொள்ளலாம்" என்று அசரீரி வாக்குப் பிறந்தது. தேஷ்பாண்டேயும் அலட்சியமாக துகாராமிடம் போய்ச்சேர்ந்தான். துகாராம் "ஞானபோதினி" என்ற தலைப்புடன் சில செய்யுட்களை இயற்றினார். தேஷ்பாண்டே இதைக் கண்டு அதிகக்கோபங்கொண்டு "இந்த சூத்திரன் சொல்லுவதையா நான் கற்றுக்கொள்ளப் போகிறேன். நான் புராணங்களை அல்லவா கேட்க வந்தேன்" என்றார். அதற்கு ஸ்வாமி "தங்களைப்போன்ற அஞ்ஞானிகளுக்கு கற்றுக்கொடுக்கும் யோக்கியதை என்னிடம் இல்லை," என்று சொல்லியனுப்பினார்.

ஒரு சமயம் சிஞ்சிவாடி என்னும் புரோகிதக் குடும்பத்தினருடன் துகாராம் விருந்துண்ணும்படி நேரிட்டது. விடோபாஸ்வாமிக்கும் கணபதிஸ்வாமிக்கும் இரண்டு இலைகள் போஜனம் பரிமாறப்பட்டிருந்தது. யாவரும் அறியாதபடி பரிமாறியிருந்தவையெல்லாம் மறைந்து போயின. கடவுளே நேரில் வந்து சூத்திரனோ துகாராமோடு சாப்பிட்டாரா! என்று கேள்வி பிறந்தது. துகாராம் ஸ்வாமியை பொருமையினால் எல்லாரும் ஏளனம் செய்து துரத்தினார்கள். மற்றொரு சமயம் மாம்பாஜி என்னும் பிராமணன் விடோபா கோவிலுக்குள் துகாராம் சென்றதற்காக அவரை அடித்து ஹிம்சை செய்தான். ராமேஸ்வரபட்டர் என்னும் பிராமணன் "கீழ்ஜாதியில் பிறந்தவனுக்கு கடவுள் பேரில் செய்யுள் இயற்றி கீதம்பாட என்ன யோக்கியதையிருக்கிறது?" என்று சொல்லி துகாராம் வைத்திருந்த புத்தகத்தைப்பிடுங்கி ஆற்றில் எரிந்து விட்டான். தன் உயிருக்கு மேலானதாகக் கருதியிருந்த புத்தகத்தை இழந்த துகாராம் பதின்மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி கற்பாறையின் மேல் படுத்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பதின்மூன்றாவது நாள் புத்தகம் ஆற்றின்மேல் சிறிதும் அழிவின்றி மிதந்துவருவதைக்கண்டு அளவிலா ஆனந்த மடைந்தார். ராமேஸ்வர பட்டரும் ஸ்வாமியின் சீடராக மாறினார்.

ஸ்வாமியின் உலகவாழ்வு 1649ம் வருஷத்தில் நாற்பதாவது வயதிலேயே முடிவடைந்தது. சிஷ்யகோஷ்டிகளுக் கிடையிலிருந்து திடீரென்று இவர் மறைந்து போனார். இவரைத் தேட ஆரம்பிக்குமுன் "துகாராம் விடோபாவின் திருவடிகளை அடைந்தார்" என்று அசரீரி உண்டாயிற்று.

மஹாராஷ்டிர தேசத்தில் தோன்றிய மஹான்களில் துகாராம் ஸ்வாமி முக்கியமானவர். இவருடைய சிறந்த தெய்வபக்தியும், தயாளகுணமும், எளிய வாழ்க்கையும், அரிய ஞானமும் இவரிடத்தில் எல்லாருக்கும் மதிப்பையும், அன்பையும் உண்டாக்கின. பாமர ஜனங்கள் இவரிடத்தில் மிகுந்த பக்தியுடையவர்களானார்கள். இவருடைய பக்திரஸமான இனிய செய்யுட்கள் மஹாராஷ்டிர தேசத்தில் அழியாப்புகழ் பெற்றன. நாளைக்கும் அவந்திக்கும், பண்டரிபுரத்துக்கும் போகிற யாத்ரீகர்கள் துகாராம் ஸ்வாமியின் பாடல்களைப் பாடிக்கொண்டுதான் போகிறார்கள்.

# மகளிர் விளையாட்டு

ஸ்ரீமதி ரங்கம்மாள்

**ப**ண்டைப் பைங்கொடிகள் தம் விளையாட்டுக்களில் கழல் ஆடலும், பந்தடித்தலும் முக்கியமாய் விளங்கியவை. மகளிர் பந்தாடும்பொழுது தம் நாட்டரசனை வாழ்த்தி ஆடுவர். ஆசிரியர் இளங்கோவடிகள், மகளிர் பாண்டியனை வாழ்த்தி பந்தடித்தலை, தனது சிலப்பதிகாரத்தில், "கந்து கவரி" என்னும் தலைப்பின் கீழ் நன்கு வருணித்திருக்கிறார். கீழ்வரும் பாடல்கள், மகளிர் பந்தாடலை எவ்வளவு அழகாக வும் இனிமையாகவும் வர்ணிக்கின்றன!

"பொன் இலங்கு பூங்கொடி
பொலம் செய் கோதை வில்லிட

மின் இலங்கு மேகலைகள்
ஆர்ப்ப, ஆர்ப்ப எங்கணும்

'தென்னன் வாழ்க! வாழ்க!!' என்று
சேர்ந்து பந்தடித்துமே;

'தேவர் ஆர மார்பன் வாழ்க'
என்று பந்தடித்துமே.

"பின்னும் முன்னும் எங்கணும்
பெயர்ந்து வந்தெழுந் துலாய்

மின்னுமின் இளங்கொடி
வியன் நிலத் திழிந்தென

'தென்னன் வாழ்க! வாழ்க!!' என்று
சென்று பந்தடித்துமே;

'தேவர் ஆர மார்பன் வாழ்க!'
என்று பந்தடித்துமே.

"துள்ளிவந்து கைத்தலத்
திருந்ததில்லை, நீணிலம்

தன்னினின்றும் அந்தரத்
தெழுந்த தில்லை தான் என

'தென்னன் வாழ்க! வாழ்க!!' என்று
சென்று பந்தடித்துமே;

'தேவர் ஆர மார்பன் வாழ்க'
என்று பந்தடித்துமே."



குமாரி ஆர். கமலாபாய்

# குமாரி ஆர். கமலாபாய்

"சுகி"

ஒரு தேசத்தின் அல்லது சமூகத்தின் நாகரிகத்தின் உயர்வையும், வளர்ச்சியையும் அறியவேண்டுமானால் அத்தேசத்தின் சங்கீதம், காவியம், சித்திரம், முதலிய கலைகளின் அபிவிருத்தியையும், நிலைமையும் கொண்டு தெரிந்து கொள்ளலாம். இம்மூன்று உயர்கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் கோடிக்கு ஒருவர். இரண்டில் ஞானமுடையவர்கள் மிகச் சிலரே. அப்படி இருக்க இக்கலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளில் பாண்டித்யம்பெற்ற ஸ்திரீ இருப்பது கரும்பு கனி ஈன்றதற் கொப்பாகும். கரும்பே ருசி. அது கனி ஈன்றால் எவ்வளவு தித்திக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அற்புதக் கலைகளைப் பயின்று அவைகளின் பெருமையை எல்லோரும் உணர எடுத்துக் காட்டும் வன்மை சிறப்பாக வனிதையருக்கே உண்டு.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பரின் பத்தினி சிறந்த காவியங்களும், மனதைக் கொள்ளைகொள்ளும் பாக்களும் இயற்றினாள். அவளின் கற்பித சக்தியும் இலக்கிய வன்மையும் அவள் சமூகத்தார் அறிந்தார்கள். உடனே அவர்கள் "ஸ்திரீ யாவது, பாட்டு கட்டு எழுதுவதாவது? கலிகாலம்! என்ன அந்யாயம்" என்று கூக்குரலிட்டு அக்குடும்பத்தை அடியுடன் ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டார்கள். அக்கவி திலகத்துக்கு ஒரு கன்னிப்பருவப் புதல்வியும் இருந்தாள். அவள் தாயாருக்கு பாக்களியற்றும் சக்தியிருந்ததினால் பகிஷ்கரிக்கப்பட்ட பாபத்துக்குப் பயந்து அக்கன்னிகையை மணம்புரிய ஒரு வாலிபனும் மனம் துணிந்து சமூகக் கட்டை எதிர்த்து முன்வரவில்லை. அக்கன்னி கடைசி வரையில் மணவாழ்க்கையின்றியே இருக்க நேரிட்டது. ஆனால் இச்சமூக பகிஷ்காரம் கன்னிகைக்கு நன்மையாகவே முடிந்தது. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் தள்ளி வைக்கப்பட்ட நங்கை தன் கவனத்தைக் கல்வியில் செலுத்தி எம். ஏ., பட்டம் பெற்றாள். இது சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவம். நான் இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால் நம் நாகரிகம் சமீபகாலம்வரை எவ்வாறிருந்தது என்பதையும், ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கு எத்தகைய கொடூரமான தடைகள் இருந்தனவென்பதையும் நீங்கள் நன்கு உணர்வதற்காகவே. முன்னிருந்த நிலைமை அப்படி. ஆனால் இப்பொழுது எவ்வளவோ காலம் மாறிவிட்டது. இருந்தபோதிலும் அவசியமான அளவு முன்னேற்றமும் மனமாற்றமும் இன்னும் ஏற்படவில்லை. இப்பொழுது ஸ்திரீகள் சித்திரம், சிற்பம், காவியம் முதலிய கலைகளைக் கற்றுக்கொள்ள விரும்பினால் அநேகமாய் பெற்றோர்களும், இதர பந்துக்களும் அனுமதி தந்துவிடுகிறார்கள். இவ்வித உயர்தரக் கலைகளில் தேர்ச்சிபெற ஆவலுள்ள ஸ்திரீகளுக்கு வேண்டிய ஆதரவு அளிப்பது "கிரஹலக்ஷ்மி"யின் ஒரு முக்கிய நோக்கம். ஆனால் இக்கலைகளில் ஆசைகொண்டு இவற்றைக் கற்றுத்

தெளிய முன்வரும் ஸ்திரீமணிகள் வெகு சிலரே இருக்கின்றனர். அந்த ஸ்திரீ மாணிக்கங்களில் தாமேர்லா சத்யவாணி ஒருவர். குமாரி கமலாபாய் மற்றொரு ரத்தினம்.

இவர் திரு. ஆர். அப்பாராவ் நாயுடு அவர்களின் குமாரி. ஸ்ரீமதி கமலாவுக்கு சித்திரம் வரைவதில் ஓர் சிரத்தை இள வயதிலேயே உண்டாயிற்று. கவீந்திரர் ரவீந்திரநாத் தாகூரின் "சாந்தி நிகேதன"த்தில் சிலகாலம் கலா பயிற்சி பெற்றார். சித்திரத்தில் மட்டும் அவர் தேர்ச்சியுடையவர் அல்லர். சங்கீதத்தில் நல்ல ஞானம் படைத்தவர். கானசாஸ்திரத்தில் சர்வகலாசாலைப் பட்டமும் பெற்றுள்ளார். இவரது சித்திர, சங்கீத அனுபவத்தைப் பாராட்டி பல பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. ஆந்திர சித்திர கலா நிபுணர்களில் ஸ்ரீமதி கமலா ஒருவர் என்பது பிரசித்தம். எனவே அன்னாரின் பெருமையைப் பற்றி நான் அதிகமாக எழுதவேண்டியது அனாவசியம்.

குமாரி கமலாவைத்தவிர எனக்குத் தெரியாத ஆந்திர கலாஞானிகள் எத்தனையோபேர்கள் இருக்கலாம். சிலர் தங்கள் பெயரைப் பிரசித்தி படுத்திக்கொள்ள விரும்புகிறார்களில்லை. அவர்களிடம் ஓர் வித சங்கோசமும் இருந்து வருகிறது. அது அவர்களிஷ்டம்.

நான் அடிக்கடி பல வீடுகளுக்குப் போவதுண்டு. அங்கெல்லாம் உள்ள மேஜைத் துணிகள், ஜன்னல் ஸ்கிரீன்கள், குஷன் உறைகள், இன்னும் பல பின்னல் சாமான்கள் இவைகளில் பிரகாசிக்கும் சித்திர வேலைப்பாடுகளை நான் மிகவும் கூர்ந்து கவனிப்பேன். அவைகளில் சில நேர்த்தியாக அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கண்டு "நம் வீட்டுக் கண்மணிகளா இவ்வளவு நேர்த்தியான வேலைகளைச் செய்திருக்கின்றன" என்று நான் ஆச்சர்யத்துடன் வினவியதுண்டு. அவைகள் அவ்வளவு நுண்ணிய வேலைப்பாடுடன் விளங்கின. ஆனால் என்னபயன்? அவர்களின் சாமர்த்தியம் காட்டில் மலர்ந்த ரோஜா மலரைப்போல் உலகப் பிரசித்தி அடையாமல் மறைந்து கிடக்கின்றன.

இம்மாதிரி சித்திரவேலைகளில் கைதேர்ந்த பெண்மணிகள் தங்கள் சக்தியை வீணாக்காமல், அத்தொழிலை மற்றப் பெண்களுக்கும் கற்றுக் கொடுப்பதுமன்றியில், சிறந்த பொருள்களையும் உற்பத்திசெய்து, அவற்றை விற்பனைசெய்து லாபமும் அடையலாம் என்பது என் அபிப்பிராயம். என் நண்பர்வீட்டில் சித்திரவேலைப்பாடுள்ள ஒரு பொருள் பள்ளியறையில் கண்ணாடிப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது. நான் அச்சிநேகிதரை, "ஏன் ஐயா! இவ்வளவு நேர்த்தியான சாமானை யாரும் அறியக் கூடாத இந்த இடத்தில் பூட்டிவைத்திருக்கிறீர்" என்று கேட்டேன். அதற்கவர், "எங்கிருந்தாலென்ன? அதன் அழகை நாம் மட்டும் தெரிந்துகொண்டால் போதுமானது" என்று பதில் சொன்னார். அப்பேர்பட்ட மனப்பான்மையுள்ளவருக்கு என்ன மறுமொழி கூறுவதென்று எனக்கு அன்றும் புரியவில்லை; இன்றும் தெரியவில்லை. நன்கு கற்றறிந்தவரும், சிறந்த அனுபவமும் உள்ள இவரே இப்படி விபரீத வேதாந்தம் பேசினால் சாதாரணப் பாமர மக்களைப்பற்றிக் கேட்பானேன்.





ஆனால் குமாரி கமலாவின் விஷயம் வேறுவிதம். அவரின் தந்தை கமலாவின் கலாபிவிருத்தியில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதுமன்றி அவரது திறமையைப் பல வழிகளிலும் அதிகப்படுத்தி வளரச் செய்வதில் மென்மேலும் சிரத்தைகாட்டி வருகிறார். எந்தக் கஷ்டங்கள், எவ்வளவு பிரயாசைகள் இருந்தபோதிலும் அவரது மனோரதம் நிறைவேற வேண்டுமென்பது என் அவா. அதற்காக திரு. நாயுடு பல ஊர்களுக்குச் செல்லவேண்டியதிருந்தது. அவர் தயங்கவில்லை. அவரது விடா முயற்சியினால் தன் புத்திரியின் புகழைப் பிரசித்தமாக்கினார். குமாரி கமலாவின் சித்திரவிற்பன்ன சிறப்பைக்கண்டு அதைப் பாராட்டி அநேகர் தங்கமெடல்கள் பரிசு அளித்திருக்கிறார்கள். இன்னும் கமல குமாரி தன் கலைவளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறார். இவரைப் போன்றவர்கள் அன்னை பாரதமாதாவின் அணிகளாக விளங்குகிறார்கள். குமாரி கமலா மென்மேலும் கீர்த்தியும், புகழும், சகல சம்பத்துகளும் பெற்று தீர்க்காயுளுடன் ஜீவித்திருக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

# விளையாட்டுப் பொம்மை வேண்டாம்

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு சிங்கப்பூரில் இந்திய மாதர் கூட்டத்தில் பேசியதாவது:—

வனப்பும், நற்குணமும், தன்னம்பிக்கையுமுள்ள மாதர்களே வேண்டும். வெறும் பகட்டு விளையாட்டுப் பொம்மைகள் எங்களுக்கு வேண்டவே வேண்டாம். ஒரே படியாக நகைகளைப் போட்டு பயங்கரமாக உடம்பெல்லாம் மூடிக்கொள்ளும் ஸ்திரீகளைக் கண்டால் எனக்குப் பிடிப்பதேயில்லை. அபலைகள் என்று சொல்லப்பட்ட இந்திய ஸ்திரீகள் இப்பொழுது தேசத்தின் ஜீவசக்தியாகத் திகழ்கின்றனர். 1930ல் ஆடவர் சிறைபுகுந்த காலையில் அவர்கள் விட்டுப்போன வேலைகளைத் தொடர்ந்து செய்ய மாதர் போர்க்களத்தே துள்ளிக் குதித்தனர். அஞ்சா நெஞ்சுடன் தியாகத்தீயில் மூழ்கிப்புனிதம் அடைந்தனர். ஒரு தேசத்தின் உயர்வு தாழ்வை அத்தேசத்து ஸ்திரீகளைக்கொண்டு நிர்ணயித்துவிடலாம். ஸ்திரீகள் கல்வி சுதந்திரம் இன்றி பிற்போக்காளர்களாயிருந்தால், அத்தேசத்தில் ஆண்கள் எவ்வளவு திறமைசாலிகளாயிருந்தாலும் யாது பயன்!

# இது சரியோ?

திரு. ஸி. ஆர். சங்கரன், (பி.ஏ. ஆனர்ஸ்)

பாத்திரங்கள் :

டாக்டர் சி. கே. சுந்தரராமன், எம். பி. பி. எஸ்.

கமலம்மா : அவர் மனைவி.

காலம் : சாயங்காலம்.

இடம் : சிவகங்கை.

### முதல் காட்சி.

டாக்டர் : (சாய்மான நாற்காலியில் படுத்த வண்ணமாய்) கமலா, மாதம் முதல் தேதி தவறாமல் 450 ரூபாய்கள் சம்பளம் வருகின்றது. மேல்வரும்படி 300க்குக் குறையாமல் வருகிறது. சம்பளப்பணத்தை அப்படியே பாங்கில் "டிபாசிட்" செய்து வைத்து, மேல் வரும்படியைக் கொண்டுதான் குடும்பத்தை அதிக செட்டாக நடத்தி வருகிறோம். மூன்று பெண்களையும், கூடுமான வரையில் வரதட்சிணையைக் கொடுத்து கலியாணம் பண்ணி ஜெயித்து விட்டோம். ராஜத்தின் புருஷன் பெண்ணை நன்றாகவே வைத்துக் கொண்டிருக்கிறான். சாரதாவின் புருஷனும் பாதகமில்லை. கடைசி மாப்பிள்ளை தான் ஒருமாதிரி. கோமளத்திற்கு குழந்தை பிறந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாகிறது. பிரசவத்திற்கு மனைவியை பிறந்தகத்துக்கு அனுப்ப மாட்டேன் என்று சொல்லிவிட்டான். போனது போகட்டும். இப்பொழுதாவது போய் அழைத்து வரலாமா? நீ என்ன செல்கிறாய்?

கமலா : அவசியம் போய் அழைத்து வர வேண்டியது தான். முதலில் நம்ம பையன் கிட்டுவை அனுப்புங்கள். அதற்கு அனுப்பா விட்டால், நீங்கள் போகலாம்.

டாக்டர் : (கிட்டுவை கூப்பிடுகிறார்.) அடே! கிட்டு?

கிட்டு : என்னப்பா கூப்பிட்டாயா?

டாக்டர்: ஆமாம். பரீட்சை யெல்லாம் எப்படி எழுதியிருக்கிறாய்? கணக்கில் எத்தனை பெர்ஸண்டு வரும்? சமிஸ்கிருதத்தில்? உன்னை "ஜாக்கி" போட்டு பரீட்சைக்குத் தூக்கி விடுவதற்காக நான் கொடுத்திருக்கும் "டியூஷன் பீஸ்" 200 ரூபாய். அது கிடக்கட்டும், திருச்சிறாப்பள்ளிக்குப் போய்த் தங்கையை அழைத்துக்கொண்டு வருகிறாயா? நாளைக்கு 6 மணி பஸ்ஸில் போய்வா?

கிட்டு : சரி!

### இரண்டாவது காட்சி.

இடம் : திருச்சி. டாக்டர் கடைசி மாப்பிள்ளையின் வீடு.

கிட்டு, கோமளம், அவள் கணவன், மூன்று பேரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



கிட்டு : (சாவதானமாய்) என்ன பாவா! நீங்கள் நம்ம ஊருக்கு வரக்கூடாதென்று வைத்து விட்டீர்கள் போலிருக்கு! கோமளத்தைக் கூட்டிக்கொண்டு உங்களுடன் வரும்படி அப்பா என்னை அனுப்பியுள்ளார். அம்மாவுக்குக் குழந்தையைப் பார்க்கவேண்டுமென்று ரொம்ப ஆசை! ஆகையினாலே, உங்களுக்கு வரமுடியாவிட்டாலும், பெரிய மனசு பண்ணி கோமளத்தையாவது அனுப்பித்தர வேண்டும்.

கோமளத்தின் மாமியார் : (குறுக்கிட்டு) இப்படி திடுதிப்பென்று அனுப்பித்தரச் சொன்னால், நாங்கள் என்ன செய்யமுடியும்? எனக்கோ, நாளுக்கு நாள் வயது அதிகமாய்க் கொண்டே யிருக்கு! வீட்டு வேலைகளை யெல்லாம் யார் கவனிப்பது. நீயே சொல்!

மாப்பிள்ளை : பெண்ணைத் தகப்பனார் இஷ்டப்பட்ட போதெல்லாம் அனுப்பமுடியுமா? அவர் எவ்வளவோ படித்திருந்தும், இதெல்லாம் ஒன்றும் தெரிகிறதில்லை. சுத்த கர்நாடகம்! சமஸ்கிருத ஸ்லோகங்களை சரமாரியாகப் பொழியத்தான் தெரியும்!

கிட்டு : குழந்தைக்கு ஆண்டு நிறைவு அங்கேயே பண்ணியனுப்பலாம் என்று அப்பாவுக்கு உத்தேசம். இப்பொழுது என் கூட கோமளத்தை அனுப்பமுடியா விட்டாலும், அடுத்த வாரம் ரஜா வாங்கிக்கொண்டு நீங்களே அழைத்து வாருங்களேன்?

மாமியார் : அதெல்லாம் ஆகிறகாரியமல்ல. குழந்தையின் ஆண்டு நிறைவு இங்கேயே தான் கொண்டாடவேண்டும் என்பது எனது அபிலாஷை. ஆகையால், இப்போது, அவள் அங்கு வருவதற்கு சிறிதும் சௌகரியப்படாது.

கிட்டு : சரி! பாவா! நான் நாளைக்குக் காலமேயே சிவகங்கைக்குப் போகிறேன்.

### மூன்றாவது காட்சி.

சிவகங்கை : டாக்டர் வீடு. கமலம்மா, டாக்டர், கிட்டு இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் : என்னடா கிட்டு! பாவா என்ன சொன்னார். போய் நீ அங்கு ஒரு வாரங்கூட இருக்கவில்லையே? தங்கை சவுக்கியமாய் இருக்காளா? குழந்தை யார் மாதிரியிருக்கிறது? நன்றாய் விளையாடுகிறதா?

கிட்டு : குழந்தை அவப்பாமாதிரி! கோமளம் இளைத்துத்தான் இருக்கிறாள். மனதில் ஏதோ கவலையும், சோர்வும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எனக்குப்படுகிறது. அவளுக்கு உடனே "சேஞ்சு" (change) கொடுக்க வேண்டும். அது அந்த ப்ரூட்டு (அவள் புருஷனுக்கு)க் கொஞ்சங்கூடத் தெரிகிறதில்லை. என்னென்னமோ உளறுகிறான்.

டாக்டர் : சரி! நான் போய்ப்பார்க்கிறேன். நாளைக்கு நம்ம காரிலேயே போகலாம். நீயும் வருகிறாயா கமலம்?

கமலம் : நீங்கள் மாத்திரம் போய் வருவதே நல்லது. நான் வருவது அவ்வளவு நல்லதல்ல. உங்களுக்கு என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்.

டாக்டர் : என்னடா கிட்டு, மறுபடியும் என்கூட வருகிறாயா, இல்லாவிட்டா சந்துரு வரட்டுமா?

கிட்டு : சந்துருவே வரட்டும். நான் மறுபடியும் எதற்காக?

### நான்காவது காட்சி.

திருச்சி : டாக்டர், சந்துரு, மாப்பிள்ளை நாணு இவர்கள் கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

டாக்டர் : என்ன நாணு, ஹவ் ஆர் யு கெடிங் ஆண்? ஏது அந்தப்பக்கம் எட்டிப்பார்க்கிறதையே விட்டுவிட்டாய் போலிருக்கிறதே? போனவருஷம் "வைப்" (wife) உடன் வருவதாய் எழுதியிருந்தாய். அப்புறம் ஒன்றுமே செய்யவில்லை. .

மாப்பிள்ளை : ஏதோ சொல்லிவிடுகிறோம். எங்கே அவ்வளவு "ஈஸி"யாய் ஊரைவிட்டுக் கிளம்புவதற்கு முடிகிறது?

டாக்டர் : அப்படிச் சொல்லிவிட்டால் எப்படி நாணு! எல்லாருக்கும் அப்படியே தான் இருக்கின்றது. இருந்தாலும் போய்வந்து கொண்டுதானிருக்கவேண்டும். நாம் சம்பாதிப்பதில் பாதிக்குமேல் ரெயிலுக்கும் மோட்டாருக்கும் கொட்டுகிறோம் என்பது வாஸ்தவந்தான். இருந்தாலும்..............அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கமுடியுமா?

மாப்பிள்ளை : தாங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள்!

டாக்டர் : (மனதில் அருவருப்புடன்) நம்ம கோமளத்தை அழைத்துக்கொண்டு போகலாமென்றுதான் வந்திருக்கிறேனப்பா!

மாப்பிள்ளை : அது முடியாதகாரியம்! தாங்கள் என்னுடனாவது, அவளுடனாவது இதைப் பற்றி அநாவசியமாய்ப் பேசவேண்டாம். அப்படித்தங்களுக்கு மகளிடம் சொல்ல வேண்டிய முக்கிய சமாச்சாரங்கள் ஏதாவது இருந்தால், அதை என் முன்னும், என் தாயார் முன்னும்தான் சொல்ல வேண்டும். ஆண்டு நிறைவு இங்கேயேதான் நடக்க வேண்டும். அதற்காக தாங்கள் கொடுக்கவேண்டிய சீர் முதலியவைகளை எங்களிடம் கொடுத்துவிட்டு தாங்கள் தாராளமாய் ஊருக்குப்போய்வரலாம். அப்படித் தாங்கள் பலவந்தத்தின்பேரில் அழைத்துப் போவதாயிருந்தால் போங்கள். என் அருமைத் தாயார் எனக்கு மறுவிவாகம் செய்யத்தயாராயிருக்கிறாள்.

டாக்டர் : மறுவிவாகமா? (மனத்திற்குள்) "ஈஸ்வரா? நாம் எத்தனை பெரிய உத்தியோகம் பண்ணினால் என்ன? எவ்வளவு சம்பளம் வாங்கினால்தான் என்ன? நமக்கும் தலையெழுத்து ஒன்று இருக்கிறதே அதை எப்படி மாற்ற முடியும்?" (வெளிப்படையாய்) நாணு! நான் வருகிறேன். கோமளம் நான் போய்வர......மா (கண்களில் நீர் வந்து விடுகின்றது.)

(தலைகுனிந்த வண்ணமாய் போகிறார்.)

### ஐந்தாவது காட்சி.

டாக்டர் வீடு. அவர் பெரிய பையன் எம்.பி.பி.எஸ். பாஸ் பண்ணியுள்ள ஹரிஹரன், மனைவி கமலம்மா, உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

காலம் : (ஒரு வாரத்திற்கப்பால்.)

டாக்டர் : என்னடா ஹரி! உன் மாமனார் உன் திரகூஷிக் கலியாணம் நடத்தித் தருவதாகக் காகிதம் போட்டிருக்கிறார். போன வருஷமே, அவர் எல்லா "அரேன்ஜ்மெண்டு"களும் பண்ணி சீர்கள்எல்லாம் 'ரெடி' பண்ணியிருந்தார். நீ 'வேண்டாம்' என்று சொல்லி விட்டதில், அதிக மனவருத்தப்பட்டு விட்டார். இப்பொழுது என்ன சொல்கிறாய்? சாஸ்திரோக்தமாய் "சுபஸ்ய சீக்ரம்" என்று நடத்திக்கொடுக்கும்படி எழுதிவிடட்டுமா?

ஹரிஹரன் : அதைப்பற்றி எனக்கொன்றுமில்லை. கலியாணத்திலேயே, வரதட்சிணையைப்பற்றித் தகரார் செய்தார்கள். ரூ. 6000 என்று பேசிவிட்டு அரை ஆயிரத்தைப் பிடித்துக்கொண்டு வைத்திருக்கிறார்கள். ரூல் என்றால் ரூல்தான். அதை இப்பொழுது கொடுத்துவிட வேண்டும். சீர்கள் எல்லாம் சம்பிரமமாய்ப் பண்ண வேண்டும். இரண்டு தேக்கு மேஜைகள், மூன்று சோபாக்கள், இரண்டு நிலைக்கண்ணாடி பீரோக்கள், நான்கு ட்வீட் ஸூட்டுகள், இரண்டு முதலைத்தோல் ஸூட்கேஸுகள், மற்றபடி வெள்ளிப் பாத்திரங்கள் துணிமணிகள் எல்லாம் வரவேண்டும்.

டாக்டர் : சரி! அப்படியே எழுதிவிடுகிறேன்.





கமலம்மா : அவனுக்கு என்னென்ன வேண்டுமோ எல்லாம் எழுதிவிடுங்கள். நாமோ வாங்கிக்கொடுக்கப் போவதில்லை. கொடுக்கிறவாளை நாம் ஏன் வேண்டாமென்று சொல்ல வேண்டும்?

டாக்டர் : நம்ம ராஜத்தின் புருஷன் ராஜத்துடன் வந்து சேர்கிறேன் என்று எழுதியிருக்கிறான். அந்த அசடு கோமளத்தின் புருஷன் தானும் வராது அவளையும் அனுப்பாது. இந்திராவும் அவள் புருஷனும் இன்று வருவதாகக் காகிதம் கிடைத்துள்ளது.

கமலம்மா : சம்மந்திகளை இறக்குவதற்கு வீடு ஒன்று நல்லதாகப்பார்க்க வேண்டுமே. இந்த வீடு எப்படிப்போதும்?

டாக்டர் : நானும் தினம் அதையும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன். ஒரு வீடும் அகப்படுவதாயில்லை. வெட்டனரி டாக்டர் அவ்வளவு பெரிய வீட்டில் தனியாக இருக்கிறார். அதை வேணுமானால் சரிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அந்த சனியன் கொடுக்குமோ என்னமோ சந்தேகந்தான். அன்று அவன் குடும்பத்தை மாத்தூரிலிருந்து கூட்டிக் கொண்டுவர நமது காரைக் கேட்டான். அது "ரிப்பேர்" என்று சொல்லிவிட்டேன். அந்த சாக்கில், இப்பொழுது வீட்டைத் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டால்!

கமலம்மா : எதற்கும் கேட்டுப்பார்க்கலாம்.

### ஆறாவது காட்சி.

கல்யாண வீடு: காலம் : (ஒரு வாரத்திற்கப்பால்.)

டாக்டர் குடும்பம், சம்மந்திகள், கிருஷ்ணையர், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், அவர் மனைவி குமுதவல்லி, பெண் விமலா, அவள் தங்கை நீரஜா முதலியவர்கள் வந்துள்ளார்கள். (வந்த இரவே சம்மந்தியம்மாளுக்கும், டாக்டர்மனைவிக்கும் சீர்கள் விஷயமாய் ஏதோ தகராறு ஏற்பட்டு பேச்சு நின்றுவிட்டது. மறுநாள் சாந்தி முகூர்த்தம். சம்மந்தி வீட்டார்கள் கொட்டு மேளத்துடன் பையன் வீட்டுக்கு வருகிறார்கள். வீட்டிற்குள் வந்தாய் விட்டது. ஒருவரும் எதிர்கொண்டழைக்கவில்லை.)

ஜட்ஜ் மனைவி : (மெதுவாகத்தன் தங்கையுடன்) என்னடி இந்த அலங்கோலம்! வீட்டிலே ஒருத்தருமில்லையா?

இந்திரா : (டாக்டர் பெண்) [சம்மந்திகளைப் பார்த்துவிட்டு, இரண்டு நிமிஷங்கள் கழித்து,] வாங்கோ! (சாவதானமாய்) உட்காருங்கோ!

கமலம்மா : (தன் மகள் ராஜத்திடம் சம்மந்திகள் காதில் விழும்படியாக) கொடுக்க வேண்டியதை யெல்லாம் கொடுத்து விட்டால்தான் பையனுக்கு மனது திருப்தியாயிருக்கும். அவன் ஒரு மாதிரி மூஞ்சியைச் சுளிச்சுண்டு இருக்கான்.

சம்மந்தியம்மா : மாப்பிள்ளை கேட்டதெல்லாம் ரெடியாக இருக்கிறதே. இன்னும் என்ன வரவேண்டும் என்று சொன்னால், அதையும் சேகரித்துத் தருகிறோம். இதுவரை இரண்டாயிரம் ரூபாய்தான் செலவழிந்துள்ளது. கூட நூறு இருநூறு போனால் போகட்டும், என்ன பண்ணுகிறது?

கமலம்மா : இந்த மாதிரி சமயாசந்தர்ப்பங்களில் சிலவைப் பார்த்துக் கொண்டிருந்தால் ஆகுமா?

(சாந்தி முகூர்த்தம் முடிந்தபின்)

ஜில்லா ஜட்ஜ் கிருஷ்ணய்யர் (தன் மனைவியிடம்) எனக்கு மாதம் 800 ரூபாய் வரும் போதே இந்தப் பாடாயிருக்கிறது. முதல் பெண்ணுக்கே இவ்வளவு தாராம் செய்திருக்கிறேன். இன்னும் மூன்று பெண்களுக்கு என்ன பண்ணுவது!

மனைவி : போன ஜன்மத்தில் யாரிடம் கடன் வாங்கியிருந்தோமோ எல்லாவற்றையும் இப்பொழுது தீர்க்கவேண்டி யிருக்கிறது. இது போல் சம்மந்திகள் ஒருவரை ஒருவர் பிய்த்துத் தின்னுவது சரியோ? இதுவும் ஒரு தருமமுறையோ? இதுவும் சாஸ்திரநியாயந்தானோ? பெரிய மேதாவிகள் எல்லோரும் தங்கள் தங்கள் பாட்டைக்கழித்துக்கொண்டு போவதும், இவ்வித அக்கிரமங்கள் நடை பெறுவதும் ஆண்டவனுக்கு அடுக்குமா? வயிற்தெறிச்சல் தாங்கவில்லை, கத்திவிட்டேன். இதையொழிக்க வழி தேடுங்கோ! குடும்பங்களில் இந்தக் காட்சிகள் மறையச் செய்யுங்கள்.

**சமையல்**

# மசாலா தோசையும், பாதுஷாவும்

"ஸரோஜா"

எப்பொழுதும் எங்கள் 'பேச்சில்' (Batch) எல்லோருக்கும் முன்னால் கிளப்பிற்கு வந்து ஹாஜராக விருப்பவள் பங்கஜம். எங்களால் அவளை தோற்கடிக்க முடியவில்லை. போன ஞாயிற்றுக்கிழமை மட்டும் அவள் $6\frac{1}{2}$ மணிக்குமேல் கிளப்பிற்கு வந்தாள். அவளைக் கண்ட உடனே கமலம் "என்னடீ பங்கஜம், உன்னால் நாளைக்கு கிழக்கிலுதிக்கும் சூரியன் மேற்கில் உதிக்க போரானும்! ஏண்டி இவ்வளவு நாழிகை?" என்றாள். எல்லோரும் குலுங்கக் குலுங்க நகைத்தோம்.

பங்கஜம் "எங்காத்துக்காரர் சில நண்பர்களை டீக்கு அழைத்து விட்டார். அவாள் சீட்டுக்கச்சேரி முடிந்து, டீ அருந்திவிட்டு இப்பொழுதுதான் வீட்டை விட்டு கிளம்பினார்கள். நானும் சமையலுக்கு கொடுத்து விட்டுப் புறப்பட்டு வந்தேன்", என்றாள்.

அதற்குள் ஜலஜம் ஆவலாக: டிபன் என்னடீ செஞ்சிருந்தாய்? நீதான் புதுசு புதுசா செய்யரவளாச்சே?

பங்கஜம்: காரத்துக்கு மசால் தோசையும், ரவை கோழாவடையும் செய்திருந்தேன். தித்திப்புக்கு பாதுஷா பண்ணி இருந்தேன்.

ஜலஜம்: மசால் தோசை எப்படியடீ செய்யரது?

பங்கஜம்: அது செய்வதொன்றும் பிரமாதமான வித்தையில்லை. கேள், சொல்கிறேன். நாம் தோசைமா அரைத்து கொள்வது மாதிரி மூன்று பங்கு அரிசிக்கு ஒரு பங்கு உளுந்து கணக்கில் முதல் நாள் இரவு தோசைமா அரைத்து மூடிவைத்துக் கொள்ளவேண்டும். மசால் தோசைக்கு மாவு ரொம்ப புளித்துப் போகக்கூடாது. மறுநாள் வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லி, எலுமிச்சம்பழ ரசம் எல்லாம் சேர்த்து பொடிமாஸ் (பொடுத்தூள்) செய்து வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காய் துருவலுக்கு இரண்டு பச்சை மிளகாயும், கொத்தமல்லித்தழையும், உப்பு, எலுமிச்சம்பழ ரசம் சேர்த்து துவையல் அரைத்து கடுகு தாளித்து வெண்ணைபோல் துவையல் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். தோசை கல்லில் நெய்விட்டு, கர கர வென்று வெந்தவுடன் தேங்காய் துவையலை மேல்புறம் நன்றாகப் பூசி, அதன்மேல் "கர்ஜிக்காயிக்கு" (சோமாசிக்கு) பூர்ணம் வைப்பதுபோல் உருளைக் கிழங்கு வெங்காயம் சேர்ந்த அந்த பொடுத்தூளை வைத்து மூடி, இன்னு மிரண்டு முட்டை நெய்யை தோசையின் இருபுறமும் விட்டு இரண்டு தரம் திருப்பி, கல்லிலிருந்து எடுத்துவிடவேண்டும். இவ்வளவுதான். தின்பதற்கென்னமோ "கம்" என்று வாசனையாகவும், ருசியாகவுமிருக்கிறது.





அதற்குள் சாரூ: நீ பாதுஷா எப்படிச் செய்கிறாய்? என் ஸ்நேகிதி மைதா மாவைப் பிசைந்து வடைபோல் தட்டி, நெய்யில் பொறித்து, சர்க்கரைப் பாகில் போடு என்றாள். ஒன்றுக்கிரண்டு முறையும் செய்து பார்த்தேன். நன்றாகவே வரவில்லை. கல்லு, கல்லாக ஆய்விட்டது.

பங்கஜம்: மைதாமாவில் செய்தாலே அப்படித்தான் ஆய்விடுகிறது. நான் எப்பொழுதும் பேணிரவையில் தான் செய்வது வழக்கம். பேணிரவையைக் கொஞ்சம் நெய் சேர்த்துக்கொண்டு ஜலம் விட்டு அப்பளமாவாக பிசைந்து மூடிவைத்துவிடவேண்டும். அரைமணி நேரம் பொறுத்து (ரவை நன்றாக ஊறி இருக்குமாதலால்) நன்றாக இடித்துக்கொள்ள வேண்டும். அடுப்பில் அல்லது கரி அடுப்பில் ஏந்தலான, ஈயம் பூசின ஒரு கிண்ணத்தில் அஸ்கா சர்க்கரைப் பாகுவைக்க வேண்டும். இந்த பாகிற்கு ஏலப்பொடி மாத்திரம் போட்டால் போதும், குங்குமப்பூ அவசியமில்லை. பாகுகட்டிப் பாகாக காய்ச்சவேண்டும். ஜிலேபி பாகு போதாது. பாகு காய்வதற்குள், ஒரு தட்டில் நெய்விழுதையும், சிறிது (ஒரு டீஸ்பூன்) அரிசிமாவையும் கலந்து போட்டுக்கொண்டு, ஐந்து நிமிடங்கள் வரைக்கும் நன்றாக உள்ளங்கையால் தேய்க்கவேண்டும். இவ்விதம் தேய்க்க, தேய்க்க நெய்யானது சூட்டினால் கடல் நுரைபோல் வெளேரென்று நுரைத்துக்கொண்டு வந்த பின்பு தேய்ப்பதை நிறுத்தி, (இதை 'சாட்டீ' என்று அழைக்கிறார்கள்) ஓர் கிண்ணத்தில் வழித்தெடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு ரவையை அப்பளமிட்டு, ஒரு அப்பளத்தின் மேல் இந்த "சாட்டீ"யைத் தடவி பின்பு அதன்மேல் ஓர் அப்பளத்தைபோடு. மறுபடியும் அந்த அப்பளத்தின்மேல் 'சாட்டீ' துடைத்து, அதன்மேல் ஓர் அப்பளத்தை போட்டு "சாட்டீ" துடைத்து, மூன்று அப்பளத்தையும் சேர்த்து சிரோட்டிக்கு செய்வது போல் உருட்டவேண்டும். இந்த சுருளை, மூன்று துண்டுகளாக கிள்ளி, அந்த மூன்று துண்டுகளையும் மறுபடியும் உருட்டி மூன்று அப்பளமாக இடவேண்டும். இந்த இரண்டாம் தர அப்பளங்கள் "கொள்ளு அப்பளம்" மாதிரியில் பருமனாக இடவேண்டும். இவ்விதம் தயாரித்த அப்பளங்களை ஓர் Horlicks bottle மூடியாலோ, அல்லது "சஸ்காரபேணி" சக்கரத்தினாலோ அழுத்தி, வட்டமான வில்லைகளாக கத்தரித்து நெய்யில் பொறித்து, தயாராக கீழே இறக்கிவைத்திருக்கும் கட்டிப்பாகில் போடவேண்டும். பாகில் நன்றாக ஊறினதும் நாலாபக்கமும் பாகு நன்றாகப் படும்படி திருப்பிவிட்டுத் தட்டில் எடுத்துவைக்கவும். சற்று நேரம் கழித்து பாகு பாதுஷாவின் நாலாபுறமும் வெளேரென்று உறைந்துகொண்டு பார்ப்பதற்கு நன்றாகவும், தின்பதற்கு ருசியாகவும் இருக்கும். பாகுசற்று இளம் பாகாக இருந்து விட்டால், பாதுஷாவின்மேல் பட்டதும் படாததுமாக, கையில் தொட்டால் "இசுக்பிசுக்" கென்று ஒட்டிக்கொள்ளும்.

"கோவாபாதுஷா நீ செய்வதுண்டோ?" என்றேன் நான்.

பங்கஜம் ஆச்சரியத்துடன் "அதெப்படியடீசெய்வது ஸரோஜா? நான் செய்ததே இல்லையே?" என்றாள்.

நான் : கோவாபாதுஷா, உருளைக் கிழங்கு, வெங்காயம் சேர்த்த பொடிமாஸ் பூரணம் வைத்துச் செய்த காரபாதுஷா எல்லாம் செய்வதுண்டே. கோவா பாதுஷா எல்லாம் ரவைபாதுஷா மாதிரித் தான் செய்வது. ஆனால் முதலில் பால் கோவா (பால் ஆடை) தயாரித்துக் கொள்ளவேண்டும். ஆனால் கோவாவை நெகிழவிடாமல் நன்றாக உதிருதுராகும் வரை காய்ச்சி, கோவா ஆறினதும் அதில் ஏலப்பொடி, பூராசர்க்கரை, ஜலத்தில் ஊறவைத்து, தோல் நீக்கிய பாதாமியை மெல்லியதாகக் கீறி, அந்தத் தூள் எல்லா வற்றையும் சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். பிஸ்தாப்பருப்பையும் பாதாமி கீறுவது போலவே கீறி அந்தத் தூளையும் கோவாவுடன் சேர்த்து பிசரி வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது சாதாபாதுஷா போலவே அப்பளாம் இட்டு இரண்டாம்தர அப்பளாத்தை வில்லை களாகநறுக்கிக்கொண்டு, ஒரு பில்லையின் நடுவில் கோவா பூர்ணம் ஒரு சமசா (Spoon) அளவில் வைத்து, அதன்மேல் ஓர் வில்லையை மூடவேண்டும். பின்பு சுற்றி லும், இரண்டு பில்லையின் ஓரத்தையும், கர் ஜீக்காய்க்கு அழகாக சுருட்டி மடிப்பது போல் மடித்து நெய்யில் பொறித்துச் சர்க் கரைப்பாகில் போட்டு, நான்கு புறமும் சர்க்கரை ஒரேமாதிரி ஊற உரைந்து கொண்டதும் எடுத்து தட்டில் வைக்க வும்.

இவ்விதம் அப்பளாம் இட்டுநறுக்கிய பில்லைமேல் வெங்காயம், உருளைக்கிழங்கு சேர்ந்த பொடுதூளை 'பூர்ண' மாக வைத்து வில்லையின் சுற்றிலும் சேர்த்து நெய்யில் பொறித்து எடுத்து விட்டால் கார பாதுஷா வாகும்.

எல்லோரும் "சொல்லரைச்சையே வாயூர்ரதடி. ஓங்காத்துலே எங்களுக்கு வர ஞாயிற்றுக்கிழமை 'பார்ட்டி' வையடி" என்றார்கள்.

———:o:———



# பண்டரிபுரம்

## திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

இயற்கை யழகை யாபரணமாகக் கொண்ட பம்பாய் இராஜதானியி லுள்ள பலவேறு புண்ணிய க்ஷேத்திரங் களுள் மிகவும் புராதனமானது பாண்டுரங் ஸ்வாமியின் இருப்பிடமாகிய பண்டரீபுர மாகும். இது ஷோல்ஹாபுரத்திற்கு சுமார் ஐம்பதுமைல்கள் தூரத்திலுள்ளது.

நாம் எடுத்திருக்கும் மனித சரீரத்தை புனிதப் படுத்துவதற்கு மார்க்கங்கள் பல. அவைகளுள் அன்பு என்னும் அறிய குணத்தை கடைபிடித்தலும் ஒரு சிறந்த முறையே. நாம் ஒரே மனதுடன் கட வுளிடம் அன்பு கொள்ளும் முறையே 'பக்தி' எனப்படும். பக்தியை யுடையவர் கள் முக்தியைடைவது சுலபமே. நமக்கு நிஜமான பக்தியிருக்கும் பக்ஷத்தில் இக பரசுகங்கள் கிடைக்கின்றன. நமக்கு கட வுளின் அம்சங்களின் மகிமை தெரியுமா யின் எல்லாம் தெரிந்தது போலவே யாகும். நாம் யார்? நாம் இவ்வுலகில் பிறந்ததின் முக்கிய நோக்கம் யாது? இவ்வுலகிலனுபவிக்கும் சுக துக்கங்கள் யாவும் கடவுளது அருளன்றோ? அக் கடவுளின் மகிமையை நன்றாய் அறிந்த ஞானிகள் அபரோக்ஷ ஞானிகள் எனப் படுவர்.

நாம் நற்காரியங்கள் செய்வதிலேயே கண்ணாயிருந்து பரோபகாரம், தானம் தரும முதலியவைகளை சரிவர செய்து வருவோமானால் நமக்குக் கடவுள் கிருபை புரிவார். பக்தியும், தான தருமங்களும் ஆடம்பரத்திற்காக செய்வது தவறு.

ஸ்ரீ கிருஷ்ணனை தன் சுயநலம் கருதி எப்பொழுதும் நினைத்தான் பார்த்தன். ஸ்ரீவாயு பகவானின் தனயனான பீமனோ நிஜபக்தியுடன் யாது செய்தாலும் கண்ண னையே நினைத்த வண்ணம் வேலை செய் வான்.

ஸ்ரீ கிருஷ்ணன் நிஜபக்தியே பரமனைக் கட்டுப்படுத்தும் பாசுபதம் என்பதை நிரூ பிக்க ஒரு யுக்தி செய்தார். அர்ஜுனனை சொப்பனத்தில் வைகுந்தமழைத்துச் சென்றார். அங்கு இருவருக்கும் எதிரில் ஒரு கிழவி அழகிய புஷ்பமுள்ள ஒரு கூடையை எடுத்துவர, கண்ணன் இது என்ன? என்றார். கிழவியும் பார்த்தனை கவனியாதவள் போல் 'இந்திரன் மகன் அர்ஜுனன் கடவுளுக்குப் பூஜை செய்த புஷ்பங்கள்' என்று கூறிச் சென்றாள். சற்று தூரம் செல்ல வண்டி வண்டிகளாய், தேனீக்கள் மொய்க்கும் புஷ்பமாலைகள் வந் தன. 'இவை எங்கிருந்து வருகின்றன' என்று பல்குனன்வினவ வண்டி யோட்டி கள் 'பீமசேனன் பூஜை செய்த நிர்மாலியங் கள் தானிவை' என்றனர். நிர்மாலியங் களே இவ்வளவு அழகுள்ளவைகளா யிருக்க தான் பூஜைசெய்த மலர்கள் அழு கியிருக்கக் காரணம்அறியாத அர்ஜுனன் சகலமுமறிந்த கிருஷ்ணனை நோக்கினான். சியாமள சுவரூபியோ சிரித்த முகமாய் 'பார்த்தா! பீமன் பக்தி நிஜபக்தி. நீ பலனை யுத்தேசித்து பூஜிப்பதாலும் உன் அஹம் பாவத்தாலும் உன்மலர்கள் நன் மலர் கள் ஆகாது' என்றார்.

பக்தியை பலவகைகளில் நாம் கடைப் பிடிக்கலாம். அவைகளில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஆன் றோர் கூறியவாறு நாம் நமது தாய்தந்தை

களை மிகவும் பக்தியுடன்பூஜித்து அவரிட்ட கட்டளைகளை சிரமேற்கொண்டு செய்வோமாகில் அது நமக்கு நன்மையளிக்கும். நம்மை ஈரைந்து மாதங்கள் சுமந்து, பெற்று, வளர்த்து, தாலாட்டிச் சீருட்டி, வளர்க்கவகையின்றி, அவதிக்குட்பட்டு கல்வி முதலியன பயில்வித்து, நல்வழியில் நடக்கும்படி கூறும் தாய் தந்தையர்களின் வார்த்தைகளை மீறலாகாது.

முன் காலத்தில் ஒரு பிராமணன் தன் இல்லாளுடன் பண்டரிபுரத்தில் வசித்து வந்தான். அவனுக்கு மிகவும் வயது முதிர்ந்த தாயும் தகப்பனும் இருந்தனர். அவன் மிகவும் பயபக்தியுடன் தாய் தந்தையரைவிட பெரிய தெய்வம் இல்லை என்று எப்பொழுதும் அவர்களைத் தொழுது வந்தான். அவர்களை எறும்புகூட ஹிம்சிக்காதபடி கட்டில்களில் உயர படுக்க வைத்திருந்தான். சாஸ்திரமுறைப்படி இவன் இப்படி பூஜித்து வந்ததால் அவன் பெயர் பரதகண்டம் முழுதும் பரவி பல இடங்களிலிருந்து ஜனங்கள் இவனைப் பார்க்க வந்தனர்.

இவ்வுலகை நீத்து பரலோகம் சென்ற பலர் தாய் தந்தையரைப் பூஜித்தவனைப் பார்த்ததால் வைகுந்தம் சேர்ந்தனர். ஆகையால் கடவுள் இவனைப் பரீக்ஷிக்க எண்ணி நிஜமோகினியை தூதனுப்பி அவனை மயக்கும்படி செய்யச் சொன்னார். பக்தியாகிய சமுத்திரத்தில் தாய் தந்தையின் சேவையாகிய மரக்கலத்தை யுடையவனுக்கு யாது விசாரம்? மோகினி, கருமமே கண்ணுயுள்ள அவ்வந்தணனை மயக்க சக்தியற்றவளாய், விண்ணுலகுக்குச் சென்று அவன் கீர்த்தியை மற்றும் புகழவே, பகவானே இவனைப் பார்க்க எண்ணி மிகவும் விருத்தாப்பிய ரூபத்துடன் அவ்வந்தணன் இல்லம் புகுந்தார். அப்பொழுது தான் பொழுது புலர்ந்திருந்தது. அந்தணன் தன் தாய்தந்தையரை பல் துலக்கவைத்து நித்திய கர்மானுஷ்டானங்கள் சரிவரச்செய்ய ஏற்பாடு செய்துவந்தான். அப்பொழுது கிழவனுன ஜகன்னுதன் மிகவும் மெலிந்த குரலில் 'அப்பா, உன் தாய் தந்தை சேவைக்குமெச்சி நான் வந்துளேன். நானே மகாவிஷ்ணு' என்ருர். அவனே அருகிலிருந்த ஒரு கல்லைப்போட்டு ஆசனமளித்து தன்வேலையை செய்து வந்தான். அன்று அவன் தாய்தந்தையர் அவனுக்கு வேலை யதிகம் கொடுத்ததால் சாயங்காலம் சுமார் ஆறு மணிக்குத் தான் அவன்வேலை முடிந்தது. பிறகு அந்தணன் சமையல் செய்து மீதியிருந்த ஒரு பிடி சாதத்தை விருந்தினனுக்கு அளிக்கச்செல்ல கடவுள் 'அப்பா உனக்கு சாப்பாடில்லையே, எனக்களித்தால் நீ யாதுசெய்வாய், உன் மனைவி யாதுசெய்வாள்?' என, அவன் மனைவியை யருகிலழைத்தான். மனைவியோ மகா ரூபவதி, குணவதி, சிரித்தமுகத்துடன் 'அதிதி தேவதைக்கு அன்னமளித்தலே நியாயம். எனக்குப் பசியில்லை' என்ருள். கடவுள் பிரத்யக்ஷமாய் யாதுவரம் வேண்டுமென்று வினவ 'என் தாய்தந்தையரை கேட்டுக்கூறுகிறேன்' என்று, உள்சென்று வினவ அவர்களும் 'கடவுளது சந்நிதானம் சதா தங்களுக்கு வேண்டும். அக்கடவுளை ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டும்' என்றனர். அந்தணனும் அவர்களிடம் அழைத்துச்சென்று ஆலிங்கனம் செய்யும்படி சொன்னுன். விஷ்ணுவும் லக்ஷ்மியும் அருகில்நின்று தரிசனம்அளித்து தாய் தந்தையருக்கு தன் அருகில் ஒரு அறிய இடத்தைக் கொடுத்தார். அந்தணனும் திருப்தி யடைந்தான். இன்றும் கடவுள் பண்டரியில் ஒரு கல்லின்மேல் நிற்கிருர்.





பண்டரிபுரத்தை யடுத்த கோபாலபுரம் கோவில்.



விட்டோபர் கோவிலும், அதற்கருகாமையிலுள்ள சந்திரபாக நதியும்.

600 008.
159742



'கோவிலுக்கு'



அக்கடவுளை எல்லாரும் கட்டித் தொழுவார்கள். அழையாமல் வந்ததால் 'விட்டல்' என்ற பெயரிட்டனர். லக்ஷ்மியை 'ரகுமாயி' என்று அழைத்தனர். அவ்வந்தணனும் மனைவியும் கடவுள் சேவை செய்து வந்தனர்.

பண்டரீபுரம் சிறந்த நெசவுத் தொழிலில் பெயர்பெற்ற ஷோல்ஹாபுரியிலிருந்து ஐம்பது மைல் தூரத்தில் இருக்கிறது. தென்னிந்தியாவிலிருந்து பண்டரீபுரம்போகிறவர்கள் குர்துவாடாவிலிறங்கி வண்டிமாற்றவேண்டும். அதைவிட ஷோலாபூரிலிருந்து போவதே சுலபமானது. அநேகம் மோட்டார்கள் இங்கிருந்து செல்கின்றன. போட்டி அதிகமாக இருக்கும் காலங்களில் ஆரணா கட்டணம்கூட வாங்குகிறார்கள். ரோட் மிகவும் நன்றாயிருப்பதால் இரண்டு மணிகளுள் ஷோலாபூரிலிருந்து இத்திவ்விய ஸ்தலத்தையடையலாம்.

நகரமத்தியில் கீர்த்தி பெற்ற விட்டோபாவின் ஆலயம் திகழ்கின்றது. இது மிகவும் புராதனமான கோயில் என்பது அதன் சுவர்களிலுள்ள கல்வெட்டுக்களால் தெரிகிறது. கோயில் உட்புரத்தில் புதிய திருப்பணிகள் சமீபத்தில் நடந்திருக்கின்றன. விட்டோபாவின் விக்கிரஹம் மண்ணால் வெட்டப்பட்டது. இந்த விக்ரஹத்தினழகு கண்கவர்ந்ததாயிருக்கிறது. இதன் மகிமையைப்பற்றி பலகதைகள் இருந்து வருகின்றன. இந்த மூல விக்ரஹத்தை எல்லோரும் தழுவி ஆராதிக்கலாம். மூல விக்ரஹத்தை கட்டித்தழுவி ஆராதிக்கும் வழக்கம் இந்தியாவில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இக்கோவிலுக்கு இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் வருஷம் முழுவதும் யாத்திரீகர்கள் வந்து தரிசித்துச் செல்லுகின்றனர். முக்கியமாய் ஜூலைமாதம் நடக்கும் ஆஷாட உத்ஸவத்துக்கும் நவம்பரில் நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவிற்கும் ஆயிரக்கணக்காக ஜனங்கள் வருகிறார்கள். மஹாராஷ்டிரர்கள் விட்டோபாவை தங்கள் தேசிய தெய்வமாய் கொண்டாடுகிறார்கள்.

கோவிலின் மதிலினருகிலேயே சந்திரபாகநதி ஓடுகின்றது. இதில் ஸ்நானம் செய்தால் சகலபாபங்களும் சூரியனைக்கண்ட பனிபோலத் துலைந்து நாம் பரிசுத்தராகின்றோம். பண்டரீபுரத்திற்கு ஒரு மைல் மேற்கே கோபாலபுரமென்னும் புண்ணிய தீர்த்தமுள்ளது. இங்குபோக தோணிகள் சந்திரபாகநதியில் எப்பொழுதும் தயாராக இருக்கின்றன. இந்த ஊரில்தான் பாண்டுரங்கனின் பக்த சிரோன்மணிகளில் ஒருவரான நாமதேவ் பிறந்து, வளர்ந்து முக்தி பெற்றது. நாமதேவரின் பக்தி மிகவும் பரிசுத்தமானது. ஒரு சமயம் அவர் அளித்த ஆகாரத்தை ஆண்டவன் ஆசையுடன் நேரில் வந்து வாங்கிப் புசித்தாரென அவர் சரித்திரத்தில் கூறுயுள்ளது. நாமதேவரின் பூதஉடலின்மீதே கோயிலுக்குள் செல்லும் படிகள் கட்டப்பட்டதாகச்சொல்லப்படுகிறது.

விட்டோபா, விட்டல், பாண்டுரங்கன் எனவழங்கப்படும் எம்பிரானைத்துதித்து எட்டற்கரியாத மோக்ஷசாம்ராஜ்யத்தை யடைந்தவர்கள் எண்ணலரிது. அவர்களுள் ஒரு சிலர் நாமதேவ், புண்டலிக், துகாராம், கபீர், ஜ்ஞானேஸ்வரர், ஏகநாதர், புரந்தரதாஸ், சக்குபாயாவர். இங்கு ஊதப்படும் வாத்தியங்கள் வெகு விநோதமானவை. அவைகள் நமக்கு ஒரு உத்ஸாகத்தைக்கொடுத்து மிகவும் பக்தி ஏற்படும்படி செய்கின்றன.

பண்டரீபுரம் ரிஷியாஸ்ரமத்திற்கு லாயக்குள்ளது. இங்கு செல்பவர்கள் சந்திரபாகநதியில் ஸ்நானம் செய்து விட்டலை தரிசிப்பாராகில் மிகவும் பரிசுத்தராய் சுகசௌபாக்கியத்துடன் உலகில் உய்வரென்பது உண்மை.

# செய்தித்திரட்டு

## ரோடரி கிளப்

ரோட்டரி கிளப்பில் ஸ்திரீகளை கூட்டங்கத்தினர்களாகவாவது சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வங்காள போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ராய் பகதூர் பி. என். முகர்ஜீ பேசினார். அவர்களைப் பிரதம அங்கத்தினராகச் சேர்ப்பதற்கு தொழில் முறை விதிகள் அனுமதிக்காவிட்டாலும், அங்கத்தினர்களின் மனைவிகள், சகோதரிகள், புத்திரிகள் கூட்டு அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட வேண்டுமென்று இவர் கூறினார்.

... ... ...

## தவளை ரேஸ்

நாம் இதுவரையில் குதிரைப் பந்தயம், சைக்கிள் ரேஸ், ரிக்ஷா ரேஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அமெரிக்காவில் தவளைகளைக்கூட பந்தயத்தில் ஓடப் பயற்சிசெய்து அவைகளுக்கு ஒரு குறித்த சப்தம் கேட்டவுடன் புறப்படப் பழக்கியிருக்கிறார்கள்.

... ... ...

## மழை காலம்

மழை காலத்தில் மனிதர்களுக்கு இயற்கையிலேயே சக்தி சற்றுக் குன்றுகிறதென்றும், அதற்காக பவேரியா தேசத்து ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு முருங்கைக்காய், உருளைக்கிழங்கு முதலிய சத்துள்ள காய்கறிகளை அக்காலத்தில் அடிக்கடி சமைத்து அளிக்கிறார்களாம்.

... ... ...

## கரு சிதைவு

மேனாட்டுப் பெண்கள் பலர் கருத்தரிப்பதை விரும்பவில்லை. எனவே கருவேற்படாமல் இருக்க அவர்கள் பலமுறைகளைக் கையாளுகிறார்கள். மீறிக்கருஉண்டானால் சிதைக்கிறார்கள். இதனால் 1926-33க்குள் சுமார் 3000 ஸ்திரீகள் லண்டனில் கரு சிதைத்ததன்மூலம் உயிர் துறந்திருக்கின்றனர்.

... ... ...

## மந்திரி குமாரி சினிமாவில் நடிக்கிறாள்

லக்ஷ்மணபுரி சர்வகலாசாலையின் (University) உப அத்யக்ஷகராகவும் (Vice-Chancellor), பம்பாய் மாஜிமந்திரியுமாகிய டாக்டர் ஆர். பி. பரஞ்பே அவர்களின் குமாரி ஸ்ரீமதி சகுந்தலா பிரபாத் கம்பெனியார் பிடிக்கும் "கும் கும்" என்ற சமூகப்படத்தில் நடிக்கிறார். தகுந்த சம்பளம் பிரபாத் கம்பெனியார் அவருக்குக் கொடுக்கிறார்கள். ஸ்ரீமதி சகுந்தலா சமீபத்தில் தன்னுடைய ரஷ்ய கணவனிடமிருந்து விவாஹரத்து செய்துகொண்டார். கேம்ப்ரிட்ஜ் கலாசாலையில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றவர். பம்பாய் யுனிவர்ஸிடி பி. எஸ். ஸி. பரீட்சையிலும் முதன்மையாக தேறினவர். சமீபகாலம்வரை சர்வ தேச சங்கக் காரியாலயத்தில் வேலை பார்த்துவந்தார். இரு நாடகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். இலக்கியங்களும் நாடகங்களும் எழுதவேண்டுமென்பதே அவர் அவா.



... ... ...

## ஸ்திரீ சப் ரிஜிஸ்ட்ரார்

திருவாங்கூர் சமஸ்தான சர்க்கார், ஸ்ரீமதி கே. ஜி. பகவதிஅம்மாள், பி. ஏ., அவர்களை ஆக்டிங் சப்ரிஜிஸ்ட்ராராக நடுவங்காட்டுக்கு நியமித்திருக்கிறார்கள். இந்த இலாகாவுக்கு சர்க்கார் ஒரு ஸ்திரீயை நியமிப்பது இதுதான் முதல்தடவை. சர்க்காரின் முற்போக்கான தன்மையை இது எடுத்துக் காட்டுகிறது.

... ... ...

## குறட்டையால் வந்த வினை

பிரிஸ்டல் நகரில் ஒரு நூதன விவாஹரத்து வழக்கு ஏற்பட்டது. ஒரு ஸ்திரீயின் கணவன் தூங்கும் போது சதா பெரிய குறட்டை விட்டுத் தூங்குவான். அதனால் மனைவிக்கும், அவள் புதல்விக்கும் தூக்கம் கெட்டு உடம்புக்கு சுகக்குறைவும் ஏற்பட்டது. குறட்டை விடுவதைத் தடுக்க அப்பெண் எத்தனை உபாயங்களைக் கையாண்டும் பயனில்லை. எனவே ஷை காரணங்களுக்காக விவாஹரத்து வழக்குத்தொடர்ந்தாள். அவள் கோரிக்கைக்கு ஜட்ஜ் இணங்கித் தீர்ப்புக்கொடுத்தார்.

... ... ...

## குமாரி உலின் சல்தானா

தர்மபுரியைச் சார்ந்த குமாரி உலின் சல்தானா என்ற சிறுமி தனது பன்னிரண்டாவது வயதிலேயே எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தகுந்த மார்க்குகள் பெற்று பாஸ் செய்துவிட்டார்கள். விளையும் பயிர் முளையிலேயே தெரிகிறது.

... ... ...

## புடவை ரகம்

புதுமாதிரிப் புடவை ரகம் கண்டு பிடிப்பதில் சாமர்த்தியமுள்ள இந்திய ஸ்திரீ வங்காளத்திலுள்ள ஸ்ரீமதி ரோமல குப்தா ஒருவர்தான் என்று சொல்லப்படுகிறது. ஸ்திரீகளின் உடைகளை எவ்விதம் அழகான விதங்களில் உற்பத்தி செய்யலாம் என்பதே அவரின் பிரதம வேலை.

... ... ...

## விருப்பப்படி குழந்தை

லண்டனிலுள்ள ஹார்லி தெருவிலுள்ள விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர் இருவர் ஒருவித திராவகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்றும், அத்திராவகத்தை உபயோகப்படுத்தினால் தம்பதிகள் விருப்பப்படி ஆண் அல்லது பெண் குழந்தை நிச்சயமாகப் பிறக்கும்படி செய்யலாம் என்றும் ஆசிரியர் ஏ. எம். லோ. என்பவர் தெரிவிக்கிறார். 100க்கு 90 கேஸ்களில் அவர்கள் வெற்றி பெற்று விட்டார்களாம். கூடிய விரைவில் 100க்கு 100 வெற்றி எதிர்பார்க்கிறார்கள்.

... ... ...

## வயது முதிர்ந்த தம்பதிகள்

ஆர்மீனியா தேசத்தில் எரிவான் ஜில்லாவிலுள்ள எர்னத்ஸார் என்ற கிராமத்தில் ரஸ்டம் மாமதாவ் என்பவனும், அவன் மனைவி சாயத் என்பவளும் தான் உலகிலேயே வயது முதிர்ந்த தம்பதிகள் என்று சொல்லப்படுகிறது. அவனுடைய வயது 140. அவள் வயது 116. தாங்கள் இதுவரை சண்டை போட்டுக் கொண்டதில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## 132 வயது விறகு வெட்டி

கொஸோவோ ஜில்லாவில் வெலிகிரிபார் என்ற கிராமத்தில் பாடியன் கோழன் என்ற 132 வயதுடைய ஒருவனிருக்கிறான். அவன் மூத்த புதல்வன் 105 வயதில் இறந்து போனான். அவனுடைய நேர் சந்ததியார் (பேரன் பேத்தி முதலியோர்) 312 பேரிருக்கின்றனர். அவன் இன்றும் நல்ல திடகாத்திரத்துடன் இருக்கிறான். காதுமட்டும் சற்று செவிடு. தினசரி விறகு வெட்டி வேலை செய்கிறான்.

... ... ...

## மந்திரக் கொம்பு

1590ம் வருஷம் 14வது போப் கிரிகரி என்பவருக்கு ஒரு இந்தியக்காண்டா மிருகக்கொம்பு காணிக்கையாகச் செலுத்தப்பட்டது. அதன் மகிமை என்னவென்றால் அது விஷத்தைப் போக்கவல்லது. விஷவாசனையைக் கண்டவுடனேயே அக்கொம்புக்குவேர்த்து விடுமாம். அதற்குமுன் விஷவஸ்துக்களை வைத்தாலும் அது வேர்த்து விடும். பொடி பண்ணி உள்ளுக்குச் சாப்பிட்டால் விஷம் அடிபட்டுப்போய் விடும். இது இப்பொழுது அமெரிக்கா நியூயார்க் நகரில் இருக்கிறது.

... ... ...

## ஒரே தடவையில் 8 குழந்தைகள்

வியன்னாவில் ஒரு சீனத் தொழிலாளியின் மனைவி எட்டுக் குழந்தைகளை ஒரே தடவையில் பெற்றுளாம். அதில் ஏழு ஆண்குழந்தைகள்; ஒன்று பெண். 5 குழந்தைகள், ஆறு குழந்தைகள் பெற்றுக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் எட்டுக் குழந்தைகள் ஒரே சமயத்தில் பெற்றது இது வரையில் ஒருவருமில்லை. எட்டுக் குழந்தைகளும் திடகாத்திர முள்ளவைகளாக இருக்கின்றன.

... ... ...

## பலகுழந்தைகள் பிரசவ கணக்கு

ஒரு ஸ்காட்லந்துதேச ஸ்திரீ 14 தடவை கர்ப்பம் அடைந்தாள். 11 பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகள் பெற்றாள். இன்னொருவள் 44 குழந்தைகள் பெற்றாள். 13 தடவை இரட்டைப் பிள்ளைகளும் 6 தடவை மூன்று பிள்ளைகளையும் சேர்ந்தாப்போல் அவள் பிரசவித்தாள். ஒரு ரஷ்யமாது இருபத்தோருதடவை கர்ப்பந்தரித்து 77 குழந்தைகளைப் பெற்றாள். கோல்ட் கோஸ்ட்டில் வசித்துவரும் ஒரு நீக்ரோ மாது இரண்டாவது பிரசவத்தில் நான்கு குழந்தைகளையும், ஆறாவது பிரசவத்தில் ஆறு குழந்தைகளையும் பெற்றாள். இன்னும் ஆச்சர்யமாக இருக்கிறது வேறொரு ஸ்திரீயின் சமாசாரம். அவள் மொத்தம் 11 தடவை கர்ப்பந்தரித்தாள். ஆனால் மூன்று தடவைகள் இரட்டைக் குழந்தைகளும், 6 தடவை முக்குழந்தைகளும், இருமுறை 4 குழந்தைகளையும் பெற்றாள்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட விகிதாசாரக் கணக்குப்படி பத்து லக்ஷம் பிரசவத்தில் 12,000 இரட்டைக் குழந்தைகளும், 240 முக்குழந்தைகளும், ஒரு நாலு குழந்தையும் பிரசவமாகின்றன என்று தெரிய வருகிறது. 5, 6, குழந்தைகள் ஒரே சமயத்தில் பிறப்பது வெகு அருமை.



## ஸ்திரீ கொள்ளைக்காரிகள்

சமீபத்தில் சைனா தேசத்திலுள்ள சிங்காய் மாகாணத்தில் ஒரே சமயத்தில் 45 கொள்ளைக்கார ஸ்திரீகள் பிடிபட்டார்கள். இவர்களை எவ்விதம் தண்டிக்கலாம் என்பது பற்றி சேனாதிபதி மாபுபங் திகைத்தார். கடைசியில் இவர்களைப் பிடித்த 45 சிப்பாய்களுக்கு அவர்களை தளகர்த்தர் காரியாலயத்திலேயே ஒரே சமயத்தில் மணமுடித்தார். இதை திரளான ஜனங்கள் கூடி வேடிக்கை பார்த்தனர்.

... ... ...

## 119 வயது கிளி

நவநகர் மகாராஜாவிடம் ஒரு கிளி இருக்கிறது. அதன் பெயர் "ஆன்ட் பாப்ஸி" (Aunt Popsy.) அதன் வயது 119 என்று சொல்லப்படுகிறது. அதைக் கூட்டிக்கொண்டு மஹாராஜா லண்டன் தியேட்டருக்குச் சென்று நாடகம் காட்டினாராம். அதற்கு நன்றாகப் பேசவும், பாடவும் தெரியும். நாடகமத்தியில் அது டீ கேட்டதாம்.

... ... ...

## கிழவனை மணந்த குமரன்

சிந்த்வாராவைச் சேர்ந்த ஒரு காண்ட் வகுப்பு யுவன் பெண் வேஷம் தரித்துத் தன்னை ஒரு கன்னி விதவை என்று சொல்லி 55 வயது கிழவன் ஒருவனை மணந்து கொண்டான். மணம் நடந்து 20 நாட்கள்வரை கிழவனிடம் அகப்படாதபடி வீட்டில் இருந்தான். பின் நகை நட்டுகளைச் சுருட்டிக்கொண்டு "பெண்" ஓடி விட்டாள். போலீசார் அவ்வாலிபனை நாகபுரி மாஜிஸ்திரேட்முன் விசாரணைக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

## முட்டையில் பணம்

அமெரிக்காவிலுள்ள டெக்ரோ என்னுமிடத்திலுள்ள ஸ்ரீமதி ஹில்டாமியோன் என்பவளுடைய கோழி முட்டையிட்டது. ஒரு முட்டைக்குள் ஒரு ஷில்லிங்குக்குச் சமமான குவாட்டர் என்ற நாணயமிருந்தது.

... ... ...

## குரங்கு தற்கொலை

இந்தியாவிலிருந்து வெளி நாட்டுக்கு 'நியூயார்க்' என்ற கப்பலில் 275 குரங்குகள் கொண்டு போகப்பட்டன. ஒன்றின் பெயர் "ஹன்னிபல்." அதன் பெண்டாட்டிக் குரங்கு அதை அடிக்கடி துன்புறுத்திக் கடித்தது. ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அதைத் தடுப்பதற்காக ஆண் குரங்கை வேறு கூட்டுக்கு எடுத்துச் சென்றனர். அது பிரிக்கப்பட்டபின் அன்னம் ஆகாரம் உண்ணவில்லை. மறுநாட் காலை கூண்டின் கம்பி இடுக்கில் தலையைக்கொடுத்து ஆண் குரங்கு "தற்கொலை" செய்து கொண்டு இறந்து கிடந்ததாம். ஆண் குரங்கு அடிபட்டுக் கொண்டாவது தன் பெட்டையுடன் பிரியாமல் இருக்குமென்று ஜிபால்மர் என்ற குரங்கு மியூஸியக்காரர் கூறுகிறார்.

... ... ...

## மெஷின் சுருக்கெழுத்தாளர்

கோர்ட்டு விசாரணைகளை இப்பொழுது சுருக்கெழுத்தாளர் பதிவுசெய்து கொள்கிறார்கள். அதை இப்பொழுது புதிய யந்திரம் ஒன்று செய்கிறது. ஒலி பரப்பும் கருவியின் உதவியால் நடவடிக்கை பூராவையும் அது அரக்குப் பலகையில் எழுதிவிடுகிறது.

# ** கதம்பம் ***

## சிகரெட்

மேனாடுகளில் ஸ்திரீகள் ஆண்களைவிட அதிகமாக சிகரெட் பிடிக்கின்றனராம். வியாபாரத்திற்காகவே!

... ... ...

## மணிக்கு 1500 மைல்

கிஷவ்லந்து ராக்கட் ஆராய்ச்சி சங்க நிபுணர் எர்னஸ்ட் லோபல் மணிக்கு 1500 மைல் வேகம் பறந்து செல்லக்கூடிய ராக்கெட் விமானத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இதன் மாதிரி (மாடல்) ஒன்று பாரிஸ் சர்வதேச பொருட் காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. காற்றையும் வெல்லலாம்!

.... .... ....

## ஸ்திரீ விமானி உலக பிரதக்ஷிணம்

பிரபல அமெரிக்க ஸ்திரீ விமானி மிஸ் அமீலியா இயர்ஹார்ட் (மிஸஸ் புட்ணம்) உலகைச்சுற்றி விமானப் பிரதக்ஷிணம் செய்யப் புறப்பட்டு வெற்றிகரமாக தன் பிரயாணத்தை முடித்துவிட்டார். மாதரால் முடியாதது ஒன்றுமில்லை யென்பதற்கிதோர் திருஷ்டாந்தம்.

.... .... ....

## தியாகம்

நவீன துருக்கியின் தந்தையான கெமால் பாஷா தனது சொத்துக்கள் யாவற்றையும் தன் தேசத்துக்கு அர்ப்பணம் செய்து விட்டதாக தேசிய மகா சபைக்கு தெரிவித்து விட்டார். துருக்கி மக்கள் பூராவும் தங்கள் தலைவரைப் போற்றுகின்றனர். அப்பேர்பட்ட சர்க்கார் தலைவரிருந்தால் நாடு ஏன் முன்னுக்கு வராது. நம் நாட்டில்!

.... .... ....

## நல்ல 'பாலிஷ்'

மேஜை, நாற்காலிகளுக்குப் பாலிஷ் கொடுக்க ஒரு பைண்ட் கொதிக்கவைத்த சிறுசணல் விதைத் தைலம் (linseed oil) அரைபைண்ட் டர்பன்டைன், கால் பைண்ட் புளிக்காடி (vinegar) மூன்றையும் கலந்து அந்த திராவகத்தைப் பூசினால் அவைகள் வெகு பிரகாசமாயிருக்கும். ஏன் பிறரையும், பிறர்பொருளையும் எதிர்பார்க்கவேண்டும்?

... ... ...

## 17வித ரோஜா புஷ்பம்

பாடலீபுரத்தில் திரு. பட்டாசார்ஜி என்ற வங்க தாவரசாஸ்திர நிபுணர் பலவித ரோஜாமலர்களைப் பயிர் செய்வது பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். அதன் பயனாய் அவர் 17 வகையில் ரோஜா உண்டாக்கலாம் என்று கண்டிருக்கிறார். புதிய தினுசுகளில் ஒன்றுக்கு பீஹார் கவர்னர் ஹாலட் பெயரிட்டிருக்கிறார். வேறு இரண்டு ரகங்களுக்கு ஸ்ரீராம கிருஷ்ண, விவேகானந்தா என்று நாமம் சூட்டியிருக்கிறார்.

... .... ....

## கணவன் பக்கத்திலிருக்க!

வங்காளத்தில் ஒரு ஸ்திரீ விநோதமான காரியம் செய்ததாகத் தெரிகிறது. அவள்



கணவன் கல்கத்தாவில் வேலை பார்த்து வந்தான். ஆனால் அவளைக் கிராமத்திலேயே விட்டு விட்டு இருந்தான். அவளுக்குத் தன் கணவனுடன் வாழவேண்டுமென்ற ஆசை. தன் உடம்பில் சில காயங்களை உண்டாக்கினாள். கல்கத்தா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குக் கொண்டு வரப்பட்டாள். ஆஸ்பத்திரியிலும் அவள் சர்மத்தில் புதிய கொப்பளங்கள் தோன்றின. அவளைச் சோதனை செய்ததில் ஒரு டப்பாவில் சோடாவும், சுண்ணாம்பும் இருந்தன. அவைகளை எச்சியில் கலந்து உடலில் தடவியே புண்களை வரவழைத்துக்கொண்டாளாம். இல்லாவிட்டால் கிராமத்துக்கு அனுப்பி விடுவார்கள் என்ற பயம். பாவம்!

... ... ...

## 3150 பவுன் ஆடு

ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் ஒரு ஆடு 3150 பவுனுக்கு விற்கப்பட்டது. இதன் ரோமம் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாம். அருமையான கம்பளி செய்வதற்கு உபயோகப்படுமாதலால்தான் அதற்கு அவ்வளவு விலையாம்.

... ... ...

## சாதாரண குடும்ப ஸ்திரீயை மணந்த இளவரசர்

லிப்பி (நெதர்லண்டு தேசத்திற்கருகிலுள்ள ஒரு தனி ராஜ்யம்) ராஜ்யத்தைச் சேர்ந்த நான்காவது லியாபால்டு இளவரசரின் மூத்த குமாரரான எர்னஸ்ட் லியபால்டு இளவரசர் இரண்டாவது முறையாக ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மங்கையை விவாகம் செய்து கொண்டிருக்கிறார். ஹெர்தா வீலண்டு எனப்பெயர்கொண்ட அம்மங்கைக்கு 25 வயதாகிறது. அவள் பெர்லினிலுள்ள ஒரு துணிக்கடையில் தலைமை அதிகாரியாக இருந்தவள். இவ்விவாகத்திற்கு மணமகளின் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் வரவில்லை. எர்னஸ்ட் லியபால்டு இளவரசர் தமது முதல் மனைவியுடன் விவாகரத்து செய்து கொண்டுவிட்டார். அவருக்கு 35 வயதாகிறது.

... ... ...

## புஷ்பம்

உலகிலுள்ள புஷ்பரகங்களில் நூற்றுக்குப் பத்து வகைகள் தான் வாசனையுள்ளவைகளாய் இருக்கின்றன.

... ... ...

## பூச்சிகள்

சிறு பூச்சிகள் காற்றில் பஞ்சாய்ப்பறக்கின்றன. அவற்றைக்காற்றின் வேகம் பதினெட்டாயிரம் அடி உயரம்வரை தூக்கிச் செல்லுகிறதாம்.

... ... ...

## மிளகு.

மிளகு நாம் தினசரி உபயோகப்படுத்தும் காரவஸ்து. அதை உலகம் பூராவும் எல்லாமக்களும் பலவிதங்களில் உபயோகித்து வருகின்றனர். வருஷத்துக்கு 40,000 டன் மிளகு செலவாகிறதாம்.

... ... ...

## கலர் ரோட்

இங்கிலாந்தில் இப்பொழுது ரஸ்தாக்கள் புதுமுறையில் அமைக்கப்படுகின்றன. அவைகளிலே வெள்ளை, மஞ்சள் முதலிய கலர்கள் பூசப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட வேகம்தான் போகலாம் என்பது அதன் நோக்கம்.

# சினிமா குறிப்புகள்

## தேசீய படம்

காங்கிரஸ் இயக்கசம்பந்தமான ஒரு சினிமாப்படத்தைக் காங்கிரஸ் தலைவரின் நேர்முகமான மேற்பார்வையில் எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் அநேகமாய் பூர்த்தியடைந்து விட்டன. நடிகர், நடிகைகள் படித்த கௌரவகுடும்பத்தைச் சார்ந்த அமெச்சூர்கள். சென்னை ஸ்டூடியோக்களில் ஒன்றில்தான் படம் எடுக்கப்படும்.

## நவீன நிருபமா

திரு. ரெயினால்ட்ஸ் எழுதிய ஒரு நாவலை யொட்டிய "நவீன நிருபமா" என்ற தமிழ்படத்தை மைசூர் சவுண்டு ஸ்டூடியோஸ் லிமிடெட் தயாரித்து வருகிறார்கள். கூடிய விரைவில் வெள்ளித்திரையில் காணலாம்.

## ஜோதி பிலிம்ஸ், திருச்சி

மேற்படி கம்பெனியாரின் "அருணகிரி நாதர்" முடிவடைந்து விட்டது. அவர்கள் அப்பூதி அடிகள், ராமலிங்க ஸ்வாமிகள் சரிதங்களை தமிழ் சினிமாப்படமெடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள்.

## மீனாக்ஷி சினிடோன்

இக்கம் பெனியார் "ராஜசேகரன்" என்ற சமூகப்படத்தைத் தமிழில் எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். இப்படம் சென்னை ஸ்ரீனிவாச ஸினி டோனில் தயாராகும்.

## ரெனஸான்ஸ் தியேட்டர்ஸ்

சென்னையில் நாடகக்கலையின் புனருத்தாரணத்துக்காக இருந்து வரும் மேற்படி தியேட்டர்ஸார் ஜலஜா, பெருமை (Glory) என்ற இரு சமூகப்படங்களைப் பிடிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஜலஜா ஒரு நாட்டியக்காரியின் கதை. இதில் சிறந்த நாட்டியப்பெண்ணான பானுமதி முக்கிய நடிகர். பெருமை (Glory) ஹரிஜனப் பிரச்சினை சம்பந்தமான கதை. இதில் ஒரு ஹரிஜனப்பெண் ஒரு பிராமணரைக் காதலித்துப்பின் இருவருக்கும் மணம் நடைபெறுகிறது. இதில் வரலக்ஷ்மி பிரதமநடிகை. திரு ஜி. கே. சேஷகிரி கதாநாயகனாக நடிக்கிறார். இதர அமெச்சூர் நடிகர்களும் உண்டு. பம்பாய் சாகர் மூவிடோனில் படம் எடுக்கப்படும்.

## ராம்னிக்லால் மோகன்லால் லிமிடெட்

இக்கம்பெனியார் "மின்னல் கொடி" என்றபடத்தையும், அது முடிந்தபின் "கோயம்புத்தூர் பெண்" என்ற கதையும் எடுப்பார்கள் என்று தெரியவருகிறது. இக்கம் பெனியாரின் "தஞ்சாவூர் ரௌடி" எடுத்தாய் விட்டது. கூடிய விரைவில் பல ஊர்களிலும் காண்பிக்கப் படும்.

## ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்

இவர்கள் பெஜவாடாவில் ஒருகிளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அடுத்த சமூகப் படத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

## ஒலிம்பிக் பிக்சர்ஸ்

இவர்களுடைய "மைனர் ராஜாமணி" என்றபடத்தின் ஒத்திகைகள் ஆரம்பமாய் விட்டன. ராஜாசாண்டோ இப்படத்தை டைரக்ட் செய்வார் என்று தெரிய வருகிறது.

# ஆசிரியர் குறிப்புகள்

## விண்ட்சர் விவாஹம்

விண்ட்சர் கோமகன் (மாஜி மன்னர் எட்வர்ட்) ஜூன் மாதம் மூன்றாம் தேதி வாலிஸ் வார்பீல்டை (மிஸஸ் சிம்ஸனை) திருமணம் செய்துகொண்டார். காதலுக்கு முன் கனல், கடல், காற்று யாதும் நிற்க முடியாதென நம் பெரியோர் கூறியிருக்கின்றனர். இந்தக் கலியுகத்தில் "சூரியனே அஸ்தமிக்காத" ஒரு பெரிய சாம்ராஜ்ய மகுடம் தன் காதல் முன் துரும்புக்கொப்பு என நிரூபித்த மன்னன் எட்வர்டின் தியாகத்தையும், தைர்யத்தையும் மெச்சிப்புகழாதவர் யாருமில்லையெனக்கூறலாம்.

இதை யொட்டி ஒரு விருந்தளித்த தூத்துக்குடி ஸ்ரீ கே. கே. ஏ. பெரியசாமி நாடார், எம். எல். ஸி., "விண்டஸர் கோமகன் ஒரு பெரிய தியாகி. காதல் பரிசுத்தமானதென்று உலகத்துக்கு நிரூபித்தவர். தான் ராஜாதிராஜனாயிருந்தும் சாதாரண ஓர் பெண்மணியை விவாஹம் செய்து காதலுக்கு இணை ஒன்று மில்லை என்பதை உலகத்துக்கு நிரூபித்துவிட்டார். இது மட்டுமல்ல. உயர்வு தாழ்வு மானிடர்களுக்குள்ளிருக்கக் கூடாதென்பதற்கு இவரது கல்யாணம் ஒரு சரியான உதாரணம். இது போற்றற்குரியதாகும்," என்று கூறியிருப்பது எல்லோரும் கவனிக்கற்பாலது. பெண்ணுலகின் கௌரவத்தை நிலைநாட்டிய எட்வர்ட் மன்னரும், அவரது உயிர்த்துணைவி வார்பீல்டும் நீண்ட ஆயுளுடனும், தேகதிடகாத்திரத்துடனும், புத்திர பௌத்திர சகல சம்பத்துக்களுடனும் காதலுக்கோர் விளக்காய் பிரகாசித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல பராசக்தியை பிரார்த்திக்கிறோம்.

... ... ...

## மத வித்யாசம்

லாகூர் ஹிந்தி மிடில் ஸ்கூல் மன்னர் மகுடாபிஷேகத்தைக் கொண்டாடியது. அப்பள்ளிக்கூடம் பெண்கள் பாடசாலை. அதன் தலைமை உபாத்தியாயினி ஒரு இந்திய கிறிஸ்தவர். அவர் சிறுமிகளுக்கு மிட்டாய்கள் வழங்கினார். அப்பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாக இருந்த ஹிந்து ஸ்த்ரீ, தலைமை உபாத்தியாயினி கிறிஸ்தவரானதால் அவர் கொடுத்ததை தானும் ஹிந்துப் பெண்களும் வாங்கி உண்ணக்கூடாதென்றும், அவர் தின்பண்டங்கள் வழங்கக்கூடாதென்றும் சொன்னார். இருவருக்கும் வார்த்தை வளர்ந்து பின் கைகலந்து கொண்டார்கள். மேலதிகாரிகளுக்கும் விஷயம் தெரிந்தது.

இருவரும் கற்றவர்கள். ஸ்திரீகளுக்கு பரந்த நோக்கத்தைப் போதிக்க நியமிக்கப்பட்ட ஒரு உபாத்தியாயினி இதுபோல் சிறுமிகளுக்குமுன் மத வித்யாசம் பாராட்டிச் சண்டையிட்டு விஷயத்தை மிகவும் கேவலமாக்கியது வருந்தத்தக்கது. படித்தவர்களிடையும் பிறஜாதியினர் அல்லது மதத்தினர் தொட்ட பொருளை வாங்கித் தின்னக்கூடாதென்ற எண்ண

மிருப்பது ஆச்சர்யமே. சுத்தமான மனமும், உடலும் உள்ள எவர் கையிலும் வாங்கிச் சாப்பிட ஆட்சேபனை செய்வது அர்த்தமற்றது. இவ்வித மனப்பான்மையை அடியோடு அகற்ற வேண்டியது கல்வி பயின்ற நம் சகோதரிகளின் முக்கிய கடமையாகும். தாங்கள் மட்டும் கல்வியின் பயனை அடைந்து சும்மாயிராமல் சகோதரிகள் இது போன்ற மூட பழக்கவழக்கங்களை நம் மக்களிடமிருந்து துரத்தத் தங்களாலான சேவை செய்யக் கோருகிறோம்.

... ... ...

## ஜமீன்தார்கள் மஹாநாட்டுத்தலைவி

குடகு ஜமீன்தார்கள் மகாநாடு மங்களூரில் ஜூன் மாதம் நடைபெற்றது. அதற்கு ஸ்ரீமதி கிருஷ்ணபாய் பஞ்சீகர் தலைமை வகித்தார். அவரது தலைமைப் பிரசங்கத்தில் திருமதி கிருஷ்ணபாய், ஜமீந்தார்கள் தங்கள் குடிகள், தொழிலாளர்கள் முன்னேற்ற விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துமாறும், அவர்களுக்கு கஷ்டம் விளைவிக்கக்கூடாதென்றும் எடுத்துக்கூறியிருப்பது ஒவ்வொரு ஜமீன்தாரும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயமாகும். தவிர அவர் குடகுக்கு அரசியல் சுதந்திரம் வேண்டுமென்றும், தீண்டாமை, மதுவிலக்கு, சுதேசி முதலிய பொதுச் சேவைகளில் ஜமீந்தார்கள் போதிய பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், உயர்தர உத்தியோகங்களுக்கு இந்தியர்களை நியமிக்க வேண்டுமென்றும், பொதுவாக தேச முன்னேற்றத்துக்குகந்த வேலைகளைச் செய்யுமாறும் ஸ்ரீமதி கிருஷ்ணபாய் கூறியிருப்பது போற்றத்தக்கது.

குடகு ஜமீந்தார்கள் தங்கள் மகாநாட்டுக்கு ஸ்ரீமதி கிருஷ்ணபாயை தலைவராக தேர்ந்து எடுத்தது ஸ்திரீகளை அவர்கள் நன்கு கௌரவிக்கிறார்களென்பதைக் காட்டுகிறது. அதற்காக நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். அந்தப் பதவியை வெகு கௌரவத்துடன் வகித்த அவ்வம்மையாரும் நம் புகழ்ச்சிக்குரியவர்களே. இதேபோல் மற்ற நிலச்சுவான்தார்களும் தங்கள் மஹாநாடுகளுக்குத் தகுந்த மாதர்களைத் தலைவராகத் தெரிந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

... ... ...

## மைசூர் விதவா விவாஹ மசோதா

ஹிந்து விதவைகளின் மறுமணத்துக்குச்சட்டப்படியுள்ள தடைகளை நீக்கி அம்மணத்தை சட்டப்படி அங்கீகாரம் செய்யும் நோக்கத்துடன் 1856ம் வருஷ 15வது இந்திய சட்டத்தைப்போல் (Widow Remarriage Act) மைசூர் ஜனப்பிரதிநிதி சபையில் (Mysore Legislative Assembly) 1936ம் வருஷம் திரு. கே. டி. பாஷ்யம் ஒரு மசோதா கொண்டு வந்தார். இது அனுமதி அளிக்கிறதே தவிர ஒருவரையும் கட்டாயப்படுத்தவில்லை. விரும்பும் விதவைகள் மணம் செய்து கொள்ள உரிமையளிக்கிறது. இதன் அடிப்படையான நோக்கங்களை ஜனப்பிரதிநிதி சபை அங்கீகரித்துவிட்டது. அது சட்டமாக உயர்தரசபையில் ஆலோசனைக்கு வரும். மேற்படி சபையாரும் இந்த மிதமான மசோதாவை யாதொரு ஆட்சேபனையுமின்றி நிறைவேற்றிவைப்பார்கள் என்று நம்புகிறோம். பிரிட்டிஷ் இந்தியாவைவிட மைசூர் போன்ற சில சமஸ்தானங்கள் இம்மாதிரியான சமூக சீர்திருத்த விஷயங்களில் பின்னணியில் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். திருவாங்கூர் மஹாராஜாவைப் பின்பற்றி இதர சமஸ்தானாதிபதிகளும் காலவேறுபாடுகளையும், உலக மாறுதல்களையும் உணர்ந்து அவசியமான மாறுதல்களை தாங்களே செய்ய முன் வருவதே நன்மை பயக்கும். மைசூர் சர்க்காரும் மேற்படி மசோதாவை மனப்பூர்வமாய் ஆதரிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.



# பஞ்சாங்கம்


| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ஞு ஜூலைமீ ஈசுவரஞு ஆனி - ஆடிமீ. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| ஜூலை 1 | ஆனி 18 | வியா | ஸப் 3-26, உப 56-3, உட் 32-43, திரிலோசனபூஜா. |
| 2 | 19 | வெ | நவ 54-24, ரே 30-6, தி 1-24, கலிக்காமர். |
| 3 | 20 | சனி | தச 48-16, அசு 26-18, தி 16-56, ரா 16-34. |
| 4 | 21 | ஞாய | ஏகா 41-16, பர 21-38, ரா 17-0, கிருத்தி. ஏகாதசி. |
| 5 | 22 | திங் | துவா 33-37, * 16-8, ரா 20-20, பிரதோஷம். |
| 6 | 23 | செவ் | திர 25-36, ரோ 10-16, தி 22-51, சிவராத்திரி. [வாசை |
| 7 | 24 | புத | சசி 17-29, மிரு 4-14, உப 54-10, தி 23-12 ஆனி அமா |
| 8 | 25 | வியா | ● 9-44, புந 53-12, தி 25-48. |
| 9 | 26 | வெ | பிர 2-38, உப 53-55, பூச 48-55, தி 11-46 |
| 10 | 27 | சனி | திரி 51-53, ஆயி 45-55, தி 19-19, மாறநேரிநம்பி. |
| 11 | 28 | ஞாய | சது 48-46, மக 44-38, தி 15-21, மாணிக்கவாசகர். |
| 12 | 29 | திங் | பஞ் 47-37, பூர 45-12, தி 4-49, ஸ்கந்தபஞ்சமி. |
| 13 | 30 | செவ் | ஷஷ் 48-26, உத் 47-42, தி 3-57, ஆனித் திருமஞ்சனம், குமார ஷஷ்டி. [ஸப்தமி. |
| 14 | 31 | புத | ஸப் 51-10, ஹஸ் 52-3, தி 10-13, மித்ர வைவஸ்வத |
| 15 | 32 | வியா | அஷ் 55-33, சித் 58-1, தி 14-2, கடக ரவி 44-26. |
| 16 | ஆடி 1 | வெ | நவ 60-0, ஸ்வா 60-0, தி 13-39, திருதினஸ்பிருக். |
| 17 | 2 | சனி | நவ 1-11, ஸ்வா 5-2, தி 20-49, சாகவிரதம், கரிநாள். |
| 18 | 3 | ஞாய | தச 7-18, விசா 12-43, தி 24-0, சாக்ஷுஸமனு. |
| 19 | 4 | திங் | ஏகா 13-36, அநு 20-24, ரா 4-23, ஸர்வைகாதசி. |
| 20 | 5 | செவ் | துவா 19-28, கேட் 27-36, ரா 18-2, பிரதோஷம். |
| 21 | 6 | புத | திர 24-26, மூல 33-56 தி 29-34. |
| 22 | 7 | வியா | சசி 28-19, பூரா 39-5, சே 4-0, சதுர்த்தசி திதி. |
| 23 | 8 | வெ | ○ 30-49, உரா 43-0, தி 0-18, ரா 21-50, கஜேந்திர |
| 24 | 9 | சனி | பிர 32-5, ஸ்ரீவ 45-43, ரா 24-23. மோக்ஷம். |
| 25 | 10 | ஞாய | துவி 32-8, அவி 47-17, அசூன்யசயனவிரதம், கரிநாள். |
| 26 | 11 | திங் | திரி 31-7, சத 47-46, தி 5-26, திருதியா திதி. |
| 27 | 12 | செவ் | சது 29-7, பூட் 47-21, தி 3-40, சதுர்த்தி திதி. |
| 28 | 13 | புத | பஞ் 26-16, உட் 46-5, தி 10-51, பஞ்சமி திதி. |
| 29 | 14 | வியா | ஷஷ் 22-35, ரே 44-5, தி 15-5 திதிதுவயம். |
| 30 | 15 | வெ | ஸப் 18-9, அசு 41-25, ரா 0-22, அஷ்டமி திதி. |
| 31 | 16 | சனி | அஷ் 13-11, பர 38-8, தி 4-6, அவிதவாநவமி. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்க்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி௴ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்௴ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. K. N. Kesari at the Lodhra Press, Egmore, Madras.


## பிரகாசம் ரோல்ட் கோல்ட் நகைகள்

பத்து வருஷம் உத்தரவாதம்

மலிவானது! நீடித்துழைப்பது!!

நிறம் மாருது!!!

நீங்கள் மலிவாக பேரம்செய்து பணம் சேமிக்க விரும்புகிறீர்களா?

"அணிவதற்கு அழகு, மங்கையரையும், மதலைகளையும் மாண்புறச் செய்வது."

சிகப்பு, பச்சை, நீலம், வானவில் கலர் சின்தெடிக் கற்கள் இழைக்கப்பட்ட பிரகாசம் கல் சங்கிலியை வாங்குங்கள். ஒரு கலர் அல்லது இரு கலர் அல்லது பல கலர் கற்கள் பதித்த சங்கிலிகள் உங்கள் தேவைக்குத் தகுந்தபடி செய்து தருகிறோம்.

எங்களிடம் பலரக வளையல்கள் கழுத்துச் சங்கிலிகள், ஒட்டியாணம் முதலியன கிடைக்கும்.

(1937-ம் வருஷத்திய கேட்லாக் இனம்.)

**ஆர். எஸ். பிரகாசம் & கோ.,**

அலாய் கோல்ட் நகை வியாபாரிகள்,

187, சைனு பஜார் ரோட், மதருஸ்.

## சௌந்தரிய அபிவிருத்திக்கு

### குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிற முடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத் தைலத்தை தினத்திற் கொரு முறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும்.

புட்டி 1க்கு விலை அணு 12.

### கேஸரி போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழகாகவும் இருக்கும். இந்துதேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனை யுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும்.

புட்டி 1க்கு விலை அணு 4.

கேஸரி குடீரம், எழும்பூர், மதருஸ்.

## க்ஷீ ர ப லா

**(101 தடவை பாகம் செய்யப்பட்டது)**

**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**

எல்லாவித வாத நோய்களேயும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.

அவுன்ஸ் 1க்கு 3 8 0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னே.**

Trade Mark

Regd. No. 1983

விலே தோடு சைஸ்
கமலம் ஒன்றுக்கு
அணு எட்டு

விலே பேசரி சைஸ்
கமலம் ஒன்றுக்கு
அணு ஆறு

ஒரிஜினல்

**கல்ச்சர் வைரங்கள்**

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனம்!

சொ. அருணுசலம் செட்டி,
மு. ராமசாமி செட்டி,
ஷரூப்பு வியாபாரம், திருச்சினப்பள்ளி.




உங்கள் சர்மத்தை அழகாக வைத்துக் கொள்ளுங்கள்.

**வேப் சோப்**
(மர்கோஸா.)

**கேரளா**
**சோப் இன்ஸ்டிடியூட்,**
கள்ளிக்கோட்டை.







**சுவை மிகுந்த**

**உண்டிகள்—பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—
உல்லாசமான இடம்—நல்ல காற்ரேட்டம்
முதல் தரமான வசதி.

# சாஸ்திரி
# ஹோட்டல்


**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



## டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கணச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**




# ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கபஜுரம் முதலிய எல்லா வித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்திசெய்வதில் முதன்மையானது

# அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த 25 வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணநிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றனர்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.


ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| இதன் விலை | 6 அவுன்ஸ் | புட்டி | ரூ. 2 8 0 |
| ,, | 3 | ,, | ,, 1 8 0 |
| ,, | 1 | ,, | ,, 0 8 0 |

**கேஸரி குடீரம் - எழும்பூர் - மதராஸ்**

REGD. No. M. [illegible]

# QUEEN OF TONICS





2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |